கல்கி

KALKI 17.9.2000
ரூ. 5.00




பெண்கள்
விரும்பும்
பேரழகுப் பட்டுச்
சேலைகள் !
பெல்காம்
சார்தா பட்டுச்
சேலைகள் !
Sharda
SAREES
சார்தா சேலைகளின்
புதிய படைப்பு
எல்லா பிரபல ஜவுளி
கடைகளிலும் மற்றும்
வெளிநாடுகளிலும் கிடைக்கும்.

# இலவசம்! இலவசம்! இலவசம்!

## கல்கி
வாசகர்களுக்கு

# ஒலிம்பிக் ஹாக்கி போட்டி



# டிக்கெட் இலவசம்!

பார்க்க : பக்கம் – 96

கல்கி இண்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com ஈ மெயில் : kalkiweekly@vsnl.com

**போ**தும் என்று முடிவெடுத்து விட்டது மத்திய அரசு. இனி அரசு செலவில் எந்தத் தலைவருக்கும் புதுடெல்லியில் சமாதி அமைக்கப்படமாட்டாது. தலைநகர வி.ஐ.பி. யார் இறந்தாலும் சமாதி கோரிக்கை எழுப்பப்படுவதும் அரசு தவிப்பதுமாக உள்ள ஊசலாடும் நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கவே இந்த முடிவு.

இந்தத் தீர்மானத்திற்கு மக்கள் ஆதரவு எந்த அளவு இருக்கிறது? ஒரு வெள்ளோட்டமாக காந்தி சமாதிக்கு விசிட் செய்த சிலரது வாயைக் கிளறினோம்.

**ராஜன்** : "தலைவர்கள் சமாதி என்றால் ஏதோ சின்னதாகவா கட்டுகிறார்கள்? இருக்கவே இடமில்லாமல் குடிசைவாழ் மக்கள் நாடு முழுவதும் அவஸ்தைபட்டுக் கொண்டிருக்க, அடுத்தடுத்து பிரும்மாண்டமான சமாதிகளை எழுப்புவது தேவையில்லாத செயல். அரசின் நிலம், வரிப் பணம் இப்படி ஏன் வீணாக வேண்டும்? தேவை என்று பட்டால் சம்பந்தப்பட்ட கட்சிகளே அவர்களுடைய இடத்தில் இதைக் கட்டுவதுதான் முறை. சொல்லப் போனால் நம் தலைவர்கள் எல்லாம், "அரசின் செலவில் எனக்குச் சமாதி கட்டக் கூடாது'' என்று அறிவிப்பதே நியாயம் எனத் தோன்றுகிறது.''



• சிச்சாகோ




• பார்வ

**சிச்சாகோ**
*(ஜப்பானிலிருந்து வந்த சுற்றுலாப் பயணி)*

"எங்கள் நாட்டில் அரசர்களுக்குப் பெரிய சமாதி எழுப்புவது வழக்கம்தான். ஆனால் அவர்களது உறவினர்கள் மட்டும்தான் குறிப்பிட்ட நாட்களில் சென்று அங்கு வணங்கி வழிபடுவார்கள். அரசியல்வாதிகளுக்கு நாங்கள் சமாதிகள் கட்டுவதில்லை. இங்கு மகாத்மா காந்திக்கு சமமாக வேறு சில அரசியல் தலைவர்களுக்கும் சமாதி அமைத்துள்ளது வியப்பாக இருக்கிறது.''

**பார்வதி** : "என்ன இப்படிக் கேட்டுட்டீங்க! சமாதிகளும் நினைவகங்களும் நிச்சயம் தேவை. வருங்காலத் தலைமுறையினர் நிகழ்காலத் தலைவர்களைப் பற்றி அறிந்து கொள்ள இதைவிட நல்ல வழி இருக்கா என்ன? இப்படி எதையாவது பார்த்தால் இவர் யாருன்னு



"டீ.வி., வயலென்ஸைத் தூண்டி விடுது அப்படீங்கறது நிஜம்தாண்டா!''
"எப்படிச் சொல்றே?''
"எப்ப டீ.வி.யை ஆன் பண்ணினாலும் எங்க அப்பா என்னை அடி பின்னுறார்!''
— இ.கு



"உன் சட்டைப் பையில எத்தனை ரூபா இருக்குன்னு உன்னால உடனே சொல்ல முடியுமா?''
"முடியாது.''
"ஏன் முடியாது?''
"சொன்னா, நீ கடன் கேட்பே!''
— பர்வதவர்த்தினி



• ராஜ்காட்



• நவீன்

# சமாதிகளுக்குச் சமாதி கட்டுங்கள்!



• ராஜன்

பசங்க கேட்பாங்க. நாமும் சொல்லலாம்.''

**நவீன்** : ''தலை சிறந்த தலைவர்களுக்கு சமாதி எழுப்புவது தவறில்லை என்பதை ஒரு வாதத்துக்காக ஒப்புக் கொண்டாலும் யார் தகுதியுள்ளவர் என்பதை எப்படி நிர்ணயிப்பது? முன்பு போல் சுயநலமில்லாத தலைவர்கள் இப்போது எங்கே இருக்கிறார்கள்? வோட்டுக்காகவும் பதவிக்காகவும் யாருடைய காலை வேண்டுமானாலும் பிடிக்கத் தயாராக இருக்கும் இழிவான நபர்கள்தானே இப்போதைய பெரும்பாலான தலைவர்கள். அப்படிப் பார்த்தால் காலப் போக்கில் உங்கள் ஊர் கடத்தல் வீரப்பன் இறந்தால், அவனுக்குக்கூட அரசு செலவில் சமாதி எழுப்பணும்னு சில தலைவர்கள் சொல்லலாமே! நல்லவேளை டெல்லியைப் பொறுத்தவரையாவது அந்த வழி அடைப்பட்டு விட்டது. உங்கள் மாநிலத்திலும் இப்படி ஒரு முடிவெடுத்தால்தான் மெரினா கடற்கரை தப்பும்!

— குல்லூ

படங்கள்: ஸ்ரீஹரி




• புற்றுநோய் தடுக்க யோசனைகள்





# காலேஜ்

● சென்னையில் 20 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் ஒரு மருத்துவக் கண்காட்சி. கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியின் 700 மாணவர்களும் ஒன்று சேர்ந்து 'மெடி. எக்ஸ்போ 2000 கே.எம்.ஸி' என்ற கண்காட்சியை அவர்களது கல்லூரி வளாகத்திலேயே நடத்துகிறார்கள், ஆகஸ்ட் 30ஆம் தேதியிலிருந்து 15 நாட்களுக்கு.



● 'உடல் ஆரோக்கியம் பற்றிய விழிப்புணர்வை அதிகப்படுத்துவதே எங்களது நோக்கம்' என்கிறார்கள் உற்சாகமாக.



● ஒவ்வொரு மருத்துவப் பிரிவைப் பற்றியும் எக்ஸிபிட்டுகள், மாடல்கள், சார்ட்டுகள் மூலம் அவர்களே அருகில் இருந்து விளக்குகிறார்கள்.

● 50வது நூற்றாண்டில் மனிதன் எப்படி இருப்பான் என்பதை அனுமானித்து 'ஸைபார்கு' என்று ஒரு மாடலை உருவாக்கி இருக்கிறார்கள். "மூளைக்கு பதிலாக காம்பாக்ட் டிஸ்குகள் தான் இருக்கும்; கண்களுக்குப் பதிலாக சென்ஸார்கள் பொருத்தப்பட்டிருக்கும்; ஆயுளை நிர்ணயிக்கப்போவது 'சிம்' கார்டுகள்தான், ஒவ்வொரு மனிதனும் எத்தனை வருடத்திற்கு வாழ விரும்புகிறானோ அதற்கேற்ப 'சிம்' கார்டுகளை வாங்கிப் பொருத்திக் கொள்ள வேண்டியதுதான், சாப்பாடு என்கிற

• நுழைவாயில்








• மாணவர்கள்



• ஹெல்த் செக்-அப்


# ஹாபி

விஷயமே இருக்காது; எத்தனை கேலரி உண வுச் சத்து வேண்டுமோ, அத்தனை மாத் திரைகளைப் போட்டுக் கொள்ள வேண் டியதுதான்; அது வும் வாய் வழியாக இல்லை - வயிற்றி லேயே ஒரு ஜிப் இருக்கும்; அதே போல் மூச்சு விடு வதற்கு மூக்கு இருக் காது- ஆக்ஸிஜன் மாஸ்குகள்தான்!" என் கிறார் ஹவுஸ் சர்ஜனாக இருக்கும் ஆல்ஃபிரெட்.




"இதெல்லாம் உங்கள் கற்பனையா?" என்று சாவகாசமாகக் கேட்டோம். "ஐயய்யோ! இது கற்பனை இல்லை, இந்த மனிதனை உருவாக்க ஏற்கெனவே ஆராய்ச்சிகள் தொடங்கிவிட்டன, இன்டர்நெட்டைப் பாருங்கள்" என்கிறார்.


● வெறும் 100 ரூபாய்க்கு, பார்வையாளர்கள் முழு ஹெல்த் செக்-அப் செய்து கொள்கிறார்கள். ஈ.சி.ஜிக்கும் ரத்தப் பிரிவை தெரிந்து கொள்ளவும் பத்தே ரூபாய். பெண்கள் பாப்ஸ் மியர் டெஸ்ட் செய்து கொள்ள 25 ரூபாய்.



● தினசரி மாலை 6 மணிக்கு வெவ்வேறு மருத்துவ பிரிவு சம்பந்தப்பட்ட பிரச்னைகளைப் பற்றி அந்த அந்த பிரிவைச் சேர்ந்த வல்லுனர்கள் பேசுகிறார்கள்.



● டயாபடீஸ் பற்றியும் ஆர்த்ரைடிஸ் பற்றியும் தான் மக்கள் அதிகமாக சந்தேகங்கள் கேட்கிறார்களாம்.




● பொழுது

# கோகுலம்

அக்டோபர் 2000



## என் குழந்தைப் பருவம்

— 'நக்கீரன்' கோபால்




- **சுறா மீன்கள்**
  — சுவையான தகவல்கள்
- **கூடு விட்டுக் கூடு பாய்ந்தவன்!**
  — நகைச்சுவைக் கதை
- **எல்லா உயிரினங்களுக்கும் மூளை உண்டா?**

**புதிர் உலகம், படக்கதைகள், துணுக்குகள் இன்னும் பல...**


100 பேருக்கு ஜாமெட்ரி பாக்ஸ் பரிசு!

ரூ.6/- மட்டுமே


கோகுலம் முழுமையான சிறுவர் மாத இதழ்


போக்கு அம்சத்திற்கு 'ஸ்கெலிடன் டான்ஸ்' என்று ஒரு ஷோ தினசரி நடைபெறுகிறது. குழந்தைகளுக்கான விளையாட்டுச் சாதனங்களும் உண்டு.



● கல்லூரியின் டீன் திரு. கே. ராஜகோபால் பூரிப்பாகச் சொல்லுகிறார் 'தினசரி 10,000 குழந்தைகளை வெவ்வேறு பள்ளிகள் அழைத்து வருகிறார்கள்; ஒரு முழுரவுண்டு வருவதற்கு ஒரு நபருக்கு நான்கு மணி நேரம் ஆகிறது; எப்படி சமாளிப்பது என்றே தெரியவில்லை!''



● ''13.5 லட்சப் ரூபாய் செலவாயிருக்கிறது; மருந்து கம்பெனிகள் உட்பட பல தொழில் நிறுவனங்கள் ஸ்டால்கள் அமைத்து எங்கள் வருமானத்திற்கு வழி செய்திருக்கிறார்கள் என்றாலும் பட்ஜெட்டில் துண்டு விழாமல் இல்லை'' கவலையோடு சொன்னவர் மூன்றாம் ஆண்டு மாணவர் பிரதாப்.



● படிப்பையும் பரீட்சைகளையும் கவனித்துக் கொண்டே 10 மாத காலம் உழைத்திருக்கும் மாணவர்களை ஊக்குவிக்க குறைந்த பட்சம் கண்காட்சியைப் பார்த்து விட்டு வருவோமே?

தொகுப்பு: **கிச்சு**
படங்கள்: **யோகா**

## பாதுகாப்பான முதலீடு - நிலையான வருமானம்

# பவர்ஃபைனான்ஸ்

## தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்

நடத்தும்

**உள்ளூர் காசோலை ஏற்றுக்கொள்ளப்படும்**

## டெபாசிட் திரட்டும் முகாம்

**டெல்லி**

**டெல்லி தமிழ் சங்கம்**
**தமிழ் சங்கம் மார்க், செக்டார்-5, R.K.புரம்,**
**புதுடெல்லி - 110 022.**
**தொலைபேசி : 6193964 / 6193966**
**நாள் : 21, 22 & 23 செப்டம்பர், 2000**
**நேரம் : காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை**

# 12.12%

12 மாதங்களுக்கு காலாண்டு வட்டி 10.59%
24 மாதங்களுக்கு காலாண்டு வட்டி 11.10%
36, 48, 60 மாதங்களுக்கு மாதத்திற்கு 12.00%,
காலாண்டிற்கு 12.12%.

# 16.34%

60 மாதங்களுக்கு
(மாதாந்திர கூட்டுவட்டி
ஆண்டிற்கு 12.00%)

**விண்ணப்ப படிவங்கள் கீழ்க்கண்ட கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும் :**

● **பாண்டிச்சேரி** : 28, ஜவஹர்லால் நேரு தெரு. ● **பெங்களூர்** : 109, காந்தி பஜார், பசவன்குடி; 315, கே. காமராஜ் ரோடு; ஹோட்டல் மயூரா பில்டிங், டேங்க் பண்டு ரோடு; 30, 9வது மெயின் ரோடு, ஜெயநகர்; V பிளாக், ராஜாஜி நகர்; 2947, ராஜாஜி நகர் II ஸ்டேஜ். ● **மும்பை** : மகாலக்ஷ்மி, 64, டாக்டர் டி.என். ரோடு; 78, ஹீராபாக், M.D.S. மார்க், செம்பூர்; 356, பந்தர்கேஷ் ரோடு, மாதுங்கா; 2, வால்சந்த் ஹீராசந்த் மார்க், ஃபோர்ட்; ● **அகமதாபாத்** : பஞ்சராபோல், அம்பாவாடி. ● **எர்ணாகுளம்** : பள்ளிமுக்கு; சண்முகம் ரோடு; ● **திருவனந்தபுரம்** : கிழக்கு ஃபோர்ட்; M.G. ரோடு. ● **ஹைதராபாத்** : அபிட்ஸ் ரோடு; சார்மினார் X ரோடு; நாம்பல்லி. ● **செகந்திராபாத்** : ஸ்டேஷன் ரோடு ● **புது தில்லி** : கரோல்பாக்; இர்வின் ரோடு; நேரு பிளேஸ்; ஜனக்புரி; 22-பி, கான் மார்க்கெட்.

*மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் :*

**தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும்**
**அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (பவர்ஃபின்)**
(தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்)
பதிவு அலுவலகம் : எண் 84, டிடிகே சாலை, ஆழ்வார்ப்பேட்டை, சென்னை - 600 018.
தொலைபேசி : 4997689, 4995648. ஃபேக்ஸ் : 044-4982894.

28-9-99 தேதியிட்ட எகனாமிக் டைம்ஸ் இதழில் வெளியிடப்பட்ட முந்தைய விளம்பரத்தின் தொடர்ச்சியாக இந்த விளம்பரம் வெளியிடப்படுகிறது.

*"Also available on the Internet" www.tn.gov.in www.chennaionline.com www.aaraamthinai.com www.southindia.com*



'ஓல்டு மேன் வித் ஜியூஜ் விங்ஸ்' - ஸ்பானிஷ் எழுத்தாளர் மார்கோஸ் எழுதிய கதை. கொலம்பியாவில் நோபல் பரிசு பெற்ற கதை.

'பெரிய சிறகுடைய கிழவன்.' தமிழ் டப்பிங் பட டைட்டில் மாதிரி இருக்கிறதே என்று பார்க்கிறீர்களா? அதுதான் இல்லை. மார்கோஸின் கதை இப்படி பெயரிடப்பட்டு தெருக்கூத்தாக தயாரிக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல. கொலம்பியாவின் ஐந்தாவது உலக நாடக விழாவில் இந்தக் கூத்து அரங்கேற்றப்பட்டு இருக்கிறது. லத்தீன் அமெரிக்க மக்களின் ஒருமுகப் பாராட்டைப் பெற்று நாடு முழுவதும் பதினைந்திற்கும் அதிகமான இடங்களில் நடத்தப்பட்டு கொலம்பியாவையே ஒரு கலக்கு கலக்கியிருக்கிறது. தயாரித்தவர்கள் யார்?

புரிசை கண்ணப்ப தம்பிரானின் கூத்து மன்றத்தினர்.

புரிசை?

செய்யாறிலிருந்து வந்தவாசி நோக்கிச் சென்றால் பேருந்தில் அரை மணி நேரப் பயணம்.

கிராமத்திற்குள் நுழைந்த உடனேயே ஆட்டோவில் கட்டப்பட்ட ஒலிப்பெருக்கியின் அறிவிப்பு தான் நம்மை வரவேற்கிறது.

"பேரன்பு கொண்ட பெரியோர்களே, தாய்மார்களே, நாடக கலா ரசிகப் பெருமக்களே! புரிசை கண்ணப்ப தம்பிரான் பரம்பரை கூத்து மன்றத்தின் புதிய தயாரிப்பான 'சூர்ப்பனகை சபதம்' இன்று இரவு ஒன்பது மணிக்கு அரங்கேற்றம் செய்யப்பட உள்ளது... விடிய விடிய நடைபெற இருக்கும் இந்தப் புத்தம்புது தெருக்கூத்தைக் கண்டு களிக்க உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்!"

"அதோ அதுதான் கண்ணப்ப தம்பிரான் வீடு" என்று ஒரு கிராமத்துவாசி நமக்கு அடையாளம் காட்டுகிறார்.

வீட்டை அடைந்ததும் சாய்வு நாற்காலியிலிருந்து மெள்ள எழுந்து அமர்கிறார் கண்ணப்ப தம்பிரான். கூத்துக்காக மத்திய சங்கீத நாடக அகாடெமியின் விருது பெற்றிருக்கும் இவரது முகத்தில் சாதனைக் களைப்பு!

"இந்த புரிசைக் கூத்து பழமையான கிராமியக் கலை. பழமை என்று சொல்லும் போது இதன் வயது குறைந்தது ஐந்நூறு வருடமாவது இருக்கும். சந்தேகம் இல்லை. இது ஒரு தென்னிந்திய கலை. அதனால் கதகளி, பரதம், கிராமிய நடனம் ஆகியவற்றின் பாதிப்பு இதில் இருக்கும். பரத நாட்டியத்தைப்போல் இதில் முத்திரை இல்லாவிட்டாலும் பாத வேலைப்பாடு உண்டு. உணர்ச்சிமாறுதல்களும் முக்கியம். கூத்துப் பாடல்கள் அனைத்தும் கர்நாடக இசையை அடிப்படையாகக் கொண்டவை. கதை சுலபத்தில் புரிய வேண்டும் என்பதற்காக வசனப் பகுதிகளும் உண்டு.

# ஜனிமாஜால் கூத்துக்கூடம்



• சூர்ப்பனகை சபதம்



• சம்பந்தம்

முகத்தில் உணர்ச்சிகளைக் கூட்டிக் காட்ட கலைஞர்களுக்குப் பல வண்ணங்களில் ஒப்பனை செய்யப்படுகிறது. ஆடை அலங்காரமும் பிரத்தியேகமாக இருக்

# பெரிய அடி!

கும்" என்று புரிசைக் கூத்தின் அம்சங்களை நமக்கு புரியவைக்கிறார் அவர்.

தஞ்சை, மதுரைப் பகுதி கூத்து நாடகங்களுக்கும் புரிசைக் கூத்திற்கும் ஒரு மிகப் பெரிய வித்தியாசம் உண்டாம். "பாண்ட், சட்டை அணிந்த பஃபூன்தான் புரிசைக் கூத்திலும் கட்டியக்காரன் என்றாலும் கூத்துடன் தொடர்பில்லாத விரசமான ஜோக்குகளைச் சொல்வது, கூட்டம் கூட்டுவதற்காக சினிமாப் பாடல்களுக்குப் பெண்களை டான்ஸ் ஆடச் சொல்வது என்பதெல்லாம் எங்கள் கூத்தில் அறவே கிடையாது!" என்கிறார் பெருமையாக.

"வயசாகிப் போனதால் வேஷம் கட்டுவதை நிறுத்திக் கொண்டு விட்டேன். என் மகன்கள் சம்பந்தம், காசி, மற்றும் என் உறவினன் புரிசை சுப்பிரமணியமும்தான் முழு நேரக் கலைஞர்களாக இந்த பரம்பரைக் கலையைக் காப்பாற்றி வருகிறார்கள்" என்று சொல்லும் இந்தப் பெரியவருக்கு வயது எண்பத்தைந்து.

இரவு அரங்கேற்றம் நடைபெற இருக்கும் 'சூர்ப்பனகை சபதம்' கூத்திற்கான ஒத்திகை வீட்டு முற்றத்தின் நிலா வெளிச்சத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்க, பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்த சம்பந்தம் நம்மிடம் பேசுகிறார், இடையிடையே.

"புதிதாக தயாரித்த கூத்து எதுவானாலும் அதைப் புரிசையில்தான் அரங்கேற்றம் செய்வோம்; எங்களை அடையாளம் காட்டிய மண்ணல்லவா?" என்று சொல்லும்போது குரல் தழுதழுக்கிறது.

**மா**லை மயங்கி மெள்ள இருள் பரவுகிறது. புது தயாரிப்பு



• கண்ணப்ப தம்பிரான்

என்கிற பயம் கொஞ்சம் கூட இல்லாமல் கலைஞர்கள் பேசிச் சிரித்தபடி ஆடை ஆபரண பொருட்களை எடுத்துக் கொண்டு கூத்துக்களம் நோக்கி நடக்கிறார்கள். நாமும் சேர்ந்து கொள்கிறோம்.

சின்ன மேடை. அதில் பின்னணியாக ஒரு நீலத்திரை. "புரிசை கண்ணப்ப தம்பிரான் பரம்பரை கூத்து மன்றம்" என்ற அறிவிப்புடன் ஒரு பேனர். மைக்கோ, மின் விளக்கோ எதுவுமில்லை. மேடையின் இருபுறமும் இரண்டு பெட்ரோமாக்ஸ் விளக்குகள் இளமஞ்சள் நிற ஒளியை உமிழ்ந்து கொண்டிருக்கின்றன.

இரவு எட்டு மணி ஆனதும் மேடைக்குக் கீழே இருந்த சிறுதுணி மறைப்பில் கலைஞர்கள் ஒப்பனை செய்து கொள்ள தயாராகிறார்கள். கண்ணப்ப தம்பிரான் ஒவ்வொரு கலைஞரின் நெற்றியிலும் பொட்டு வைத்துக் கொண்டே நம்மிடம் பேசுகிறார்: "இதை நாங்க 'முகம் எழுதுதல்' என்று சொல்கிறோம்; ஒருத்தருக்கு முகம் எழுத குறைந்தது ஒரு மணி நேரம் ஆகும்; பங்கேற்கும் கலைஞர்களே ஒருவருக்கு ஒருவர் முகம் எழுதுவார்கள். இதற்கு, முன்பெல்லாம் மருதாணி மூலிகைச்சாறுகளைப் பயன்படுத்தி வந்தோம். இப்போது எல்லாம் பான்கேக் வாட்டர் கலர் தான்; இதைத் தவிர மார் பதக்கம், கிளி, கிரீடம் போன்ற நிறைய அலங்காரப் பொருட்களைப் பயன்படுத்துவோம்; அவற்றை எல்லாம் நாங்களே செய்து கொள்வதுதான் வழக்கம். கல்யாண முருங்கை போன்ற எடைகுறைவான மரத்திலிருந்து இதற்கு உபயோகப்படுத்துவோம்."

> ● சரியானது எது என்று உணர்ந்த பிறகும் அதைச் செய்யாமல் இருப்பது தான் மிகப்பெரிய கோழைத்தனம்.
> – கன்பூசியஸ்
> தொகுப்பு: பா. குணா

இதற்குள் இரவு ஒன்பதரை மணி ஆகிவிடுகிறது. பக்கத்து ஊர்களிலிருந்தும் உள்ளூரிலிருந்தும் ஜனங்கள் கோரைப்பாய் சகிதம் கூத்துக் களத்தில் ஆஜராகி விடுகிறார்கள்.

கூத்து தொடங்குகிறது. ஆர்மோனியம், முகவீணை, மிருதங்கம், கஞ்சிரா வாசிக்கும் நால்வரும் மேடையின் ஒரு ஓரத்தில் அமர்ந்து கொண்டு வாத்தியங்களை இசைக்கிறார்கள். சிறிது நேரத்தில் மேடையில் பஃபூன் தோன்றுகிறார். பார்வையாளர்கள் நிமிர்ந்து உட்காருகிறார்கள். தன் நா வன்மையால் சிறிது நேரம் சிரிக்க வைத்த பஃபூன், திடீரென்று ராவணன் வருகையை அறிவித்துவிட்டு ஓடிவிடுகிறார். அடுத்து மேடையில் தோன்றும் ராவணனின் முகத்தைத் திரை வைத்து மறைத்துப் பிடித்தபடி இரண்டு பேர் வருகிறார்கள். பார்வையாளர்கள் முகத்தில் சஸ்பென்ஸ் ரேகைகள் ஓடுகின்றன. திரைக்குப் பின்னால் மறைந்தபடி பாடிய ராவணன் பாத்திரம் திரையை விலக்கி முகத்தைக் காட்ட நாடகம் சூடு பிடிக்கிறது. சிலர் படுத்துக் கொண்டு பார்க்கிறார்கள். கூத்துக் கலைஞர்களின் கணீர் குரல் வசனமும், பாட்டும், கண் அயர நினைக்கும் பார்வையாளரைக்கூட தடுத்து நிறுத்துகிறது... இடையிடையே கலைஞர்களின் நடிப்பைப் பாராட்டி பத்து ரூபாய் ஐந்து ரூபாய் பரிசுகளை ரசிகர்கள் அளிக்க, ஒலிப் பெருக்கியில் பரிசு கொடுத்தவர்களின் பெயர் அறிவிக்கப்படுகிறது. காலை ஆறு மணிக்கு, கதிரவன் மெல்ல எட்டிப் பார்க்க, கூத்தின் க்ளைமாக்ஸ் தொடர்கிறது.

முழு கூத்தையும் பார்த்த பிறகே ரசிகர்கள் புறப்பட்டுப் போகிறார்கள். புரிசைக் கூத்தினை அந்த ஊரிலேயே பார்த்துவிட்ட மகிழ்ச்சியோடு நாம் புறப்பட தயாராகிறோம்.

சம்பந்தம் நம்மோடு கைகுலுக்கியபடி பேசுகிறார்.

"சென்ற நூற்றாண்டில் சினிமாவால் ஏற்பட்ட பாதிப்பில் பெரிய சரிவை சந்தித்த கிராமியக் கலைகளில் கூத்துக்குத்தான் பெரிய அடி. எங்களுக்குப் பிறகு குழந்தைகள் யாரும் இதுக்கு வரமாட்டோம் என்று அடம் பிடிக்கிறார்கள். ஆனால் எங்களுக்கு ஊதியமாக மாதம் மூவாயிரம் ரூபாய் வழங்க இப்போதுதான் உத்தரவு பிறப்பித்திருக்கிறது மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை. இது போன்ற அரசு தரப்பிலிருந்து கிடைக்கும் ஆதரவுகளை வைத்து கூத்தை அடுத்த தலைமுறைக்கு எப்படியாவது எடுத்துச் சென்றுவிட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறோம்!" என்கிறார்.

இதைச் சொல்லும்போது இவர் கண்களில் பளபளக்கும் வெளிச்சம். 'நிச்சயம் செய்வார்' என்ற நம்பிக்கையை நமக்குத் தருகிறது.

சந்திப்பு: **ஜெயன்**
படம்: **வெங்கடேஷ்**

சுவையோ அற்புதம், தரமோ உன்னதம்



# Manna™



## QUALITY FOOD PRODUCTS





### Manna Health Mix

குடும்பம் முழுமைக்குமான MANNA HEALTH MIX சமச்சீரான இயற்கைசத்துக்கள் நிறைந்தது. காலை உணவுக்கான மிகச்சிறந்த சக்தி நிறைந்தது. கடலை, பச்சை பயறு, வெள்ளை சோளம், மக்காசோளம், கம்பு, முளைவிட்ட ராகி, சிகப்பு அரிசி, ஜவ்வரிசி, சம்பா கோதுமை, சோயாபீன்ஸ் மற்றும் பல தானியங்கள் நிறைந்த MANNA HEALTH MIX குடும்ப ஆரோக்கியத்திற்கு மிகச்சிறந்தது.

### Manna வின் தரமான தயாரிப்புகள்





• முளைவிட்ட ராகி மாவு • கோதுமை இடியாப்பம் மாவு
• புட்டு மாவு • இட்லி . தோசை மாவு
• அரிசி உப்புமா ரவா • கடலை மாவு • அரிசி மாவு
• இடியாப்பம் மாவு • சிகப்பு புட்டு மாவு
• முறுக்கு மாவு • உளுந்து மாவு • பஜ்ஜி மிக்ஸ்
ஸ்பெஷல் கஞ்சி கிட் (வறுக்கப்பட்டது)

**500 gms, 200 gms packed also available**

visit us at webindia.com/triwin



**இல்லங்கள்தோறும் இன்பம் பொங்க தரமான Manna உபயோகிப்பீர்**



**TRIWIN FOOD PRODUCTS**

55, 'Y' Block, 8th Street, Anna Nagar, Chennai 600 040. (Near Ayyappan Temple)
Tel : 6205783, 6205778, 6283991, 6286620. Fax : 6205780.
Grams : "TREWINCO" e.mail : triwin@md3.vsnl.net.in

காலை உணவுக்கும் மாலை உணவுக்கும் ஏற்றது

# எனக்குப்

"என்ன தான் சினிமா, ஷூட்டிங் அவுட்டோர் என்று இரவு பகலாக பிஸியாக இருந்தாலும் கம்ப்யூட்டருக்கும் இன்டர்நெட்டிற்கும் நேரம் ஒதுக்காமலா இருப்பார்கள், நமது முன்னணி ஹீரோக்கள்? "உங்களுக்குப் பிடித்த வெப்ஸைட் பற்றிச் சொல்லுங்கள்!" என்றோம் சிலரிடம். அவர்கள் சொன்ன பதில்கள் இதோ!

**அஜீத்** : யாஹூவுடைய பாலிவுட் ஸைட்டுகளை விரும்பிப் பார்ப்பேன். மீடியா ஸைட்ஸும் பிடிக்கும். தினசரி நியூஸ் அப்டேட் பார்க்காமல் தூங்கமாட்டேன். நான் அடிக்கடி பார்க்கும் இன்னொரு ஸைட் www.formula1.com. சர்வதேச அளவில் நடைபெறும் மோட்டார் ஸ்போர்ட்ஸ் பற்றிய செய்திகள், நடந்து முடிந்த ரேஸ்களின் விஷுவல்ஸ், ரேஸ் டெக்னிக்குகள் பற்றிய விஷயங்கள் என்று முழுக்க முழுக்க இது மோட்டார் ஸ்போர்ட்ஸ் பற்றிய வெப்ஸைட்!

மற்றபடி எனது கணக்கு வழக்குகள் எல்லாவற்றையும் கம்ப்யூட்டர்தான் பார்த்துக் கொள்கிறது. இதற்காக 'டேலி 5.4' என்ற அக்கௌண்டிங் சாஃப்ட்வேரைப் பயன்படுத்துகிறேன். இதனால் எனது ஆடிட்டருக்கும் எனக்கும் 99 சதவீதம் தலைவலி மிச்சம்.

ஷூட்டிங் ஸ்பாட்டிற்கு என்னுடைய 'லேப்டாப்'ஐக் கொண்டுபோய் விடுகிறேன். இடைவேளைகளில் அதுதான் நமக்கு தோஸ்த்!

இப்போது மொபைல் ஃபோன் மூலம் ஈமெயில் வசதி வந்து விட்டதால் மஜாதான்!

**சூர்யா** : அமெரிக்காவுக்கு மேல் படிப்பிற்காகச் சென்றிருக்கும் தம்பிதான் வீட்டில் கம்ப்யூட்டரை எப்போது பார்த்தாலும் நோண்டிக் கொண்டிருப்பான். நான் பத்தாவது படிக்கும்போது 'பேசிக்ஸ்' என்ற ஒரு கம்ப்யூட்டர் கோர்ஸ் செய்ததுதான். அதற்குப் பிறகு கம்ப்யூட்டர் பக்கமே அதிகம் போனதில்லை.

ஆனால் அவன் ஊருக்குக் கிளம்பிச் சென்றவுடன் தனிமை உறுத்திய போது ஈமெயில் தான் கை கொடுத்தது. 'யாஹூ மெசஞ்சர்' மூலம் இருவரும் ஆன்லைன் சாட்டிங் பண்ணத் தொடங்கினோம். ஒரே அறையில் இருந்துகொண்டு வம்படிக்கும் திருப்தி கிடைக்க ஆரம்பித்தது.

'ஈமெயில் சாட்டிங்'ல் ஏற்பட்ட பிறகுதான் இன்டர்நெட்டில் கொஞ்சம் கொஞ்சமாக ஆர்வம் வந்தது. நிறைய வெப்ஸைட்டுகளைப் பார்க்கத் தொடங்கினேன்.

லேட்டஸ்ட் ஃபேஷன் பற்றித் தெரிந்து கொள்ள gab.comஐ அடிக்கடி விஜயம் செய்வதுண்டு. புகழ்பெற்ற ஹாலிவுட் நட்சத்திரங்களின் கேரியர் ப்ரொஃபைல்களை பயபக்தியோடு பார்ப்பேன் - அவர்களது சாதனை வாழ்க்கையிலிருந்து ஏதாவது உருப்படியாகக் கற்றுக் கொள்ளலாமே என்கிற முயற்சிதான்.

**விஜய்** : கம்ப்யூட்டரை எல்லோரும் எவ்வளவோ உருப்படியான விஷயங்களுக்குப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் நான் எதற்குத் தெரியுமா அதிகமாகப் பயன்படுத்துகிறேன்?.. கேம்ஸ் விளையாட! ராஜா ராணி கதை, கடற்கொள்ளை, கௌபாய் கதைகள் போன்ற கிளாசிகல் கேம்ஸ் ரொம்பப் பிடிக்கும். இன்டர்நெட்டிலும் கேம்ஸ் ஸைட்டுகளுக்குத் தான் போவேன்.



ஆனால் இப்போது கொஞ்சம்

# பிடித்த வெப்ஸைட்







பரவாயில்லை. அறுபதுகளில்' வந்த அமெரிக்கப் படங்களை சிடியில் போட்டுப் பார்க்கிறேன்.

**மனோஜ்** : தினசரி இன்டர்நெட் சர்ஃபிங் செய்யும் பழக்கமில்லை. வாரத்திற்கு ஒரு தடவை அல்லது மாதத்திற்கு இரண்டு தடவைகள் தான் இன்டர்நெட் பக்கம் போவேன்.

hollywood.com பார்ப்பது வழக்கம். ஆனால் அந்த வெப்ஸைட் அப்டேட் செய்யப்படாமல் அப்படியே இருக்கிறது. புதிதாக வெளிவர இருக்கும் ஹாலிவுட் படங்களின் வெப்ஸைட்டுகளுக்குச் சென்று படத்தைப் பற்றிய சுவாரஸ்யமான தகவல்களைத் தெரிந்து கொள்ளப் பிடிக்கும். (இதேபோல், வெளிவர இருக்கும் தமிழ்ப் படங்களுக்கும் தற்காலிக வெப்ஸைட்டுக்களை அமைத்தால் என்ன?)

filmfestival.com எனக்குப் பிடித்த இன்னொரு வெப்ஸைட்!

சந்திப்பு : **ஜெயன்**

திருச்சி மாநகரில், பாலக்கரை காவல் நிலையம் எதிரில் உள்ளது ராமகிருஷ்ணா காபி ஹவுஸ். இங்கு கிடைக்கும் சுக்கு மல்லி காபி திருச்சி முழுவதும் பிரபலம். தரமான, சுகாதாரமான சுக்கு மல்லி காபி கிடைப்பது இரண்டு ரூபாய்க்கு.

நாற்பதாண்டுகளாக இயங்கி வரும் இந்தச் சிற்றுண்டிச் சாலையை நடத்தி வருபவர் வெ. ராமராவ். வயது 64. கண்டிப்பும், அதே நேரத்தில் வாடிக்கையாளர் நலன் மீது அக்கறையும் கொண்டவர். கடைக்கு உள்ளேயும், வெளியேயும் சுவரில் அவர் எழுதி வைத்துள்ள வாசகங்களே சாட்சிகளாய் அமைந்துள்ளன.

★ காபி, டீ அதிகமாகக் குடித்தால் பசியைக் கெடுக்கும். ஒரு நாளைக்கு 2, 3 காபி, டீ போதுமே. காபி, டீக்குப் பதிலாக சுக்கு மல்லி காபி, பால் சாப்பிடலாம்.



# (சுக்கு) காபி சாப்பிடலையா காபி!

★ காலையில் முதலில் இட்லி, இடியாப்பம், புட்டு போன்ற ஆவியில் வெந்த பொருள்களைச் சாப்பிடலாம். சாப்பாட்டில் உப்பு, காரம், புளிப்பு, செயற்கைத் தித்திப்பு இவைகளைக் குறைக்கலாம். துவர்ப்பு (வாழைப்பூ, வாழைத்தண்டு), கசப்பு (வெந்தயம், சுண்டவத்தல், பாகற்காய்) போன்றவற்றைச் சேர்க்கலாம்.

★ தினமும் இரண்டு வாழைப் பழங்கள் சாப்பிட்டு வந்தால் புற்று நோய் வராது. அதிகமான சத்துள்ளது மொந்தன், நேந்திரன், ரொபஸ்டா, பூவன் ஆகியன.

★ உணவுப் பொருள்களை வீணாக்காதீர்கள், சாப்பாட்டில் இருக்கின்ற மிளகு, இஞ்சி, கறிவேப்பிலை, காய்கறிகள் இவற்றை ஒதுக்கிவிடாமல் சாப்பிடுவது மிகவும் நல்லது.



★ சர்க்கரை வியாதி, ஆஸ்த்துமா வராமல் இருக்கவும், வந்து விட்டால் அதிலிருந்து நிரந்தர நிவாரணம் பெறவும் யோகாசனம் உதவும்.

இந்திராகாந்தி சுடப் பட்டு இறந்து விட்டார்கள்; நகரமெங்கும் கடையடைப்பு; போக்குவரத்து இல்லை; பால் வரவில்லை; குழந்தைகள் முதல் முதியோர்கள் வரை உள்ள எளிய மக்களுக்



• ராமராவ்; கடையில்

குக் குடிப்பதற்கு காபித் தண்ணிகூட என்னால் தர முடியாமல் போயிற்று; அன்று ஆரம்பமானது தான் இந்தச் சுக்கு மல்லி காபி; போர்டில் இருக்கும் பெயரைச் சொன்னால் திருச்சி டவுனில் பல பேருக்குத் தெரியாது. 'சுக்கு மல்லி காபிக் கடை' என்று சொன்னால்தான் அடையாளம் தெரியும்!" என்று கூறுகிறார் இதன் நிறுவனரும், உரிமையாளருமான வெ. ராமராவ்.

கையலம்பும் இடத்தில் ஒரு கரும்பலகை சுவரில் தொங்குகின்றது. வாடிக்கையாளர்கள் மறந்து வைத்து விட்டுப் போகும் பொருட்களின் பட்டியல் எழுதி வைக்கப்பட்டுள்ளது. உரியவர் வந்து அடையாளம் சொல்லிப் பொருட்களைத் திரும்ப வந்து பெற்றுச் செல்வதற்காக! பேனா, புத்தகம், கைப்பை, குடை போன்ற பொருட்கள் மட்டுமல்லாமல் செருப்புகளும் அந்தக் கரும் பலகையில் சிறப்பான இடம் பெறுவது உண்டாம்!

— ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு


**PAY NO INCOME TAX UPTO Rs.1,82,000/-**

**NSC, NSS, PPF, LIC, ULIP, 11%P.O. MIS, COMPANY DEPOSITS, MEDICLAIM & HOUSING LOANS**

**JEEVAN SHREE, JEEVAN SURAKSHA & OTHER LIC POLICIES AND LIC GROUP INSURANCE SCHEMES**

1) To get max. return under Sec. 88 investments with 20% I.T. rebate but without blocking your money for more than 2 years.

2) To join group Life Insurance, Group Gratuity cum-Life Insurance scheme & group superannuation scheme

3) To get 100% tax exemption with more than 20% return.


4) To get better return through pension plans,mutual funds & shares

Please fix appointment over phone (4850078 / 4850539) and meet us either at your place or at our offices.

**COLLECT FREE PAMPHLET**



**SPN ENTERPRISES**



E-mail: rsn40@yahoo.com

**Investment consultants**

**West Mambalam Office:**
40/32, Govindan Road, West Mambalam,
Chennai - 33.(Near Srinivasa Theatre)
Phone: 4850078, 4850539

**T. Nagar Office:**
23, Rameswaram Road, T. Nagar,
Chennai - 17. (Near Ranganathan Street),
Phone:4345101 & 4345263

**வாழ்வில் முடிவெடுத்த அந்தத்**
**தருணம் என்றும் பசுமையானது...**





**அதற்கு ஈடான மற்றொரு தருணம் நீங்கள் யெஸ்டி அஸோஸியேடட் பில்டர்ஸிடம் இல்லம் வாங்கும் இனிய தருணம்தான்!**

அண்ணா நகர், தி. நகர், நங்கநல்லூர், வேளச்சேரி, முகப்பேர் (கிழக்கு) மற்றும் பிற இடங்களில் அழகிய தரமான டீலக்ஸ் ஃபிளாட்டுகள் மற்றும் தனி வீடுகள் வாங்க

அணுகுங்கள்

CREATORS
NOT JUST BUILDERS

## YESDE ASSOCIATED BUILDERS LTD.

(FLAT PROMOTERS & PROPERTY DEVELOPERS)
402, "Challamall" 17, Thyagaraya Road, (Pondy Bazaar),T. Nagar,
Chennai - 600 017. Phone: 4340224/4333636. Fax: 044-2344333
E.Mail:yesde@md3.vsnl.net.in Web:www.yesdebuilders.com

BUY & SELL


**All Foreign Currencies & Travellers Cheques**

FOREX DIVISION
CREATORS
NOT JUST BUILDERS

- Authorised by RBI as Full fledged Money Changers
- Authorised Dealers for Travelers Cheques
- Open on all 7 days of the week.

**Forex Division**
**Yesde Associated Builders Ltd.**

105, "Challamall" 17, Thyagaraya Road, (Pondy Bazaar),
T. Nagar, Chennai - 600 017
Ph: 4340210, 4342667 Tele Fax: 91-44-4340210
E.Mail:yesde@md3.vsnl.net.in






2000 செப்டெம்பர் 17
விக்ரம புரட்டாசி 1
மலர் : 59
இதழ் : 7

**கல்கி**

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




## உச்சநீதிமன்றத்தின் கெடுபிடி!

**வி**சாரணைக் கைதிகளாகச் சிறையில் இருக்கும் ஐந்து தமிழ்த் தீவிரவாதிகளையும் 121 தடா கைதிகளையும் உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று வீரப்பன் நிபந்தனை விதிப்பது வடிகட்டின அநியாயம், அயோக்கியத்தனம் என்பதில் எள்ளளவும் சந்தேக மில்லை. ராஜ்குமாரை விடுவிக்க வேண்டுமானால் என் நிபந்தனைக்குப் பணியுங்கள் என்று மிரட்டுவது வீரப்பன்தான் என்றாலும் அவனை இயக்குவோர் தமிழ்த் தீவிரவாதிகள் என்பதால் இந்த மிரட்டல் இருமுனை ஆயுதமாக அச்சுறுத்துகிறது. ராஜ்குமார் விடுதலை யாகும்வரை தமிழகம், கர்நாடகம் ஆகிய இரு மாநிலங்களையும் இந்தப் பயங்கர ஆயுதம் மிரட்டிக் கொண்டிருக்கும்.

இரு மாநில முதல்வர்களும் கணக்கற்ற அன்றாடப் பணிகளுக்கும் முக்கியமான அரசுப் பணிகளுக்கும் மேலாக, இந்த ஒரு பிரச்னைக்கும் கணிசமான நேரம், சிந்தனை, உடலுழைப்பு என அனைத்தையும் வழங்கி வருகின்றனர்.

கர்நாடகாவில் வாழும் தமிழர்கள் பேரில் கன்னடியர்களின் கோபம் திரும்பியிருப்பதும் அங்கே தமிழர்கள் அஞ்சி அஞ்சி வாழ்வதும் ராஜ்குமார் கடத்தப்பட்ட நாள்முதல் நீடித்துவரும் அவலநிலை.




கர்நாடக தமிழர்களின் அன்றாட வாழ்க்கை மட்டுமின்றி அவர்களுடைய வர்த்தகமும் வியாபாரமும்கூட பெருமளவுக்குப் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கின்றன.

இந்தச் சூழ்நிலையில்தான் உச்சநீதிமன்றம் ஒரு பொதுநல மனுவை ஏற்று, வீரப்பன் கோரும் தடா கைதிகளையும் தமிழ்த் தீவிரவாதிகளையும் விடுவிக்கக் கூடாது என கர்நாடகா, தமிழக அரசுகளுக்குத் தடை விதித்திருக்கிறது.


உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள கண்டனங்கள் நியாயமானவைதான். ஆனால் தடை உத்தரவைக் குறித்து அதே கருத்தை நாம் கூறிவிட முடியாது.

ராஜ்குமார், வீரப்பனால் கைப்பற்றப்பட்டு ஒரு மாதத்துக்கு மேல் ஆகிறது. நக்கீரன் கோபால் நடையாய் நடந்து போய்வந்து, அவருடைய நலம் குறித்து நற்செய்திகள் வழங்கிக் கொண்டுதானிருக்கிறார். ஆனாலும் கைப்பற்றப்பட்ட கன்னட சூப்பர் ஸ்டார் மற்றும் அவரது சகாக்களின் குடும்பத்தினரும் விஸ்தாரமான அவரது ரசிகர் குடும்பத்தாரும் எத்தனை காலம்தான் பொறுமையாய் இருப்பார்கள்?

எட்டு ஆண்டுகளாக வீரப்பனின் அக்கிரமங்களுக்கு முடிவு கட்டாமல் தாமதித்ததற்காக இரு மாநில அரசுகள் பேரிலும் கண்டனம் தெரிவித்திருக்கிறது உச்சநீதிமன்றம். ஆனால், இன்று அதே நீதிமன்றம் விதித்துள்ள தடை உத்தரவு காரணமாக, ஒரு மிக அபாயகரமான நெருக்கடி சூழல் முடிவுக்கு வருவது தாமதப்பட்டுப் போயிருக்கிறது.

வீரப்பன் வாழும் காட்டுக்கு வெளியே இருக்கும் நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் சில உண்மைகளைச் சந்தித்தாக வேண்டும். இன்று ஓங்கியிருப்பது வீரப்பனின் கை. அவன் நிபந்தனைகளுக்குப் பணியாவிட்டால் நிகழக் கூடிய விளைவுகளால் கர்நாடகமும் தொடர்ந்து தமிழகமும் ரணகளமாகத்தான் மாறும்.

உச்சநீதிமன்றம் இந்த நிலைமையைக் கருத்தில் கொள்ளவில்லை என்பது வருந்




தத்தக்கது.

தமிழக அரசு தனது பதில் மனுவை வலுவாகவும் சரியான பிரதிவாதங்களுடனும் தயாரித்துச் சமர்ப்பிக்குமானால் உச்ச நீதிமன்றம் அதை ஏற்று, தடையை வாபஸ் பெறக் கூடும். ஆனால், இந்தப் பிரச்னையில் ஏற்பட்டிருக்கிற அனாவசிய இழுபறியும் கால விரயமும் மனக்கஷ்டங்களும் ரத்து செய்ய முடியாதவை.

தீவிரவாதிகளிடம் சிக்கிய பிணைக்கைதிகளை விடுவிக்க அவர்களுடைய அக்கிரம மான நிபந்தனைகளுக்குப் பணிந்த பல முன்னுதாரண நிகழ்ச்சிகள் இந்திய வரலாற்றில் இடம்பெற்றுள்ளன. முஃப்டி முகமது சையீதின் மகள் கைப்பற்றப்பட்டபோதும் காட்மாண்டு விமானப் பயணிகள் (கடந்த ஆண்டு இறுதியில்) கடத்தப்பட்டபோதும் முஸ்லிம் தீவிர வாதிகளுக்கு மத்திய அரசு பணிந்தது. அப்பகுதியின் தீவிரவாதப் பிரச்னை இன்னமும் முடிவுக்கு வராமலேதான் இருக்கிறது.

வீரப்பன் கைப்பற்றியுள்ள பிணைக்கைதிகளை விடுவிக்க கர்நாடகா, தமிழக அரசுகள் பணிவது தவிர வேறு வழி இல்லை. ஆனால் மீட்புப் பணி முடிந்ததும் வீரப்பனின் அட்டூழியங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க ஏற்ற வழி நிச்சயமாக இருக்கிறது.

ஆகவே உச்சநீதி மன்றம், ராஜ்குமார் மீட்புக்கு ஏதுவாக தனது தடையை வாபஸ் பெறுவது தான் உகந்தது.

பிணைக்கைதிகள் பாதுகாப்பாகத் திரும்பிய பிறகு 'வீரப்பன் கோட்டை'யைத் தகர்க்க ஒரு கெடு விதித்து மாநில அரசுகளையும் மத்திய அரசையும் சாட்டை சொடுக்கி வேலை வாங்கும் வல்லமையும் அதிகாரமும் உச்சநீதி மன்றத்துக்கு இருக்கிறது.

தங்கள் குடும்பத்துக்கு ஏற்பட்ட பாதிப்பை எண்ணி இன்று பொதுநல மனு தொடுத் துள்ளவர்கள், ராஜ்குமார் மீட்கப்பட்ட பிறகு உச்சநீதிமன்றத்தில் மீண்டும் மனு சமர்ப்பித் தால் அது உண்மையில் அர்த்தமுள்ளதாயிருக்கும். ●



• வெளியீட்டு விழாவில் ரஹ்மான், விக்கு விநாயகராம், கனிகா பரத்

# ஏ.ஆர். ரஹ்மானின்

சுதந்தரப் பொன்விழா ஆண்டில், 'வந்தே மாதரம்' என்று இசை ஆல்பத்தையும் இருநூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட ஒரு நிமிடப் படங்களையும் எடுத்து தேசிய உணர்வை ஊட்டிய 'பரத்பாலா' அதற்கு முத்தாய்ப்பாக குடியரசுப் பொன்விழா வருடமான இப்போது, 'ஜனகனமன' என்று ஒரு இசை ஆல்பம் வெளியிட்டிருக்கிறார்.

இதில் டி.கே. பட்டம்மாள், பீம்சேன் ஜோஷி, ஹரிப்பிரசாத் செளராசியா, சிவகுமார் சர்மா, பாலமுரளி கிருஷ்ணா, லதா மங்கேஷ்கர், ஆஷாபோன்ஸே போன்ற ஜாம்பவான்களுடன் இன்றைய எஸ்.பி.பி., ஹரிஹரன், சுதா ரகுநாதன், உன்னிகிருஷ்ணன் என்று முப்பதுக்கும் அதிகமானவர்கள் பங்கேற்றிருக்கிறார்கள். இந்த ஜனகனமன இசை ஆல்பத்தை நம் ஜனாதிபதி பாராளுமன்ற மைய மண்டபத்தில் வைத்து வெளியிட்டிருக்கிறார் என்பது பெருமைக்குரியது!

''இத்தனை பேரையும் ஒன்று திரட்டி, பாட வைப்பது என்பது அத்தனை சுலபமான விஷயமில்லையே! இதை எப்படிச் சாதித்தீர்கள்?'' என்று அண்மையில் சென்னை வந்திருந்த பரத்பாலாவிடம் கேட்டபோது, மிகவும் உணர்ச்சி பொங்கப் பதில் அளித்தார்.

''இதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று தேசப்பற்று செய்கிற மேஜிக். பொதுவாக, இரண்டு பிரபலங்கள் ஒன்று சேரும் போது, அவர்களுக்குள்ளே இடைவெளியை ஏற்படுத்துவது யார் பெரியவர் என்கிற ஈகோதான். ஆனால் நாட்டிலேயே மகத்தான ஒரு விஷயத்திற்கு ஒன்று சேரும்போது அதுவும் தேசிய கீதத்தைப் பாட ஒன்று சேரும் போது ஈகோவுக்கு இடம் ஏது?''



"இரண்டாவது, இன்னொரு இணைக்கும் சக்தியாக விளங்கிய ஏ.ஆர். ரஹ்மான். ஆரம்பம் முதலே, அவர் இந்த விஷயத்தில் காட்டிய ஈடுபாடும் ஆர்வமும் இம் முயற்சியின் அஸ்திவாரம். அவர் ஒருவரால் மட்

• தமிழக கலைஞர்களுடன் ரஹ்மான்...




# ஜனகனமண

டுமே, இதுபோன்ற பிரமாண்டமான அம்சங்கள் சாத்தியம்.''

ஜனகனமண ஆல்பத்தின் ஒலிப்பதிவு சென்னையிலும், மும்பையிலுமாக நடைபெற்று இருக்கிறது. எல்லோரும் இணைந்து பாடும் தேசிய கீதத்தில், யார் யார் என்னென்ன வரிகளைப் பாட வேண்டும் என்பதை முன்கூட்டியே திட்டமிட்டு, அதற்கேற்ப ஒத்திகை பார்த்தபின்தான் ஒலிப்பதிவு நடந்திருக்கிறது.

கேஸட், ஆடியோ, சி.டி. தவிர, ஜனகனமன ஒரு வீடியோ சி.டி.யாகவும் வந்துள்ளது. வீடியோ சி.டி.யில், தேசிய கீதத்துக்காக, இரண்டுவிதமாகக் காட்சிகள் படம் பிடிக்கப்பட்டன. ஒன்று. முழுக்க முழுக்க இசைக் கலைஞர்கள் (ஸ்டுடியோவிலேயே) பாடுவது போன்றது. இன்னொன்று, காஷ்மீர் மாநிலத்தின் லடாக் பகுதியில் அவுட்டோரில் படம் பிடிக்கப்பட்டது.

ஜனகனமன ஆல்பம் தயாரிப்பு சம்பந்தமான சில சுவையான நினைவுகளைப் பகிர்ந்து கொள்கிறார்கள் பரத்பாலாவும் அவரது மனைவி கனிகாவும்:







● ஸ்டுடியோவுக்கு வீல் சேரில் வந்து பாடிய டி.கே. பட்டம்மாள், பாடி முடித்த பின், ''இந்த ஜனகனமன பாடலை நான் சுதந்தரத்துக்கு முன்னே பாடியிருக்கிறேன். 47-ல் சுதந்தரம் கிடைத்த அன்று பாடியிருக்கிறேன். இன்று ஐம்பது வருஷங்கள் கழித்தும் பாடியிருக்கிறேன். எனக்கு இதில் ரொம்ப சந்தோஷம்'' என்றார்.

● மும்பை யுனிவர்சல்

ஸ்டுடியோவில், லதா மங்கேஷ்கரும், ஆஷா போன்ஸ்லேயும் பாடுவது போல் படப் பிடிப்பு நடந்தது. இரண்டு பேரும் அங்கு சந்தித்துக் கொண்டபோது, மனம் நெகிழ்ந் தார்கள். காரணம், பல வருடங்களுக்கு முன் அதே இடத்தில் இருந்த ஒலிப்பதிவுக் கூடத்தில்தான், இந்த சகோதரிகள் முதல் முதலாக இணைந்து பாடினார்கள்.

- ரவீந்திரநாத் தாகூர் தன்னுடைய சொந்தக் குரலில் (வசனம் போல) பாடியுள்ள ஒலிப்பதிவு ஆல் இந்தியா ரேடியோவின் ஆவணக் காப்பகத்தில் இருந்தது. இந்த ஆல்பத்தில் இடம்பெறச் செய்துள்ளோம்!
- இந்த நாட்டின் புகழ்பெற்ற இசைக் கலைஞர்கள் எழுபது பேரை ஏற்றிக் கொண்டு, தனி விமானம் ஏற்பாடு செய்து, டெல்லியிலிருந்து லடாக் சென்று, ஷூட்டிங் நடத்தித் திரும்பிய அனுபவம் வாழ்நாளில் மறக்க முடியாத ஒன்று.
- தந்தையும் பிள்ளையுமாக இரண்டு தலைமுறை கலைஞர்கள் பங்கேற்றது இன்னொரு சிறப்பு – அம்ஜத் அலிகானும் அவரது இரு மகன்களும் மற்றும் பண்டிட் சிவகுமார் சர்மாவும் அவரது மகனும்.
- அதுவும் லடாக்கின் வெண்பனி நிறைந்த மலைப்பகுதியில், முப்பது வயலின் கலைஞர்கள் வரிசையாக நின்று கொண்டு ஜனகனமன இசைத்தது கண்கொள்ளாக் காட்சி.
- இமய மலையின் பகுதியான லடாக்கில் கடம் வித்வான் விநாயகராம், காஞ்சி பரமாச்சாரியாரின் திருஉருவப் படம் வைத்து, அவருக்கென சிறப்புப் பூஜை செய்து, மனம் நெகிழ்ந்தார்.

கடைசியாய் ஒரு கேள்வி : "பாலா! ஜனகனமன நம் தேசிய கீதம். வணக்கத்துக்குரியது. எழுந்து நின்று, அது இசைக்கப்படும்போது மரியாதை அளிக்க வேண்டியது நம் கடமை. அத்தகைய ஒரு பாடலுக்கு, புது இசையமைத்து ஜாலியாய் கேட்டு மகிழும்படியாகச் செய்து விட்டீர்களே! இது சரியா?"

"நல்ல கேள்விதான்! தாயின் காலைத் தொட்டு வணங்குவது மரியாதை. ஆனால் அவளை அன்பொழுக அணைப்பதும், அவள் தன் குழந்தையை உச்சிமோந்து மகிழ்வதும் அன்பின் வெளிப்பாடே. நான் செய்திருப்பது இரண்டாவது ரகம். எதையும் தர்க்கரீதியில் அணுகி திருப்திகரமாய் விளக்கம் எதிர்பார்க்கிற இளைய தலைமுறையினருக்கு உணர்ச்சி பொங்கும் ஆழமான பந்தம் ஏற்படுத்தும் முயற்சி இது. அதில் வெற்றி பெற்றதாகவே நினைக்கிறேன். இதற்கு கடல் கடந்து ஒரு உதாரணம் சொல்ல முடியும். அண்மையில் அமெரிக்காவில் இந்த ஜனகனமன ஆல்பம் வெளியான போது அங்கு வாழும் இந்தியரிடையே ஏற்பட்ட ஸ்பாண்டேனியஸ் ரியாக்ஷனும் சில தினங்களிலேயே நூற்றுக் கணக்கான சி.டிகள் விற்றுத் தீர்ந்ததும் சாட்சி!

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**

## மனைவிக்கு எரிச்சல்!



இந்தப் படத்திலுள்ள டூப்ளிகேட் வீரப்பன் உத்திரப் பிரதேசத்திலுள்ள புலந்த்ஷஹர்வாசி. பத்ராம் என்று பெயர். மாநில அரசின் பேருந்து ஓட்டுனராகப் பணி புரியும் இவரை வீரப்பன் என்று கருதி இரண்டு தடவை போலீஸார் கைது செய்து விசாரணைக்குப் பிறகு அசடு வழிந்து மன்னிப்புக் கேட்டனர். வீரப்பனின் கார்பன் காப்பி எனக் கூறப்படும் இவரைப் பார்ப்பதற்கு வரும் உல்லாசப் பயணிகளைக் கண்டால் இவர் மனைவிக்கு எரிச்சல் வருகிறதாம்!

– ராஜலக்ஷ்மி முரளீதர்

நன்றி– 'டைம்ஸ் ஆஃப் இந்தியா'

## INDIAN INSTITUTE OF MANAGEMENT & TECHNOLOGY

*in association with*

## ALL INDIA COUNCIL FOR MANAGEMENT STUDIES

25, Mada Church Road, Mandaveli,
Chennai - 600 028. INDIA Phone : 4956036
Fax : 495 2692 e-mail : icolam@hotmail.com

29, Lazarus Church Road, R.A. Puram,
Chennai - 600 028. INDIA Phone : 4933210
Fax : 493 3259 e-mail : aiicas@hotmail.com

**IIMAT** and **AICOMAS** jointly offer the following **One Year** and **Six Months** Diploma Courses by correspondence

**Eligibility :** No formal qualification (Open Education System). **For Application and Prospectus send Rs. 10/- Postage stamp** to any one of the Institute.

### ONE YEAR DIPLOMA COURSES

* BUSINESS MANAGEMENT
* BUSINESS ADMINISTRATION
* MARKETING MANAGEMENT
* TOTAL QUALITY MANAGEMENT & ISO 9000 / QS 9000
* MATERIALS MANAGEMENT
* EXPORT & IMPORT MANAGEMENT
* HOTEL MANAGEMENT
* CATERING MANAGEMENT
* BANKING & INSURANCE MANAGEMENT
* TRAVEL & TOURISM MANAGEMENT
* MECHANICAL ENGINEERING
* CIVIL ENGINEERING
* ELECTRICAL ENGINEERING
* ELECTRONICS & COMMUNICATION ENGINEERING

### SIX MONTHS DIPLOMA COURSES

* BUSINESS MANAGEMENT
* BUSINESS ADMINISTRATION
* OFFICE ADMINISTRATION
* SALES & MARKETING
* FINANCIAL MANAGEMENT
* RESEARCH & DEVELOPMENT
* INDUSTRIAL RELATIONS & PERSONNEL MANAGEMENT
* HUMAN RESOURCES DEVELOPMENT
* EXPORT & IMPORT MANAGEMENT
* FOREIGN TRADE MANAGEMENT
* MATERIALS MANAGEMENT
* PRODUCTION MANAGEMENT
* FOOD & BEVERAGE MANAGEMENT
* FOOD PRODUCTION MANAGEMENT
* COMPUTERS IN OFFICE MANAGEMENT
* COMPUTER APPLICATION
* HOTEL MANAGEMENT
* BANKING MANAGEMENT
* TEACHER TRAINING EDUCATION
* LABOUR LAWS
* QUALITY CONTROL & ISO 9000
* ADVERTISING & PUBLIC RELATIONS
* NURSING MANAGEMENT
* ENVIRONMENTAL MANAGEMENT SYSTEM & ISO 14000/14001
* INTERNATIONAL BUSINESS MANAGEMENT
* BUSINESS INFORMATION SYSTEM
* MANAGEMENT INFORMATION TECHNOLOGY
* HEALTH & HOSPITAL MANAGEMENT
* HOSPITAL ADMINISTRATION
* EDUCATIONAL MANAGEMENT
* TOTAL QUALITY MMANAGEMENT & ISO 9000
* NETWORKING & INTERNET APPLICATION
* QUALITY ASSURANCE & QS 9000 / ISO 9000
* SOFTWARE CAPABILITY MATURITY MODEL (guidelines for improving software process)
* INTERNATIONAL AIRLINES MANAGEMENT (Affiliated/Recognised by Westwind Aviation Academy, Arizona, USA)
* E-COMMERCE APPLICATION
* WEB DESIGNING APPLICATION
* WEB APPLICATION DEVELOPMENT
* INTERNET & INTRANET SECURITY

**We offer Post-Graduate Diplomas also. (Duration - 18 months). Kindly write to any one of the above institute for more information.**

# கொலைகளுக்கு இங்கு

**சிறப்பான சேவைக்காக இந்த ஆண்டு ஜனாதிபதி விருதைப் பெற்றிருக்கிறார் இன்ஸ்பெக்டர் ஜெனரல் லத்திகா சரண்! முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மீது ஊழல் வழக்குகளைப் பதிவு செய்து தனி நீதிமன்றங்கள் நடத்தி வரும் கண்காணிப்பு மற்றும் ஊழல் ஒழிப்பு இயக்குனரகத்தில் பொறுப்பு வகிக்கும் இவரைச் சந்தித்தோம்.**

**முகத்தில் விழும் முடியை அவ்வப்போது இரண்டு கைகளாலும் சரி செய்துகொண்டே நம் கேள்விகளுக்கு டாண்டாணென்று பதிலளித்தார் லத்திகா!**

*கே: எந்தப் பணிக்காக உங்களுக்கு இந்த விருது கிடைத்திருக்கிறது?*

ப: எந்த ஒரு குறிப்பிட்ட பணிக்காகவும் இல்லை. அப்பழுக்கற்ற சர்வீஸ் கொண்ட காவல்துறை அதிகாரிகளுக்கு இந்த விருது குறிப்பிட்ட கால கட்டத்தில் கிடைக்கும். காவல் துறையில் நான் நுழைந்து 24 வருடங்கள் ஓடி விட்டன. அகில இந்திய அளவில் எனக்கு சீனியராக ஒரிரு பெண் அதிகாரிகள்தான் இருக்கிறார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை நான்தான் சீனியர்மோஸ்ட்!

*கே: அடுத்த கேள்விக்குப் போவதற்கு முன்னால் ஒரு சந்தேகம். இவ்வளவு நன்றாகத் தமிழ் பேசுகிறீர்களே எப்படி?*

ப: என் தந்தை, தமிழ்நாடு – கேரளா எல்லையில் இருக்கும் மூணாறு டாட்டா தேயிலை எஸ்டேட்டில் பணி புரிந்தவர். நான் பிறந்ததும் மூணாறில்தான். தேயிலைத் தோட்டங்களில் பணிபுரிபவர்கள் பெரும்பாலும் மதுரை, ராமநாதபுரத்தைச் சேர்ந்த தமிழர்கள். அதனால் தமிழ் எனக்கு சிறுவயதிலிருந்தே பழக்கம்தான். இருந்தாலும், நான் அவ்வளவு சரளமாகப் பேசுவதாக எனக்குத் தோன்றவில்லை! (சிரிக்கிறார்)

*கே: காவல் துறைக்குள் நுழைந்தபோது யாரை 'ரோல் மாடல்' ஆக மனதில் வரித்துக் கொண்டீர்கள்?*

ப: அகாதா கிறிஸ்டியின் துப்பறியும் நாவல்கள் தான் எனக்கு இன்ஸ்பிரேஷன். அவற்றைப் படிக்கப் படிக்க குற்றங்கள் கண்டு பிடிக்கும் பணியில் சேர வேண்டும் என்கிற ஆசை விஸ்வரூபம் எடுக்கத் தொடங்கியது. சிவில் சர்வீஸ் பரீட்சை எழுதி இந்தத் துறையில் சேர்ந்தது இப்படித்தானே ஒழிய 'ரோல் மாடல்' ஆக யாரையும் வரித்துக்கொண்டு அல்ல!

*கே: முதல் போஸ்டிங்கே சென்னைதானா?*

ப: இல்லை சேலம்! அடுத்து திருப்பத்தூர், கோயம்புத்தூர்... பிறகுதான் சென்னை. இடையில் மத்திய புலனாய்வுத் துறையில் சில வருடங்கள், டெல்லியில் ஒரு வருடம்... இப்படி.

*கே: நீங்கள் துப்பறிந்த சுவாரஸ்யமான வழக்கு....*

ப: பழி வாங்கும் உணர்ச்சி யாரிடம் ஏற்படும் என்றே சொல்ல முடியாது. இது நான் கற்ற முக்கியமான பாடங்களுள் ஒன்று.

சேலத்தில் பணிபுரிந்து கொண்டிருந்த நேரம். ஒரு குழந்தையின் மரணத்திற்குக் காரணமாக இருந்த பதினோரு வயது சிறுவனைக் கைது செய்யும்படி ஆகி விட்டது.

தெருக்களில் குப்பை பொறுக்கி அதில் வரும் பணத்தை 'தண்டல்' விட்டுச் சம்பாதித்துக் கொண்டு இருந்தான் அவன், அந்தச் சிறு வயதிலேயே! ஒரு குடிகாரன் அவனிடம் பணம் கேட்க, இவன் மறுக்க, ஆத்திரத்தில் மொத்து மொத்து என்று மொத்தியிருக்கிறான் குடிகாரன். 'உன்னைப் பழி வாங்குகிறேனா இல்லையா பார்!' என்று வீம்பாக குடிகாரனின் கைக் குழந்தையை வேடிக்கை காண்பிப்பது போல தெருவுக்கு எடுத்து வந்து ஒரு பொது கழிப்பறையில் வைத்துக் கொன்றுவிட்டான்.

தகவல் வந்து, நாங்களும் விசாரணையைத் துவங்கினோம். சிறுவன்தான் குற்றவாளி என்பது தெரிய வந்தது. ஆனால் "மரச்சீனிக் கிழங்கு வாங்கிக் கொடுத்தேன்; குழந்தையின்

# இடமில்லை!

தொண்டைக்குழியில் சிக்கிக் கொண்டுவிட்டது: குழந்தைக்கு மூச் சிரைப்பதைப் பார்த்ததும் பயந்துபோய் கழிப்பறையில் போட்டுவிட்டு வந்துவிட்டேன்!" என்று சாதித்தான்.

போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட் வந்தது. ஒரே அதிர்ச்சி. ஒரு துணிப்பந்துதான் குழந்தையின் மரணத்திற்குக் காரணமாக இருந்திருக்கிறது என்றது ரிப்போர்ட் தெளிவாக. பிறகு குற்றத்தை ஒப்புக் கொண்டான் என்று வைத்துக் கொள்ளுங்கள். இருந்தாலும் இச் சிறு வயதில் எவ்வளவு பழி உணர்ச்சி பார்த்தீர்களா?

**கே:** உங்களது குடும்பம்...

**ப:** கணவர் சரண் பிஸினஸ் பிரமுகர். ஒரே மகள். பெயர் உத்திரா. பிளஸ் டூ படிக்கிறார்.



**கே:** இன்னொரு லத்திகாவா?

**ப:** எப்படி உருவாக வேண்டும் என்பதை அவளே தீர்மானிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறேன்!

**கே:** போலீஸ் அதிகாரியாக இருப்பதால் எந்த நேரமும் காக்கி உடுப்பு மன நிலையில் இருக்க வேண்டியிருக்கும். லீவு போட முடியாது. இதனால் குடும்ப வாழ்க்கையின் சின்னச் சின்னச் சந்தோஷங்களை இழந்து விட்டதாக உங்களுக்குத் தோன்றியது உண்டா?

**ப:** சில 'போஸ்டிங்'கில் இரவு பகல் பாராது உழைக்க வேண்டியிருக்கும், உண்மைதான்! உதாரணத்திற்கு, கிரைம் பிராஞ்ச்சில் இருந்தபோது ஆர்.எஸ்.எஸ் அலுவலகம், இந்து முன்னணி அலுவலகம் குண்டு வெடிப்புகளை விசாரித்த போது நிறையவே அலைய வேண்டியிருந்தது. ஆனால் மற்றபடி, காலத்தை என் கட்டுப்பாட்டில் வைத்து, கணவர், மகளுடன் இருக்கும் நேரம் குறையாமல் பார்த்துக் கொள்கிறேன்.

**கே:** பெண் என்பதால்தானே அலட்சியப் படுத்துகிறார்கள் என்று உங்களுக்கு என்றாவது தோன்றியதுண்டா?

**ப:** இல்லவே இல்லை! பதவி உயர்விலும் சரி, போஸ்டிங்கிலும் சரி, அது போன்ற நிலை ஏற்பட்டதே இல்லை.

**கே:** அரசியல்வாதிகள் மீது வழக்குப் பதிவு செய்து விசாரணை செய்கிறீர்கள். நாளை அந்த அரசியல்வாதிகள் மீண்டும் பதவிக்கு வந்து பழி வாங்குவார்களே?

**ப:** காவல் துறையைப் பொறுத்தவரை போஸ்டிங் என்பது அவரவர் 'சாய்ஸ்'படி அமைவதில்லை. இப்போது எனக்கு இந்தப் பணி கொடுக்கப் பட்டிருக்கிறது. என்னால் முடிந்தது, சட்ட வரம்புக்கு உட்பட்டு மனசாட்சியுடன் இந்தப் பணியை ஆற்றுவதுதான். தனிப்பட்ட முறையில் எனக்கு யாருடனும் மனக் கசப்பு துளி கூட கிடையாது. பின் நான் ஏன் பயப்பட வேண்டும்? நாளை இப்படி ஆகுமோ அப்படி ஆகுமோ என்று நான் கவலைப்பட்டுக் கொண்டிருந்தால் என்னால் ஒரு வேலையும் செய்ய முடியாது! எங்கள் துறையைப் பொறுத்தவரை கோழைகளுக்கு இங்கு இடமில்லை!'' என்று கம்பீரமாகப் பேசி நம்மை வழி அனுப்பி வைக்கிறார் லத்திகா சரண்!

சந்திப்பு: **ப்ரியன்**
படம்: **ராஜன்**

# தமிழ் இலக்கியம் உலக இலக்கியம் ஆகிறது!



• காலச்சுவடு கண்ணன்

தமிழ் இலக்கியத்தின் தளம் உலகளவில் விரிந்திருப்பது உறுதி. சாட்சி-தமிழ்இனி 2000 மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் நாடுகளைச் சேர்ந்த இருநூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் எழுத்தாளர்கள் மற்றும் பார்வையாளர்கள் முதல் முறையாக பாஸ்போர்ட் எடுத்துக் கொண்டு சென்னை வந்திருந்ததுதான்!

மாநாட்டு ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான சேரன் சொல்கிறார்- "தமிழ் இலக்கியம் என்பது இனி தமிழ்நாட்டிலிருந்து எழுதப்படுவதாக மட்டும் இருக்க முடியாது; ஏன் என்றால் இருபதுக்கும் அதிகமான நாடுகளில் வாழ்ந்து வரும் தமிழர்கள் அந்த மொழியில் புலமை பெற்று விட்டனர். இதனால் தமிழிலிருந்து பிறமொழிகளில் மொழிபெயர்ப்பதும் பிறமொழிகளிலிருந்து தமிழுக்கு மொழி பெயர்ப்பதும் அதிகரித்து வருகிறது. போதாததற்கு, நடந்து கொண்டிருக்கும் இணையப்புரட்சி சுலபமான இலக்கிய பரிமாற்றங்களுக்கு வழி வகுத்துக் கொடுத்து விட்டது. மொத்தத்தில் தமிழ் இலக்கியம் உலக இலக்கியம் என்ற பொது அடையாளத்தைப் பெறும் நாள் வெகு தூரத்தில் இல்லை!"

மாநாட்டில், கவிதை, நாவல், சிறுகதை, பெண் இலக்கியம், குழந்தை இலக்கியம்... இப்படி நாற்பத்தைந்து இலக்கியப் பிரிவுகளில் ஆராய்ச்சி கட்டுரைகள் வாசிக்கப்பட்டிருக்கின்றன. (பல மாதங்கள் உழைத்து தயாரித்த கட்டுரைகளை வாசிக்க பதினைந்து நிமிட நேரம் ஒதுக்கியது தான் பெரிய கொடுமை!) நல்ல வேளையாக, வாசிக்கப்பட்ட எல்லா கட்டுரைகளையும் உடனுக்குடன் ஜெராக்ஸ் பிரதிகளாக மாநாட்டு அரங்கிலேயே விற்பனை செய்திருக்கிறார்கள். மூன்று நாட்களில் இரண்டாயிரம் கட்டுரை நகல்கள் விற்பனை ஆகி இருக்கிறதாம்!



• மாநாட்டு ஒருங்கிணைப்பாளர் சேரன்

சிறுகதை, கவிதை அரங்குகளில் இடதுசாரி எழுத்தாளர்களுக்கும் நவீன படைப்பாளிகளுக்கும் இடையே காரசார விவாதம், கைகலப்பில் முடிந்து விடுமோ என்று பயப்படும் அளவுக்கு நடைபெற்றிருக்கிறது!

இத்தனைச் சிறப்பாக நடந்தேறிய இந்த மாநாட்டிற்கு அரசு சுண்டு விரல் அளவு கூட உதவி செய்யாதது தான் ஆச்சர்யம் என்று பேசிக் கொள்கிறார்கள்!

"மாநாட்டில் வாசிக்கப்பட்ட கட்டுரைகளும் எழுப்பப்பட்ட கேள்விகளும் tamilini2000.org இணை தளத்தில் இடம் பெறுகின்றன. தளத்திலேயே உலகளவிலான விவாதம் தொடர்ந்து நடக்கிறது... தமிழ் இனி மாநாடு இப்போதைக்கு முடிகிற மாநாடு இல்லை!" என்கிறார் காலச்சுவடு இலக்கிய இதழின் கண்ணன்!

தொகுப்பு: **சக்கரத்தாழ்வார்**
படங்கள்: **வெங்கடேஷ்**

# அன்பே வடிவான தாய்மையைப் போற்றுவோம்


திருமணம் என்பது எந்த பெண்ணுக்குமே வாழ்வில் மறக்க முடியாத நிகழ்ச்சி அல்லவா? அந்தப் பொன்னான நாள் என் வாழ்விலும் மலர்ந்தது. என் தந்தையின் பெற்றோர் திருமணத்திற்கான செலவுகளை ஓரளவு ஏற்றுக் கொள்வதாக வாக்களித்தனர்.

அதை நம்பி அப்பா திருமண ஏற்பாடுகளைத் தடையின்றி செய்தார். ஆனால் கல்யாணத்திற்கு 15 நாட்களுக்கு முன் என் தாத்தா, பாட்டி திடீரென மனம் மாறி பணம் தர இயலாது என்று கூறி விட்டனர். என் தந்தையார் செய்வதறியாது திகைத்தார்.

ஆனால் என் தாயாரோ கவலைப்பட வேண்டாம் என்று கூறினார். எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. அவர், "தான் ஸ்ரீராம் சிட்ஸில் சேர்ந்து சீட்டுக்கட்டி சேமித்து வருவதாகவும் அதை தள்ளியெடுத்து திருமணத்தைச் சிறப்பாக நடத்தலாம்" என்றும் கூறினார். திருமணமும் வெகு ஜோராக நடந்தது.

என் தாயாரின் புத்திசாலித்தனமும், தக்க சமயத்தில் கிடைத்த சீட்டு பணமும் இல்லாவிடில் என் திருமணம் என்ன ஆகி இருக்கும் என நினைத்துப் பார்க்கவே என் மனம் நடுங்குகிறது. நானும் என் கணவரும் தற்போது மிகவும் சந்தோஷமாக இருக்கிறோம்.

என் தாயார் எனக்கு மகன் பிறந்தால் அவனுக்கு "ஸ்ரீராம்" என பெயரிட வேண்டும் என அன்புக் கட்டளையிட்டுள்ளார். தற்பொழுது நாங்கள் அமெரிக்கா செல்ல உள்ளோம்.



அப்படிச் செல்லும் போது ஸ்ரீராம் சிட்ஸுடன் எங்கள் உறவு முறிந்து விடக் கூடாது என்று சீட்டில் சேருமாறு ஒரு கணிசமான தொகையை தாயாரிடம் கொடுத்து ஏற்பாடு செய்துள்ளோம். என் வாழ்நாள் முழுவதும் எனக்கு வாழ்வளித்த ஸ்ரீராம் நிறுவனத்தைமறக்கவே மாட்டேன்.

**திருமதி.கீதா சுரேஷ்**

**உதகமண்டலம் -5**


**ஸ்ரீராம் சிட்ஸ்**

**நவராத்திரி 2000**

ஸ்ரீராம் சிட்ஸ் தமிழ்நாடு லிமிடெட்

சுப்ரமணியன் பில்டிங், 1 கிளப் ஹவுஸ் ரோடு

சென்னை - 600 002. போன்: 8461833 - 40.

www.shriramchits.com

ஜெயகாந்தன் எடுக்கப் போகிறேன் என்றார். கே.பாலசந்தர் எடுக்க விரும்பினார். கமலும் இதை முயற்சி செய்து பார்த்துவிட ஆர்வமாக இருந்தார். மல்லிகார்ஜுனன் என்ற பத்திரிகையாளர், 'கொட்டு முரசே!' என்ற பெயரில் படமாக எடுத்தார். ஆனால் படம் திரைக்கு வரவே இல்லை. அதற்கு அளிக்கப்பட்ட வரிவிலக்கு சலுகை கூட காலாவதியாகிப் போனது. அப்புறம் அம்ஷன்குமார் என்பவர் எடுத்த பாரதி பற்றிய படம், டாகுமெண்டரி என்ற முத்திரையுடன் திருப்தியடைய வேண்டியதாயிற்று. ஆனால், மீடியா ட்ரீம்ஸ். இதை நனவாக்கியுள்ளது. ஆம்! கவிராஜனின் கதை திரைக்கு வந்திருக்கிறது.



கனவை நனவாக்க உழைத்தவர்கள் என்ன சொல்கிறார்கள்?

**எழுத்தாளர் சுஜாதா (படத்தின் கிரியேடிவ் ஆலோசகர்)**

பாரதி என்கிற மனிதன், பாரதி என்கிற கவிஞன், பாரதி என்கிற கணவன், பாரதி என்கிற அறிவு ஜீவி, பாரதி என்கிற புரட்சிக்காரன், பாரதி என்கிற ஞானக் கிறுக்கன் என்று கூடச் சொல்லலாம். பாரதியாரின் இத்தனை பரிமாணங்களையும் மிகைப்படுத்தாமல், திரையில் கொண்டு வருகிற பணி மிகவும் சவால் நிறைந்தது. ஆனால், அது மிக அற்புதமாக நிறைவேற்றப்பட்டுள்ளது என்பது மிகப் பெரிய சாதனைதான்!

**தயாரிப்பாளர் வரதராஜன்**

*இப்படி ஒரு படம் எடுக்கலாம் என்கிற துணிச்சல் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?*

தரமான பொழுதுபோக்குகளை தயாரிப்பது என்பது மீடியா ட்ரீம்ஸின் நோக்கம். அந்த விதத்தில் ஞானராஜசேகரனிடம் ஒரு ஸ்கிரிப்ட் கேட்டபோது அவர் கொடுத்த சப்ஜெக்ட்தான் பாரதியார். "பாரதியாரை வைத்து துளியும் டாகுமெண்டரித்தனம் இல்லாமல் முழு நீள சினிமா எடுக்க முடியுமா?" என்று அவரிடம் கேட்டபோது, "இன்று அவரை மகாகவி என்று போற்றிக் கொண்டிருக்கிறோம். ஆனால் அவர் இறந்தபோது, இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் வெறும் பதினாறு பேர் என்று தெரியுமா உங்களுக்கு?" என்று கேட்டார். தன்னிடமிருந்த பாரதி படத்தின் ஸ்கிரிப்டைக் கொடுத்தார். படித்துப் பார்த்து விட்டுப் பெருமையுடன் சம்மதித்தோம்.

**இயக்குனர் ஞானராஜசேகரன்**

*பாரதியாரை வைத்து, ஒரு விறுவிறுப்பான சினிமா எடுக்க முடியும் என்ற எண்ணம் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?*

திருச்சூரில் நான் மாவட்டக் கலெக்டராக இருந்தபோது இளைஞர்களுக்கான நிகழ்ச்சியொன்றைத் துவக்கி வைப்பதற்காகச் சென்றிருந்தேன். நிகழ்ச்சியில் கேள்வி - பதில் நேரத்தின்போது ஒருவர், "மோகமுள் படத்துக்கு அப்புறம் என்ன படம் பண்ணப் போகிறீர்கள்?" என்று கேட்டார். நான், "அதுபற்றி நான் யோசித்துக் கொண்டுதான் இருக்கிறேன், நல்லதாக சப்ஜெக்ட் கிடைக்கவில்லை" என்

# வாழும் பாரதி!

றேன். உடனே இன்னொருவர் பாரதியார் போன்ற ஒரு சப்ஜெக்ட் இருக்கிறபோது, உங்களுக்கு நல்ல சப்ஜெக்ட் கிடைக்கவில்லை என்று சொல்லுகிறீர்களே என்றார். எனக்குள் பொறி தட்டியது. அன்றைய தினமே கோயம்புத்தூர் சென்று பாரதியார் பற்றிப் பலவிதமான புத்தகங்களை வாங்கிக் கொண்டு வந்தேன். அன்றைக்கே இந்தப் படத்துக்கு, பிள்ளையார் சுழி போடப்பட்டுவிட்டது என்று சொல்லலாம்.

பாரதியார் நம் அனைவருக்கும் அறிமுக மான ஒருவர். எனவே அவரது கம்பீரம் பற்றி எல்லாருக்கும் தெரியும். பாரதியாக நடிப்பவருக்கு அந்த 'அக்னி' முகத்தில் இருக்க வேண்டும் என்று தீர்மானித்தேன். அடுத்து, இங்குள்ள நடிகர்களை, பாரதியாராக நடிக்க வைத்தால், அவர்கள்தான் தெரிவார்களேத் தவிர, பாரதி தெரியமாட்டார். எனவே, இங்கே அறிமுகமில்லாத ஒருவர், பார்த்தவுடன் இவர் பாரதி என்று மட்டுமே எண்ண வைக்கும் படியாக ஒருவர் தேவைப்பட்டார்.

அதுமட்டுமில்லை, பாரதி பிறப்பால் தமிழராக இருந்தாலும்கூட அவர் உலக அளவில் அறியப்பட்ட ஒரு இந்தியர். மொழி கடந்த, நாடுகள் கடந்த ஒரு நபர். எனவே என் தேடுதலை அகில இந்திய அளவில் நடத்தினேன். அப்போது நான் கண்டுபிடித்தவர்தான் ஷாயாஜி ஷிண்டே.

**பாரதியாக நடிக்கும் ஷாயாஜி ஷிண்டே**

நான் அடிப்படையில் மராத்தி நாடக நடிகன். மராத்தி மற்றும் இந்தி திரைப்படங்களில் வில்லனாகவும், குணசித்திர வேடங்களிலும் நடித்திருக்கிறேன். மராட்டிய அரசாங்கத்தின் விருது, ஃபிலிம்பேர் விருது உட்பட சில விருதுகள் பெற்றிருக்கிறேன். எனக்குப் பாரதியைப் பற்றி விளக்கிச் சொல்லி, இந்த ரோலில் நடிக்க வேண்டும் என்று டைரக்டர் ராஜசேகரன் சொன்னபோது, என்னையும் மீறிய ஏதோ ஒரு சக்திதான் ஒப்புக் கொள்ள வைத்தது.

பாரதி வேடமிட்டுக் கொண்டு, நான் மராத்தியில் சில வசனங்களையும், கவிதைகளையும் சொல்லிக் காட்டியபோது "நீதான் என் பாரதி!" என்று உணர்ச்சி பொங்கக் கூறினார் ராஜசேகரன். அது எனக்கு என்றைக்கும் மறக்க முடியாத நாள்.

அடிப்படையில் மேடை நடிகன் என்பதால், பலவித பரிமாணங்கள் கொண்ட பாரதியின் வேடத்தில் நடிக்கும் சவாலை நான் தைரியமாய் எற்றுக் கொண்டேன். ஒவ்வொரு காட்சியிலும் ஈடுபாட்டுடன் நடித்தேன்.

*உங்களுக்கு மிகவும் பிடித்த காட்சி?*

ஒன்றிரண்டைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. எனக்கே தெரியாமல் என் மகளின் திருமண விஷயம் முடிவு செய்யப்பட்டு எனக்குத் தெரிவிக்கப்படுகிறபோது, குழந்தைக்கு உடல் சரியில்லாதபோது டாக்டருக்குக் கொடுக்கப் பணமில்லாமல், பராசக்தியிடம் கோபமாக முறையிடும்போது என்று நிறைய சொல்லிக் கொண்டே போகலாம்.

தனக்கு நிச்சயம் சிறந்த நடிகருக்கான தேசிய விருது கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு இருக்கிறார் ஷிண்டே. தான் படத்துக்காக அணிந்த பாரதியாரின் உடைகளை தன்னிடமே பத்திரமாய் வைத்துக் கொண்டிருக்கிறார். தேசிய விருது கனவு நனவாகும்போது அந்த உடையில் சென்றே வாங்க வேண்டும் என்பது இவரது ஆசை.

**செல்லம்மாவாக நடிக்கும் தேவயானி**

இந்தப் படத்தில் எல்லாமே வித்தியாசமாக இருந்ததை நான் உணர்ந்தேன். ஐம்பது அறுபது வருடங்களுக்கு முன் உண்மையில் வாழ்ந்த ஒரு கேரக்டராக நடிப்பது என்பதே ஒரு சவால் தான். அதை ஓரளவுக்கு நன்றாக செய்திருப்பதாகவே நான் நினைக்கிறேன். செல்லம்மாவின் கேரக்டர் பாரதியின் கேரக்டருக்கு நேர் எதிரானது. நான் ஹீரோவைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளும் காட்சிகளில்தான் இதுவரை நடித்திருக்கிறேன். ஆனால் செல்லம்மாவான நான் என் பெண் தங்கம்மாளின் (சிறுவயது) கல்யாணம் பண்ணி வைக்கும் காட்சியில் நடித்தது வித்தியாசமான அனுபவம். என் மகள் திருமணத்துக்காக, கணவர் பாரதியாரை ஊருக்கு வெளியில் ஏகாந்தமாக பாறைமீது படுத்திருக்கும்போது, அழைக்கப் போகிற காட்சி, படத்தில் என்னை நெகிழ வைத்த காட்சிகளுள் ஒன்று.

## மதன் போட்ட பாரதிதாசன் கார்ட்டூன்

* படத்தில் பாரதிதாசனாக நடித்திருப்பவர் மனோகர். அவருக்கு நடிக்க அழைப்பு வந்தபோது, அவர் கார்ட்டூனிஸ்ட் மதன் அலுவலகத்தில் இருந்தார். ''நான் பாரதிதாசன் கேரக்டருக்குப் பொருத்தமாக இருப்பேனா?'' என்று மதனிடம் தன் சந்தேகத்தை எழுப்பிய தருணம், மதன் அவரை அப்படியே கார்ட்டூனாகப் போட்டு பாரதிதாசனாக மாற்றிக் காட்டி ''நிச்சயம் பொருத்தமாக இருப்பீர்கள்'' என்றாராம்.

* இந்தப் படத்தை மலையாளம் மற்றும், வங்காள மொழி சப்-டைட்டிலுடன் கேரளாவிலும் வங்காளத்திலும் திரையிடப் போகிறார்கள். எல்லா உலக திரைப்பட விழாவுக்கும் அனுப்பப் போகிறார்கள்.

* பாரதியார், பிராமணர் இல்லாத இளைஞர்களுக்குப் பூணூல் அணிவித்து விட்டு, அவர்களுடன் சேர்ந்து ஆனந்தமாய் கூடிப்பாடுவதாய் ஒரு காட்சி. அந்தக் காலத்தில் அப்படி ஒரு சூழ்நிலையில் எப்படி ஆடியிருப்பார்கள் என்பதை கற்பனை செய்வதே ஒரு பெரிய சவால். இந்தக் கால சினிமா பாணி துளியும் இல்லாமல், கவனமாய் அந்தக் காட்சிக்குரிய ஆட்டத்தை வடிவமைத்து இருக்கிறேன் என்கிறார் டான்ஸ் மாஸ்டர் நசீர் பாபு.

* இப்போது பதினோரு பிரிண்டுகள் மட்டுமே எடுக்கப்பட்டு சென்னையிலும், திருநெல்வேலி கோவை போன்ற சில வெளியூர்களிலும் ரிலீஸ் ஆகியுள்ளது இந்தப் படம். தவிர, இரண்டு பிரதிகள் மலேசியா, சிங்கப்பூருக்கு அனுப்பப் பட்டுள்ளன.

* வழக்கம்போல, படத்தை விநியோகஸ்தர்களுக்கு ஏரியா விற்பனை செய்து ரிலீஸ் செய்யாமல், மீடியா ட்ரீம்ஸ் நிறுவனம் நேரடியாக தியேட்டர்களை வாடகைக்கு எடுத்து படத்தை வெளியிட்டுள்ளது. மொத்தத்தில் படம் பற்றிய ரிப்போர்ட்கள் உற்சாகமளிக்கும்படி உள்ளதாக மீடியா ட்ரீம்ஸில் சொல்கிறார்கள்.

* படத்தின் பட்ஜெட் ஒன்னரை கோடி, திட்டமிட்டபடியே பட்ஜெட்டுக்குள் படம் எடுத்ததே பெரும் சாதனைதான்!

தொகுப்பு : பாரதிமௌலி

**ஆர்ட் டைரக்டர் கிருஷ்ணமூர்த்தி**

படத்தின் தேவைக்கு ஏற்ப, எட்டையபுரம், கடையம், காசி, பாண்டிச்சேரி என்று போய், அங்குள்ள ஒரிஜினல் லொகேஷன்களில் சிற்சில மாற்றங்களுடன் காட்சிகளை எடுத்தோம். பாண்டிச்சேரியில் உள்ள மியூசியத்தில் உள்ள கைவண்டியையே படத்தில் பயன்படுத்திக் கொண்டோம். சில காட்சிகளில் கிராபிக்ஸ் யுக்திகளும் பயன் படுத்தப்பட்டுள்ளன என்பது படம் பார்க்கிறவர்களுக்குக் கூடத் தெரியாது. (மனிதர்கள் கூட்டமாய் நிற்கும் காட்சிகளில், கூட்டத்தைப் பெரிதுபடுத்த இந்த யுக்திதான் கையாளப்பட்டிருக்கிறது) இன்றைய எட்டையபுரம், கடையம், பாண்டிச்சேரி தெருக்களில் எடுக்கப்பட்ட காட்சிகளில், காலத்தின் கட்டாயங்களான மின்சார கம்பம், தந்தி மற்றும் டெலிபோன் கம்பங்கள் மின்சார ஒயர்கள் இவைகளையும் சேர்ந்து படம் பிடித்தாலும் பின்னர் டிஜிடல் முறையில் அவை நீக்கப்பட்டிருக்கிறன.

**ஒளிப்பதிவாளர் தங்கர் பச்சான்**

இதுவரை இருபத்தைந்து படங்களுக்கு ஒளிப்பதிவு பண்ணிவிட்டேன். ஆனால், பாரதி படத்துக்குப் பண்ணினது, எனக்கு முதல் படம்போல ஒரு புது அனுபவம். இதுதான் என் பிள்ளைகளுக்கு நான் விட்டுவிட்டு போகிற சொத்து என்று கூடச் சொல்லுவேன். சில பிரத்யேக ஒளி நுட்பங்களை நான் இதில் கையாண்டிருக்கிறேன்.

அந்தக்காலத்தில் வீடுகளில் எண்ணெய் விளக்குகள்தான். அதில் கிடைக்கும் ஒளி அளவுக்குத்தான் லைட்டிங் செய்ய வேண்டும். அந்த ஒளியில் படம் பிடித்தால், இருட்டில் படம் எடுத்திருப்பதாகச் சொல்லுவார்கள். எனவே, விளக்கு ஒளியை மட்டுமே வைத்துக் கொள்ளாமல், சினிமாவில் பயன்படுத்தும் லைட்களையும் பயன்படுத்தியிருக்கிறேன். ஆனால் திரையில் விளக்கு ஒளி அளவுக்கு மட்டுமே லைட்டிங் எஃபெக்ட் தெரியும். பல காட்சிகளில், காமிரா மூலம் ஷிண்டேவின் நடிப்பைப் பார்த்துவிட்டு, கண் கலங்கியதை என்னால் மறக்கவே முடியாது.


கமர்ஷியல் நோக்குடன் திணிக்கப்பட்ட காட்சிகள் கொண்ட படங்களைப் பார்த்து சலித்துப் போன ரசிகர்களுக்குத் தென்றல் போல இந்தப் படம் வந்திருக்கிறது என்கிறார் சுஜாதா.

- எஸ். சந்திரமௌலி

'பாரதி' விமர்சனம் 71ம் பக்கம்.

**கா**ஞ்சி மடம். விநாயகர்சதுர்த்தியைத் தொடரும் ஞாயிற்றுக்கிழமை மாலை. பக்தர்களுக்குத் தரிசனம் அளித்துக் கொண்டிருந்த ஜெயேந்திரர், விஜயேந்திரர் இருவரும் சட்டென்று எழுந்து மடத்தின் வாயிலுக்கு வந்து நின்று விட்டனர். அவர்கள் வரவேற்க வந்த வி.வி.ஐ.பி. வேறு யாருமில்லை- விநாயகரேதான்! ஆம்! காஞ்சிபுரத்தின் பல்வேறு பகுதிகளிலும் வைக்கப்பட்டிருந்த விநாயகர் சிலைகள் ஊர்வலமாய் வந்து கொண்டிருந்தன. இரண்டு சங்கராச்சாரியார்களும் ஒவ்வொரு விநாயகர் சிலையையும் ஆர்வமாய்ப்பார்த்துக் கொண்டிருந்தனர். அப்போது அந்தப் பக்கமாய் வந்த அனைவருக்கும் பிள்ளையார், ஜெயேந்திரர் விஜயேந்திரர் அனைவரையும் ஒரு சேரப் பார்த்த சந்தோஷம்!

தகவல்:
**மௌலி**
படம்:
**யோகா**



# வி.வி.ஐ.பி. மிஸ்டர் விநாயகர்!



**பி**ள்ளையாரும் 'கோன் பனேகா கரோர்பதி'யை விட்டுவைக்கவில்லை! பெங்களூரில், பிள்ளையார் அமிதாப்பச்சனுக்கு விடையளிப்பது போன்ற இந்தச் சிலையைப் பாருங்கள்!

(நன்றி- பிஸினஸ் லைன்)
தகவல்: கலா




# எல்லா வித புற்று நோயாளிகளும் உடல் ரீதியான முன்னேற்றமடைய தெய்வீக மூலிகை மருத்துவம்!



ஞானோதய வைத்தியர் C.K. மாணிக்கவாசகம் அவர்கள் ஆராய்ச்சியில் எளிய மக்களும் பயனடைய தக்க வகையில் தெய்வீக மூலிகைகளை கொண்டு நீண்டநேர இருமல், சளியுடன் இரத்தம் கலந்து வருதல் மூச்சு வாங்குதல், அடிக்கடி காய்ச்சல், இரவில் மூச்சு திணறல் போன்ற அறிகுறிகள்கொண்ட நுரையீரல் புற்று நோயாளிகள், கை, கால் எலும்புகளில் வலி, வீக்கம், அழுத்தி பார்த்தல் அதிக வலி போன்ற அறிகுறிகள் கொண்ட எலும்பு புற்று நோயாளிகள், இரத்தம் இரத்தமாக வாந்தி எடுத்தல், மூக்கில் அடிக்கடி இரத்தம் வருதல் போன்ற அறிகுறிகள் கொண்ட இரத்த புற்று நோயாளிகள், மார்பில் கட்டி போல் காணப்பட்டு அழுத்தினால் அதிக வலி கொடுக்கும் மார்பக புற்று நோயாளிகள், அஜீரணப் பசியின்மை, வாந்தி எடுத்தல், தலை சுற்றல் போன்ற அறிகுறிகள் கொண்ட கல்லீரல் புற்று நோயாளிகள் மலகுடல் புற்று நோயாளிகள், மாதவிடாய் தண்ணி போகுதல், கருப்பையில் வலி, அதிக இரத்த போக்கு போன்ற அறிகுறிகள் கொண்ட கருப்பை புற்றுநோய் மற்றும் வாயில் புற்று நோய் கொண்டவர்கள் அனைவரும் பின் விளைவு பக்க விளைவு இல்லாத தெய்வீக மூலிகை சிகிச்சை பெறலாம்.

மற்றும் இதயக்கோளாறுகள், சிறுநீரகக் கோளாறு, எய்ட்ஸ், ஆண்மைக் குறைவு, குழந்தையில்லாத குறை, ஆஸ்துமா, சர்க்கரை வியாதி, அல்சர், மூட்டுவலி, சோரியாசிஸ், மாத விடாய் கோளாறு, உயிரணுக்கள் குறைவு போன்றவைகளுக்கும் தரமான மூலிகை சிகிச்சையும் & ஆலோசனைகளும் பெறலாம். அணுக வேண்டிய முகவரி



## தெய்வீக மூலிகை வைத்தியர்கள்

தலைமை முகவரி : **Dr. M.குருபரன் & Dr. M. சபாபதி, Dr. M.சிவசக்தி S/O. Dr. C.K.மாணிக்கவாசகம்**
P.B. NO. 30, 3,திருநாத முதலி நகர் (காலேஜ் எதிரில்), திருப்பத்தூர், வேலூர் DT 635601 ✆ : 04179-20469, 22769
சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (பிரின்ஸ் மேனர் பக்கத்தில்) கெல்லீஸ், சென்னை - 600 010. ✆ : 044-6424285, 6427638.
இரு முகவரிகளிலும் ஆலோசனை நேரம் காலை 10.00-1.00 P.M. மாலை 5.00-7.00 P.M.

## ஒவ்வொரு மாதமும் வெளியூர்களில் டாக்டரை நேரில் சந்திக்க

| | | | | |
|---|---|---|---|---|
| வேலூர்<br>2-ந்தேதி 12.00 P.M. TO 2 P.M.<br>[illegible] 26/A, ஆரணி ரோடு [illegible]<br>✆ : [illegible] | காஞ்சிபுரம்<br>2-ந்தேதி 5 P.M. TO 6 P.M.<br>[illegible]<br>✆ : [illegible] | கடலூர் (S.A.DT.)<br>4-ந்தேதி 9 A.M. TO 11 A.M.<br>[illegible]<br>✆ : [illegible] | விழுப்புரம்<br>4-ந்தேதி 2 P.M. TO 3 P.M.<br>ஹோட்டல் [illegible] பஸ் நிலையம் எதிரில்<br>✆ : [illegible] | திருவண்ணாமலை<br>4-ந்தேதி 5 P.M. TO 6 P.M.<br>[illegible] பஸ் நிலையம் எதிரில்<br>✆ : [illegible] |
| மும்பை<br>7 & 8-ந்தேதி 10 A.M. TO 8 P.M.<br>The South Indian Concerns Ltd.,<br>401, Telang Road, Matunga (C.R),<br>PH : 022/4011589 | பெங்களூர்<br>9-ந்தேதி 11 A.M. TO 1 P.M.<br>[illegible]<br>✆ : [illegible] | ஒசூர்<br>9-ந்தேதி 4 P.M. TO 5 P.M.<br>[illegible]<br>✆ : [illegible] | சேலம்<br>12-ந்தேதி 11 A.M. TO 1 P.M.<br>ஹோட்டல் [illegible] புதிய பஸ் நிலையம் எதிரில்<br>✆ : [illegible] | ஈரோடு<br>12-ந்தேதி 4 P.M. TO 6 P.M.<br>ஹோட்டல் [illegible] பஸ் நிலையம் எதிரில்,<br>✆ : [illegible] |
| கோயம்புத்தூர்<br>13-ந்தேதி 9 A.M. TO 1 P.M.<br>[illegible]<br>✆ : [illegible] | மதுரை<br>14-ந்தேதி 9 A.M. TO 11 A.M.<br>[illegible]<br>✆ : [illegible] | தஞ்சாவூர்<br>14-ந்தேதி 5 P.M. TO 7 P.M.<br>[illegible]<br>✆ : [illegible] | திருச்சி<br>15-ந்தேதி 9 A.M. TO 11 A.M.<br>[illegible]<br>✆ : [illegible] | நாமக்கல்<br>15-ந்தேதி 2 P.M. TO 4 P.M.<br>[illegible]<br>✆ : [illegible] |
| நியூடெல்லி<br>18&19-ந்தேதி 10 A.M. TO 8 P.M.<br>South Indian Hotel, 10211, Padam Singh Road, Ajmal Khan Road, Karol Bagh ✆ : [illegible] | தர்மபுரி<br>21-ந்தேதி 8 A.M. TO 10 A.M.<br>[illegible]<br>✆ : [illegible] | திருப்பூர்<br>22-ந்தேதி 2 P.M. TO 3 P.M.<br>[illegible]<br>✆ : [illegible] | உடுமலைபேட்டை<br>22-ந்தேதி 6 P.M. TO 7 P.M.<br>[illegible] பஸ் நிலையம் எதிரில்<br>✆ : [illegible] | திண்டுக்கல்<br>23-ந்தேதி 9 A.M. TO 11 A.M.<br>[illegible]<br>✆ : [illegible] |
| காரைக்குடி<br>23-ந்தேதி 5 P.M. TO 6 P.M.<br>[illegible]<br>✆ : [illegible] | திருநெல்வேலி<br>24-ந்தேதி 8 A.M. TO 11 A.M.<br>[illegible]<br>✆ : [illegible] | நாகர்கோவில்<br>24-ந்தேதி 2 P.M. TO 3 P.M.<br>[illegible]<br>✆ : [illegible] | விருதுநகர்<br>25-ந்தேதி 8 A.M. TO 10 A.M.<br>[illegible]<br>✆ : [illegible] | கரூர்<br>25-ந்தேதி 2 P.M. TO 4 P.M.<br>[illegible]<br>✆ : [illegible] |

தகவல் : SUN, RAJ, VIJAY, D.D T.V. களில் எமது பேட்டியை காணத்தவறியவர்கள். டாக்டரின் மூலிகைகள் பற்றிய 26 வருட அனுபவ ஆராய்ச்சிகள் அடங்கிய "எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்" இயற்கை உணவுகளின் பெருமைகள், அதிசய உண்மைகள் அடங்கிய "என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்" என்ற இரு புத்தகத்தையும் பதிவுத் தபாலில் பெற ரூ. 130/-மேற்கண்ட முகவரிக்கு D.D. அல்லது M.O. அனுப்பவும்.

- ஆகஸ்ட் 15 & 22 மாலை 6 மணிக்கு விஜய் டிவியில் டாக்டரின் பேட்டியைக் காணத்தவறாதீர்கள்.

"நாவிதரைக் கண்டாத் தான் சிலருக்கு தாடி ஞாபகம் வரும்; என் தலை தெரிஞ்சாத்தான் உனக்குப் பிரச்னைகள் நினைவு வருதா? அந்தப் பிளம்பரைப் பார்க்கச் சொன்னேனே... என்ன ஆச்சு?"

"அட பொண்ணையே பார்க்கலை... அதுக்குள்ள கல்யாணத்துக்கு ஹால் பார்க்க கிளம்பிட்டியேப்பா... முதல்ல கடைக்கான விண்



• போலீசுடன் சரிசமமாக அமர்ந்து பேசும் குடிசை வாழ் பெண்கள்



• குடிசைவாசிகள் புடைசூழ கையில் ரோஜாமலருடன் ஜோக்கின்

ஸ்லம் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் என்கிற இயக்கத்தைத் தொடங்கி அவர்களது வாழ்க்கை மேம்பாட்டிற்கு அயராது உழைப்பதற்காக.

ஒருமுறை மன்குர்ட் ஜனதா காலனியில் மலை போல் குவிந்து துர்நாற்றம் வீசிக் கொண்டிருந்த குப்பை கூளத்திலிருந்து ஆளுக்கு ஒரு கிலோ குப்பை வீதம் •

ணப்பத்தை எழுதிக் கொடு..."

"ஏம்மா... உனக்கு காம்பன் சேஷன் கிடைச்சுட்டுதா? கணபதி விழாக்கு முன்னாடி வாங்கிக்க..."

கேள்விகளை சரமாரியாக வீசிக்கொண்டே கையிலிருக்கும் புகார்ப் பத்திரங்களை எல்லாம் கடகடவென்று பார்த்துக் குறிப்பெழுதுகிறார் ஜோக்கின்.

ஜோக்கின்?



• மணிலாவில் மாக்ஸேஸே பௌண்டேஷன் சேர்மனிடமிருந்து விருது வாங்குகிறார் ஜோக்கின்

# [illegible] பெண்!

இந்த வருடத்திய மாக்ஸேஸே விருதைப் பெற்ற மும்பைத் தமிழர்.

விருது, இந்தியா முழுவதும் வசிக்கும் இரண்டு லட்சத்திற்கு மேற்பட்ட குடிசை வாழ் குடும்பங்களை இணைத்து நேஷனல்



## "ரஜினி முகமூடி கிழியப் போகிறது!"

**"ராஜ்குமார் கடத்தல் விவகாரத்தில் அக்கறை காட்டிய ரஜினி, முன்பு கர்நாடக வனத் துறையினர் கடத்தப்பட்டபோதும் அதற்கும் முன்பு தமிழக அரசின் காவல் துறையினர் கடத்தப்பட்டபோதும் வாயே திறக்கவில்லையே ஏன்? இப்படி செலக்டிவ்வாக மனிதாபிமானம் காட்டத் துவங்கினால் ரஜினியின் முகமூடி கிழிந்து போகும்!"**

**சொன்னது யாராக இருக்கும்?...**

**பார்க்க : பக்கம் 59**

3000 முனிசிபல் பள்ளி குழந்தைகளை குப்பையை அள்ளிச் சுருட்டி முனிசிபல் ஆபீஸிற்கு எதிரே கொண்டு போய் கொட்டச் சொன்னாராம்! உடனே போலீஸ் வீடு தேடி வந்துவிட்டதாம். எல்லோரும் இவரைத் தலைவனாக அடையாளம் காட்ட "இரவோடிரவாக பிரபலமாகிவிட்டேன்!" என்று சொல்லிச் சிரிக்கிறார் ஜோக்கின்.

மன்குர்டிலிருந்து குர்லாவுக்கு 3000 குடும்பங்களை மூன்றே மாதத்தில் மாற்றி ரீ-செட்டில்மெண்ட் பண்ணி சாதனை புரிந்திருக்கும் இவரிடம் "நீங்கள் சொன்னால் மட்டும் இந்த மக்கள் எப்படி ஒப்புக் கொள்கிறார்கள்? ரயில்வேயோ முனிசிபாலிடியோ முயன்றால் களேபரமாகிவிடுகிறதே? ஏதேனும் மகுடி ஊதுகிறீர்களா?" என்று கேட்டால் "பேச்சு வார்த்தை கலந்தாலோசித்தல் என்கிற மகுடியைத்தான் ஊதுகிறேன்!" என்று புன்முறுவலிக்கிறார். "நான் மனிதர்களை நம்புகிறவன், அன்பாகப் பேசி பக்குவமாய் எடுத்துச் சொன்னால் இவர்கள் எனக்காக நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பால் கூட குடி பெயரத் தயங்கமாட்டார்கள். முனிசிபாலிடியைப் போல தாட் பூட் என்று அதிகாரமெல்லாம் செய்தேன் என்று வைத்துக் கொள்ளுங்கள் அடுத்த தெருவிற்குக் கூட நகர மாட்டார்கள்!" என்கிறார்.

'என்.எஸ்.டி.எஃப்'இல் தலைமை பொறுப்புக்கள் அனைத்தையும் பெண்களுக்குத் தந்திருக்கும் இவர் அதற்கு மூன்று காரணங்கள் சொல்கிறார்.

• பெண்கள் விஷயமறிந்தவர்கள். சுற்றியுள்ள காலனிவாசிகளுக்கிடையே எங்கே என்ன நடக்கிறது என்பது அவர்கள் விரல் நுனியில் இருக்கும்.

• இவர்களது பேச்சுத்திறமை. ஓர் ஆணுக்கு, தன் மனைவியிடம் கூட சரியாகப் பேச வராது. ஆனால் ஒரு பெண் தன் வாயால் ஊரையே விலைக்கு வாங்கி விடுவாள். இன்றளவும் ஒரு முனிசிபல் ஆபீஸிற்கு இரண்டு ஆண்களை அனுப்பினால் ஒரு வேலையும் ஆவதில்லை. ஆனால் இந்த 'ராட்சஸிகளை' அனுப்பினால் விழுந்தடித்துக் கொண்டு காரியத்தை முடித்துக் கொடுத்துவிடுகிறார்கள்.

• ஆண்கள் 'மைனர் ஜாலி, பாக்கெட் காலி' வகையறாக்கள். ஆனால் பெண்களிடம் எப்போதும் எப்படியாவது பணமிருக்கும். முன்னேற்றத் திட்டங்களுக்கு அது தானே மூலதனம்?

மும்பைக்குத் தினமும் படை எடுக்கும் மக்களைத் தடுத்தாலே 'ஸ்லம்'கள் குறைந்துவிடும் என்கிற தாக்ரேயின் கருத்தைக் கடுமையாக ஆட்சேபிக்கிறார்.

"மும்பை ஒரு புண்ணிய பூமி. இங்கு பல இன மத மொழியுடைய மக்கள் ஒற்றுமையாய் வாழ்வதை நாம் ஏன் குலைக்க வேண்டும்? குடிசைகளை அறவே ஒழிக்க 260 ஹெக்டேர் நிலம் தான் தேவை, அதற்கு அரசு வாக்குறுதி தந்திருக்கிறது. நான் மட்டுமல்ல; நல்லிதயம் கொண்ட நிறைய மக்கள் இந்தப் பணிக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் வெற்றி நிச்சயம்" என்கிறார் உறுதியாக.

எல்லாம் சரி... மாக்ஸேஸே அவார்டை என்ன பண்ணப் போகிறாராம்? இந்தியப்பண மதிப்புக்கு, கிட்டதட்ட 25 லட்சம் ஆயிற்றே?

"அர்பன் புவர் டெவலப்மெண்ட் ஃபண்டு" என்று ஒன்றை உருவாக்கி ஆக்கப் பணிகளில் செலவிடப்போகிறாராம்!

**- ஜெயஸ்ரீ ராஜ்**

# தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத்துறை

காலம் ஒரு நாள் மாறும். நீங்களும் இலட்சாதிபதி ஆகலாம். இன்றே வாங்குங்கள்!

முதல் பரிசு:

## ரூ. 5 லட்சம்

திங்கள்
கர்ணன்

வியாழன்
தமிழ்மகள்

புதன்
காவேரி

செவ்வாய்
பணத்-
தோட்டம்

வெள்ளி
வைகை

**வரிசைகள் 5**

பரிசுச் சீட்டின் விலை
ரூ.2/-(M.R.P)



**ஆணையர், தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத்துறை**
சயர் மேன்சன், 2வது தளம், 621, அண்ணா சாலை,
சென்னை 600 006. தொலைபேசி 8292512

**விழுந்தால் வீட்டிற்கு! விழாவிட்டால் நாட்டிற்கு! தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டையே வாங்கிடுவீர்!!**

Visit us at : www.tn.gov.in / chennaionline.com / aaraamthinai.com / southindia.com / webulagam.com

**ப**த்தாவது மட்டும் படித்த ஒருவனுக்கு பத்திரிக்கை ஆஃபீஸில் என்ன வேலை இருக்க முடியும்' சுந்தரம் மாமா அழைத்து போனபோது அவனும் அப்படித்தான் குழம்பிப் போனான். மேஜை துடைக்க, காப்பி, டீ வாங்கி வாச் சொல்வார்களோ என்று பயமாயிருந்தது. இன்னும் கொஞ்சம் படித்திருக்கலாமே என்று தாமதமாய்த் தோன்றியது.

கிட்டத்தட்ட அவன் நினைத்த மாதிரிதான். கட்டுக் கட்டாய்க் காகிதங்களை ஒரு மேஜையிலிருந்து இன்னொரு மேஜைக்கு கொண்டு போய்த் தருகிற வேலை. நாள் முழுக்க நகர்வதற்கு அந்த அலுவலகத்தில் காகிதங்கள் இருந்தன. பத்திரிக்கைக் குறிப்புகள், கதை, கட்டுரை, கவிதை இன்னும் ஏதேதோ. மாறி மாறிப் போய்க் கொண்டிருக்கும், அந்த பெரிய அறையில் உட்கார்ந்திருக்கிற எல்லோரும் படித்த பிறகுதான் அச்சேற்றுவது என்று கொள்கை ஏதும் வைத்திருக்கிறார்களா தெரியாது. ஆனால் எல்லாரும் எல்லாவற்றையும் படிப்பதாகத்தான் தோன்றியது. மாய்ந்து மாய்ந்து காகிதத்தின் பின்பக்கத்தில் குறிப்புகள் வேறு எழுதுவார்கள். அதையெல்லாம் யார் கவனித்து சரி செய்கிறார்கள் என்றுதான் தெரியாது. எல்லாரிடமும் ஒரு சுற்று போய் வந்தபிறகு, அதை எடுத்துக் கொண்டு போய் பக்கத்தில் குளிர்ச்சாதனம் பொருத்திய அறையிலிருக்கிற ஆசிரியரிடம் கொடுக்க வேண்டும். கொடுத்துவிட்டு அவன் வெளியே போகப் பார்த்தால், 'இருந்து வாங்கிண்டு போயிடேம்பா' என்பார். ரொம்ப நேரமெல்லாம் எடுத்துக் கொள்ள மாட்டார். வேகமாய் ஒரு பார்வை, அங்கங்கே சில இடங்களில் திருத்தி, நிதானமாய் வாசிப்பு, அவ்வளவே, திருப்பிக் கொடுத்து விடு



பாவண்ணன்

வார். அலட்சியமா அல்லது உதவி ஆசிரியர்களிடம் பெரும் நம்பிக்கையா என்று இன்றுவரை புரியவில்லை.

நேராய் அதை எடுத்துக் கொண்டு அச்சகத்திற்கு ஓட வேண்டும். அச்சகம் அதே கட்டிடத்தின் பின் பக்கத்தில் எப்போதும் மண்ணெண்ணெய்போல ஒரு வாசம் அடித்துக் கொண்டு இருக்கும். ஒரு அறுபது வயது தாத்தா காகிதத்தை வாங்கிக் கொண்டு இவனை அலட்சியமாய் ஒரு பார்வை பார்ப்பார். 'போ' என்பது போலான பார்வை. அவரை ஏனோ அவனுக்குப் பிடிக்கவே இல்லை. ஆனால் தாத்தாவைப் பற்றி எல்லோரும் பிரமாதமாய்ச் சொல்வார்கள். வாரம் தவறாமல் வெள்ளிக் கிழமை சரியாக பத்திரிகை வெளியாவதே அவரால்தான் என்பார்கள். அவனுக்கு அவரைப் பார்த்தால் அப்படி ஒன்றும் தோன்றியதே இல்லை. வேலை செய்யாமல் நாற்காலியில் தூங்கிக் கொண்டிருப்பது போல தான் இருப்பார்.

ஆனால் அவனுக்கு தூங்கவெல்லாம் நேரம் இருக்காது. எந்நேரமும் ஏதேனும் வேலை கொடுத்துக் கொண்டே இருப்பார்கள். கேமிரா ரோல்களைக் கொடுத்து பக்கத்து ஸ்டுடியோவில் ப்ரின்ட் போட்டுக் கொண்டுவரச் சொல்வார்கள். அல்லது சந்தாதாரர்களுக்கு ஆளுக்கொன்றாய்ப் புத்தகம் உறையில் இட்டு, முகவரி எழுதச் சொல்வார்கள். இதையெல்லாம் விட அவனுக்கு ரொம்பப் பிடித்தது கதை படிப்பது.

கதை படிப்பது என்றால், புத்தகத்தில் வெளியாகிற கதை இல்லை. புத்தகத்தில் வெளியாகாத கதை!

வருகிற எல்லா கதைகளும் ஆசிரியர் அறை வரை போவதில்லை. சிலது பாதி வழியிலேயே நிராகரிக்கப்பட்டு விடும். அப்படிப்பட்ட கதைகளை இவன் தன் மேஜைக்குக் கொண்டு வந்துவிட வேண்டும். அவற்றைத் திருப்பி அனுப்புகிற வேலை இவனுடையது.

அதற்கென்று ஒரு சிறு துண்டுக் காகிதம்- ஆயிரக் கணக்கில் அச்சிட்டு வைத்திருக்கிறார்கள். 'அன்புடையீர், தாங்கள் அனுப்பிய கதை/கவிதை/கட்டுரை/துணுக்கு/ஓவியம்/புகைப்படம் பிரசுரத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கறோம். இதை தங்கள் திறமை குறித்த விமர்சனமாக எடுத்துக் கொள்ளாமல், தொடர்ந்து உங்கள் படைப்புகளை அனுப்பி வருமாறு கேட்டுக் கொள்கிறோம்'. கீழே ஆசிரியரின் கிறுக்கல் கையெழுத்து இருக்கும். அந்த காகிதத்தில் ஒன்றோடு கதையையும் உறையில் இட்டு, மேலே முகவரி எழுதி, கதையின் உச்சியில் சொல்லியிருக்கிற தொகைக்கு தபால்தலை ஒட்டி, வீட்டுக்குப் போகிற வழியில் தபாலில் சேர்ப்பதுவரை அவன் வேலை.

முதலில் அந்த வேலை சலிப்பாக இருந்தது. ஒரே மாதிரி திரும்பத் திரும்ப செய்வது அவனுக்குப் பிடிக்கவில்லை. ஒரு நாளைக்குக் குறைந்தது இருபது, முப்பது கதைகளாவது திருப்பியனுப்ப வேண்டியிருக்கும். வருடா வருடம் டிசம்பரில் ஒரு சிறுகதைப் போட்டி அறிவிப்பார்கள், அந்த சமயங்களில் இன்னும் அதிகம், சில நாட்களில் நூறு கவர்கள்வரை முகவரி எழுதி கைவலிக்க ஒட்டியிருக்கிறான்.

என்றோ ஒரு நாள் ஒரு கதையை கவரில் இடுவதற்கு முன்னால், யதேச்சையாய்த் தலைப்பைப் பார்த்தபோது, அவன் பெயர் இருந்தது. அவனுக்கே ஆச்சரியமாகிவிட்டது. என் பெயரில் ஒரு கதையா. அந்த நினைப்பே சுகமாய் இருந்தது. ஆர்வமாய்ப் படிக்க ஆரம்பித்தான். சுமாராக வளர்ந்து சப்பென்று முடிந்தது கதை என்றாலும், கதாநாயகனுக்கு அவன் பெயர் இருந்தது அவனுக்கு ரொம்ப பிடித்திருந்தது. அந்தக்



''பத்து வருஷம் முன்னாடி நடக்கற மாதிரி ஒரு கதை எழுதணும். அப்போ பொம்பளைங்க என்ன மாதிரி சேலை உடுத்திக்கிட்டு இருப்பாங்க, கொஞ்சம் சொல்லேன்!''

''இப்ப உடுத்திக்கிட்டு இருக்கேனே இந்தப் புடைவை மாதிரிதான்!''

– கற்பகம்



கதையைத் திருப்பி அனுப்பாமல் அவனே வீட்டுக்குக் கொண்டு போய் வைத்துக் கொண்டு விட்டான்.

இப்படி ஆரம்பித்த கதை படிக்கிற பழக்கம், மெதுவாய் அவனை ஆக்ரமித்தது. கதைகளை உறையில் இட்டு விட்டு ஒட்டாமல் வீட்டுக்குக் கொண்டு வர ஆரம்பித்தான். இரவு உட்கார்ந்து எல்லா கதைகளையும் நிதானமாய்ப் படித்துவிட்டு, காலை அலுவலகம் போகிற வழியில் தபாலில் சேர்க்கலானான்.

முதலில் எந்தக் கதையும் பிடிக்கவில்லை. 'என்ன எழுதியிருக்கான்? திருப்பி அனுப்பற கதைங்கிறது சரியாத்தான் இருக்கும்போல' என்று நினைத்துக் கொண்டான். போகப் போக அதிலேயே ஒரு சுவாரஸ்யம் தட்டினது. 'இந்தக் கதையை ஏன் திருப்பி அனுப்பச் சொல்லிட்டாங்க? என்ன தப்பு அதிலே' என்று யோசிக்க ஆரம்பித்தான். வசனங்கள் அலுப்புத் தட்டுகிறது, கதை நம்பும்படியாய் இல்லை, நிறைய ஆங்கில வார்த்தைகள் என்று அவனுக்குத் தோன்றின காரணங்களை அவனே சொல்லிக் கொண்டான். தன் புதுப் புலமையில் அவனுக்கு மிகப் பெருமையாய் இருந்தது.

**கொ**ஞ்சம் கொஞ்சமாய், நிராகரிக்கப்பட்ட அந்தக் கதைகள் அவனுக்குப் பிடித்துப் போயின. அவன் பணிபுரிகிற வார இதழ் ஒவ்வொரு வாரமும் அச்சானதும், அலுவலகத்தில் எல்லோருக்கும் ஆளுக்கொரு பிரதி கொடுப்பார்கள். முன்பெல்லாம் எப்போதாவது அதில் ஒரு பக்கக் கதையோ சினிமா பக்கமோ வாசிப்பான், இப்போது அதிலெல்லாம் ஆர்வம் போய்விட்டது மாறாக, திருப்பியனுப்புவதற்கென்று வந்த கதைகள்தான் பிடித்தது. நிராகரிக்கப்பட்ட கதைகள் என்பதாலேயே அவை மேல் யாரேனும் அன்பு காட்ட வேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது. என்னதான் மோசமாய் இருந்தாலும், ஒரு வரி விடாது அவற்றைப் படித்துவிட்டுத் தான் திருப்பி அனுப்ப ஆரம்பித்தான். பள்ளியில் அதிகம் படிக்கவில்லையே என்று அவனுக்கிருந்த கவலைகூட இப்போது போய்விட்டதாய்த் தோன்றியது.

அவன் ராத்திரியெல்லாம் கண்விழித்துப் படித்துக் கொண்டிருப்பது பார்த்து அம்மா கவலைப்பட ஆரம்பித்தாள், 'ஒரு கால்கட்டு போட்டாதான் பய சரிப்படுவான்' என்று அக்கம் பக்கமெல்லாம் சொன்னார்கள். அவளும் தரகரிடமும், தெரிந்தவர்களிடமும் சொல்லி சில இடங்கள் பார்க்கலானாள். அவனுக்கு அதிலெல்லாம் விருப்பம் இருக்கவில்லை. 'என் சம்பளத்துக்கு எவ என்னைக் கட்டுவா' என்று அம்மாவிடம் சொல்லிப் பார்த்தான். அம்மா கேட்கவில்லை. பேசாமல் இருந்துவிட்டான்.

**அ**ன்று காலைதான் தரகர் வீட்டுக்கு வந்து ஒரு பெண்ணைப் பற்றிச் சொன்னார். பெண் பத்தாவது படித்திருக்கிறதாம், தையல் வேலை தெரியுமாம், கொஞ்சம் ஏழ்மையான குடும்பம், ஓரளவுதான் செய்வார்கள் என்றார். 'இன்னிக்குச் சாயந்திரம் பொண்ணு பார்க்க அழைச்சுண்டு வரதா சொல்லியிருக்கேன்' என்றார். அம்மா அவனை அலுவலகத்திலிருந்து சீக்கிரம் வரச் சொன்னாள். வெறுமனே தலையாட்டிவிட்டுக் கிளம்பினான்.

அலுவலகம் போகிற பஸ்ஸில் அந்தப் பெண்ணைப் பற்றி மெலிதாய்க் கற்பனைத்தான். எப்படி இருப்பாள்? சிவப்பாய், அழகாய், அருவி போல் தலைமுடியில் ஒரு கற்றை நெற்றியில் ஓட, ஒரு பெண் முகம் மனதுள் ஓடிற்று. அவள் ஃபோட்டோ கேட்டிருக்கலாமே தரகரிடம். நேற்று படித்த ஒரு கதையில் பார்க்காமல் காதலித்த ஒரு ஜோடி ஞாபகம் வந்தது. வெட்கமாய்ச் சிரித்துக் கொண்டான். அந்தக் கதையைத் திருப்பி

அனுப்புவதில் அவனுக்குச் சம்மதமே இருக்கவில்லை, ஆனாலும் என்ன செய்ய?

அன்று மாலை நாலு மணிக்கே வீட்டுக்குக் கிளம்பினான். வாசலுக்குப் போகுமுன் ஃபோன் வந்தது- 'உனக்குத்தாம்பா' என்றார்கள். எனக்கா, யாரது? புரியாமல் காதில் வைத்தபோது ஒரு கீச்சுக் குரல் அவன் பெயர் சொல்லி அழைத்தது. யாராய் இருக்கும்?

"நான்தாங்க பேசறேன்."

"என் பேர் தேவி" என்றாள். யார் தேவி?

சட்டென்று நினைவு வந்தது, மாலை பெண் பார்க்கப் போவதாய் தரகர் சொன்ன பெண்ணின் பெயர். இவள் எதற்கு ஃபோனில்?

"என்னைத் தெரியுதா? இன்னிக்கு சாயந்தரம் நீங்க என்னை பெண் பார்க்க வரதா இருக்கீங்க." அவளே அறிமுகப் படுத்திக் கொண்டாள்.

குழப்பத்தை மறைத்துக் கொண்டு, "தெரியுது, சொல்லுங்க" என்றான்.

"ஒரு விஷயம் உங்ககிட்டே சொல்லணும். தப்பா நினைச்சுக்கக் கூடாது", அவன் பேசுவதற்குள் அவளே தொடர்ந்து பேசினாள், "தயவு செஞ்சு நீங்க இன்னிக்கு எங்க வீட்டுக்கு வர வேண்டாம்" என்றாள் தடாலென்று.

அவனுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை "எ.. எ.. என்ன சொல்றீங்க?" என்றான் தட்டுத் தடுமாறி. இந்தப் பெண் ஏற்கெனவே யாரையோ காதலித்திருக்குமோ? முட்டாள் தரகன் என்னை மாட்டி விடப் பார்த்தானே.

"ஆமாங்க, தயவு செஞ்சு வராதீங்க."

"கொஞ்சம் புரியும்படியாச் சொல்லுங்க." அவனுக்கு உடல் முழுக்க வியர்த்தது.

"அதான் சொன்னேனேங்க. நீங்க வர வேண்டாம். வந்தா உங்களுக்கு ஏமாற்றம் தான் மிஞ்சும். என்னைப் பற்றி நீங்க என்னவெல்லாம் கற்பனை செஞ்சு வெச்சிருக்கீங்களோ எனக்குத் தெரியாது. ஆனா உங்க கற்பனையிலே ஒரு சதவீதம்கூட நான் இருக்க மாட்டேன். நல்ல கறுப்பு, முகம் முழுக்க பருவும் பள்ளமும், பத்தாக்குறைக்கு முன் பல் இரண்டும் நல்லா தூக்கலா இருக்கு. இப்போதான் க்ளிப் போட்டிருக்கேன், ஒல்லி, நோஞ்சான் மாதிரி உடம்பு, சின்ன வயசிலே கால்ல அடிபட்டிருக்கு, அதால ஒரு மாதிரி சாஞ்சு, சாஞ்சுதான் நடப்பேன். சுருக்கமா சொல்லணும்னா, எந்த ஆம்பளைக்கும் பார்க்கக்கூட பிடிக்காத மாதிரியா இருப்பேன்."

"நீங்க நிஜமாத்தான் சொல்றீங்களா?" அவசரமாய்க் கேட்டான்.

"ஆமாங்க, இதெல்லாம் சும்மா சொல்றேன்னு நினைக்காதீங்க. எல்லாத்துக்கும் சாட்சி இருக்கு. இதுவரைக்கும் பதினெட்டு மாப்பிள்ளைகள் என்னைப் பார்க்க வந்துட்டு, பொண்ணு பிடிக்கலைன்னு சொல்லிட்டுப் போயிட்டாங்க. நீங்க பத்தொன்பதாவது."

கடைசி வாக்கியத்தில் அவள் அழுதது போலிருந்தது. அவன் பேசுவதற்குள் மறுபடி அவளே பேசினாள் "எங்க அம்மா அப்பாகிட்டே நான் எவ்னோ சொன்னாலும் கேட்க மாட்டேங்கறாங்க. அதான் உங்களுக்கு ஃபோன் பண்ணினேன். ப்ளீஸ், நீங்க வர வேண்டாம். இன்னொரு தடவை என்னை யாராவது பிடிக்கலைன்னு சொல்லிட்டா நான் தற்கொலை பண்ணிக்கிட்டாலும் பண்ணிக்குவேன்." இந்த முறை நிஜமாகவே அழுதாள்.


அவன் கொஞ்சமே யோசித்தான், கையிலிருந்த நிராகரிக்கப்பட்ட கதைக் கற்றைகளைப் பார்த்துக் கொண்டே சொன்னான், "கவலைப் படாதீங்க. நான் உங்களை நிச்சயமா கல்யாணம் பண்ணிக்கறேன்."



"ராமு கண்ணா! நாளைக்கு பாட்டி ஊருக்குப் போறேனுட்டு வருத்தமாக இருக்காடா செல்லம்?"

"ரொம்பவே பாட்டி! நீ இன்னிக்குப் போறேனிட்டு இல்ல நினைச்சுக்கிட்டு இருந்தேன்!"

– கோவை



மாணிக்க வாசகர் அருளிய **திருவாசகம்**

விலை ரூ. 100/-

(மூலமும் தெளிவுரையும்) புலவர் கருப்பூர் மு.அண்ணாமலை அவர்கள் இனிய எளிய நடையில் அற்புதமான உரை விளக்கம் எழுதியுள்ளார்கள்.

| ஜோதிட நூல்கள் | | மருத்துவம் யோகாசனம் | |
|---|---|---|---|
| மகாகவி காளிதாசரின் உத்தர காலாமிர்தம் | 200.00 | டென்சனைப் போக்க வழிகள் | 25.00 |
| அனுபவ மனை சாஸ்திரம் | 50.00 | மருந்தில்லாத மனநலமருத்துவம் | 40.00 |
| ஜோதிட ரகசியங்கள் | 20.00 | இளமைக்கு ரகசிய வழிகள் | 50.00 |
| ஜோதிட இரத்தினம் 108 | 25.00 | யோகா சிகிச்சையும் செய்யும் முறையும் | 40.00 |
| திருமண யோகமும் செவ்வாய் தோஷ பரிகாரங்களும் | 40.00 | ஆரோக்கிய வாழ்வுக்கு யோகாசனங்கள் | 20.00 |
| வாழ்க்கைத்துணை அமையும் யோகம் | 40.00 | | |

**பக்தி நூல்கள்**

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ ராமாநுஜர் | 70.00 | ஸ்ரீ விஷ்ணு புராணம் | 40.00 |
| ஸ்ரீ விநாயக புராணம் | 85.00 | ஸ்ரீ காயத்ரி மஹாத்மியம் | 27.00 |

VPPயில் புத்தகங்களைப் பெற தெளிவான முகவரியுடன் தேவையான புத்தகங்களுக்கு எழுதுங்கள்.
உங்கள் ஊர் புத்தகக் கடைகளிலும் கிடைக்கின்றது.

குமரன் பதிப்பகம்

## குமரன் பதிப்பகம்

2, முத்துகிருஷ்ணன் தெரு, பாண்டிபஜார் அருகில்,
தியாகராயநகர், சென்னை–600 017. ✆: 8264046





# S.V.முதியோர் இல்லம்



இங்கு முதியோர்களுக்கு இலவச மருத்துவமனை, ஆரம்பிக்கப்பட்டு அனைவரையும் தனித்தனியாக பரிசோதனை செய்து, உடல் ஆரோக்கியம் கண்காணிக்கப் படுகிறது. படுத்த படுக்கையில் உள்ள முதியோர்கள் அனைவரையும் 24 மணி நேரமும் நர்சுகளும், உதவியாளர்களும் கவனித்துக் கொள்கிறார்கள். எமர்ஜென்சி உபகரணங்கள் உள்ளன.

மனச்சிதைவு, மனவளர்ச்சி குன்றிய முதியோர்கள் மற்றும் எல்லா வயது ஆண்/பெண் நோயாளிகளுக்கென்று தனி இல்லம் மருத்துவ வசதியுடன் செயல்பட்டு வருகிறது.

எல்லா வயது உட்பட்ட அதிக பட்ச மனநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு (ஆண், பெண் இருபாலரும்) சிறப்பு பாதுகாப்பு வசதியுடன் முற்றிலும் இலவச மருத்துவ வசதியுடன் தனித் தனி இல்லம் செயல்படுகிறது.

உங்கள் பிறந்த நாள் மற்றும் சிறப்பு நாட்களில் நீங்கள் அளிக்கும் ஒரு சிறிய நன்கொடைத் தொகை எங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்கள் மருத்துவ வசதிக்கு பயன்படுத்துவதுடன், அவர்கள் வாழ்க்கையை காப்பாற்றிய நல்லாசி உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கும் மிகப் பெரிய பரிசாகவும் அமையும்.

*முதியோர் சேவை பெரியது!*

நன்கொடைக்கு வருமானவரி விலக்கு (80G, Income Tax Excemption) உண்டு

**S.V. HOME FOR AGED**
#8, Janakiraman Colony, Near Arumbakkam Bus Stand,
Arumbakkam, Chennai - 600 106.
Phone: 475 5700; 475 1356. Pager : 9610 - 114668
Web Page : www.svhome.org
Email: svhome@svhome.org




## இருபத்து ஒன்பதாம் அத்தியாயம்

## சந்தேக விபரீதம்

பொன்னியின் செல்வர் அரண்மனைக்கு உள்ளே சென்ற பிறகு, காலாந்தக கண்டர் அரண்மனை வாசலில் வந்து சேர்ந்துகொண்டிருந்த வேளக்காரப் படை வீரர்களை நெருங்கினார்.

"இது என்ன கூச்சல்? அரண்மனைக்குள்ளே சக்கரவர்த்தி நோயுடன் படுத்திருப்பது உங்களுக்குத் தெரியாதா? கோட்டையைச் சுற்றிப் பகைவர் படை சூழ்ந்திருப்பது தெரியாதா?" என்று கடுமை தொனிக்கும் குரலில் கேட்டார்.

வேளக்காரப் படையின் தலைவன், "ஐயா! கோட்டையைச் சூழ்ந்திருப்பவர்கள் பகைவர்கள்தானா? கொடும்பாளூர்ப் பெரிய வேளார் நமக்குப் பகைவர் ஆனது எப்படி?" என்று கேட்டான்.

சின்னப் பழுவேட்டரையர் பொங்கி வந்த கோபத்தை அடக்கிக்கொண்டு, "அதை அவரிடந்தான் கேட்க வேண்டும்! பகைவர் இல்லையென்றால், எதற்காக சைன்யத்துடன் வந்து கோட்டையை முற்றுகையிட்டிருக்கிறார்?" என்று கேட்டார்.

"சின்ன இளவரசரைச் சிம்மாசனத்தில் ஏற்றி முடிசூட்டுவதற்காக என்று கேள்விப்படுகிறோம்" என்றான் வேளக்காரப் படைத்தலைவன்.

"அது உங்களுக்கெல்லாம் சம்மதமா?"

**அமரர் கல்கி**

என்று சின்னப்பழுவேட்டரையர் கேட்டார்.

வேளக்காரப் படைத் தலைவன் தன் வீரர்களைத் திரும்பிப் பார்த்து, "நீங்களே சொல்லுங்கள்!" என்றான்.

வீரர்கள் உடனே "சம்மதம்! சம்மதம்! பொன்னியின் செல்வர் வாழ்க! ஈழங் கொண்ட இளவரசர் வாழ்க!" என்று கோஷித்தார்கள்.

இம்முறை அந்தக் கோஷம் முன்னை விட அதிக வலுவுடையதாயிருந்தது.

சின்னப் பழுவேட்டரையரின் முகம் சிவந்தது. மீசை துடித்தது. ஆயினும் பல்லைக் கடித்துக்கொண்டு, "முடிசூட்டுவது பெரிய வேளாரின் இஷ்டத்தைப் பொறுத்ததா? அல்லது உங்கள் விருப்பத்தைப் பொறுத்ததா? சக்கரவர்த்தியின் விருப்பத்துக்கு மதிப்பு ஒன்றும் இல்லையா?" என்று கேட்டார்.

வீரர்களில் ஒருவன் "தளபதி! சக்கரவர்த்தி சௌக்கியமாயிருக்கிறாரா! நிச்சயந்தானா?" என்று கேட்டான்.

"இது என்ன கேள்வி?" என்று காலாந்தகர் சீறினார்.

"சக்கரவர்த்தியைப் பற்றி ஊரில் ஏதேதோ வதந்தி பரவியிருக்கிறது. நாங்களும் அவரை இன்று பார்க்க முடியவில்லை! அதனால் அவருடைய சுகத்தைப் பற்றி எல்லாரும் மிக்க கவலை அடைந்திருக்கிறோம்!" என்று வேளக்காரப் படை வீரர்களின் தலைவன் கூறினான்.

"சக்கரவர்த்தியை நீங்கள் பார்க்க முடியாத காரணம் முன்னமே நான் சொல்லவில்லையா? சக்கரவர்த்தியின் மனக்குழப்பம் இன்று அதிகமாயிருந்தது. யாரையும் பார்ப்பதற்கு அவர் விரும்பவில்லை. சபா மண்டபத்திற்கு வருவதற்கும் மறுத்துவிட்டார்..."

"சக்கரவர்த்தியின் மனக் குழப்பத்திற்குக் காரணம் என்ன? ஏன் எங்களுக்குத் தரிசனம் அளிப்பதற்கு மறுக்க வேண்டும்? நாங்கள் அதையாவது தெரிந்து கொள்ளலாம் அல்லவா?"

"நல்லது; சொல்லுகிறேன். ஈழத்துக்குச் சென்றிருந்த இளவரசரைப் பற்றி ஒன்றும் தெரியாமலிருந்ததுதான் சக்கரவர்த்தியின் கவலை அதிகமானதற்குக் காரணம். இப்போது இளவரசரே வந்து விட்டபடியால்..."

"இளவரசரை நாங்கள் பார்க்க வேண்டும். நன்றாக வெளிச்சத்தில் பார்க்க வேண்டும்!" என்று அந்தப் படையினரில் ஒரு வீரன் கூறினான்.

"ஆமாம்; பார்க்க வேண்டும்! ஈழங் கொண்ட இளவரசர் வாழ்க!" என்று எல்லாரும் சேர்ந்து கூவினார்கள்.

"இளவரசர் முதலில் சக்கரவர்த்தியைத் தரிசிக்க வேண்டும் அல்லவா? பிறகு இஷ்டப்பட்டால் உங்களையும் வந்து பார்ப்பார்!"

"நிச்சயந்தானா? ஒருவேளை பாதாளச் சிறைக்கு அனுப்பப்படுவாரா?"

வேறொரு நாளாக, வேறொரு சந்தர்ப்பமாக இருந்தால், வேளக்காரப் படையினர் இவ்வளவு துடுக்காகப் பேசியதற்குச் சின்னப் பழுவேட்டரையரின் வீரர்கள் அவர்கள் மீது போர் தொடுத்திருப்பார்கள்; பெரிய ரகளையாகப் போயிருக்கும். ஆனால் இளவரசரின் திருமுகத்தைச் சற்றுமுன் பார்த்த காரணத்தினாலோ, என்னமோ, காலாந்தக கண்டரின் வீரர்களும் மௌனமாக நின்றுகொண்டிருந்தார்கள்.

சின்னப் பழுவேட்டரையருடைய கை அவருடைய உடை வாளை நாடியது. மேற்கண்டவாறு கேட்ட வீரனை ஒரே வெட்டில் வெட்டிக் கொன்றுவிட வேண்டுமென்று ஒருகணம் எண்ணினார். உடனே அந்தக் கோபத்தைச் சமாளித்துக் கொண்டு உரத்துச் சிரித்தார்.

"இவன் கேட்ட கேள்வி உங்கள் காதிலெல்லாம் விழுந்ததல்லவா? இளவரசர் பாதாளச் சிறைக்கு அனுப்பப் படுவாரா என்று கேட்கிறான். நல்லது; இளவரசரைச் சிங்காதனத்தில் ஏற்றி முடிசூட்டுவதோ, பாதாளச் சிறைக்கு அனுப்புவதோ என்னுடைய அதிகாரத்தில் இல்லை. சக்கரவர்த்தியின் விருப்பத்தின்படி நடக்கும். இளவரசரைப் பாதா

ளச் சிறைக்குக் கொண்டு போவதாயிருந் தாலும், இந்த வழியேதான் கொண்டு போக வேண்டும். அப்போது நீங்கள் அவரைப் பார்த்துக் கொள்ளலாம்!'' என்று காலாந்தக கண்டர் கண்களில் கனல் பறக்கக் கூறிவிட்டு, அரண் மனைப் பக்கம் திரும்பினார். வீரர்கள் மீண்டும் கோஷமிட்டதையும் பொருட் படுத்தாமல் அரண்மனை முன் வாசலை நோக்கிச் சென்றார்.

அங்கே வாசற்படிக்கு அருகில் பூங் குழலி தன்னந் தனியாக நின்றுகொண் டிருப்பதைக் கண்டார்.

"பெண்ணே! நீ ஏன் இங்கே நின்று கொண்டிருக்கிறாய்? உன்னை உள்ளே வர வேண்டாம் என்று தடுத்து விட் டார்களா?'' என்று கேட்டார்.

''என்னை யாரும் தடுக்கவில்லை; நானாகவே நின்று விட்டேன், ஐயா!'' என்றாள் பூங்குழலி.

"ஏன்?"

''வெகுநாட்களாகப் பிரிந்திருந்த தந் தையும் மகனும் சந்திக்கும் வேளையில் எனக்கு என்ன அங்கே வேலை?"

"போகட்டும்; நீயாவது சக்கரவர்த்தி உயிரோடு இருக்கிறார் என்று நம்பு கிறாயே, அந்த மட்டில் சந்தோஷம்!"

"நம்புவது மட்டுமில்லை. சக்கரவர்த்தி சௌக்கியமாயிருப்பதைக் கண்ணா லேயே பார்த்துவிட்டுத் தான் திரும்பி வந்தேன்.''

"அதோ நிற்கிறார்களே, அந்த வேளக் காரப் படையாரிடம் நீ பார்த்ததைச் சொல்! அவர்கள் சந்தேகப்படுவதாகத் தோன்றுகிறது!'' என்றார்.

"அவர்களுடைய சந்தேகத்துக்கு இந்த நிமிஷம் வரையில் ஆதாரம் இல்லை. அடுத்த நிமிஷம் அது உண்மையாகாது என்று யார் சொல்ல முடியும்?"

"பெண்ணே! நீயும் சேர்ந்து என்னைக் கலவரப் படுத்தப் பார்க்கிறாயா? உங்கள் எல்லாருக்கும் பைத்தியம் பிடித்து விட்டதா?'' என்று கேட்டார்.

"தளபதி! என்னைப் பலர் 'பைத்தியம்' என்று சொல்லுவதுண்டு. நானே என் னைப் பைத்தியம் என்று சொல்லிக் கொள்வதுமுண்டு. ஆனால் இந்தப் பைத் தியத்தின் யோசனையைக் கேட்டபடி யினால்தான் இன்று இளவரசர் இந்தக் கோட்டைக்குள் அபாயம் இன்றிப் புக முடிந்தது. சக்கரவர்த்தி உயிரோடிருக்கும் போதே அவரைச் சந்திக்கவும் முடிந் தது....''

"ஆகா! இது என்ன? சக்கரவர்த்தியின் உயிருக்கு நீயும் கெடு வைக்கிறாய் போலிருக்கிறதே! மூட ஜனங்களும் முட்டாள் ஜோசியர்களும் உளறுவதைக் கேட்டு நீயும் பிதற்றுகிறாயா? அல் லது உனக்கு வேறு ஏதேனும் தெரி யுமா?"

"ஜனங்களும் ஜோதிடர்களும் மட் டுந்தானா கெடு வைக்கிறார்கள்? தங்கள் தமையனார் சொல்லி அனுப்பிய செய் தியைச் சற்று முன் கேட்டீர்களே?"

''அது உண்மை என்பது என்ன நிச்சயம்?'' என்றார் காலாந்தக கண்டர்.

"தளபதி! கொடும்பாளூர் இளவரசி எதற்காகப் பொய் சொல்ல வேண்டும்?''

"யார் கண்டது? அடுத்தாற் போல் சிங் காதனம் ஏறிப் பட்ட மகிஷியாகும் ஆசையிருக்கலாம்...''

''தளபதி! நானும் அப்படித்தான் எண்ணியிருந்தேன். இளவரசி இன்று காலையில் செய்த சபதத்தைக் கேட்ட பிறகு என் எண்ணத்தை மாற்றிக்கொண் டேன்'' என்றாள் பூங்குழலி.

"பெண்ணே! ஒருவேளை உனக்கே அத்தகைய ஆசை இருக்கிறதா, என்ன?'' என்று கேட்டுவிட்டுச் சின்னப் பழுவேட் டரையர் இலேசாக நகைத்தார்.

"தளபதி! உண்மையில் நான் பைத் தியக்காரிதான்! தங்களிடம் பேச நின்றேன் அல்லவா?'' என்று கூறிவிட்டுப் பூங்குழலி திரும்பிப் போக யத்தனித்தாள்.

கா லாந்தக கண்டரிடம் உடனே ஒரு மாறுதல் காணப்பட் டது.

"பெண்ணே! கோபித்துக் கொள்ளாதே! நீ சொல்ல வந்ததைச் சொல்லி விட்டுப் போ!'' என்றார்.

பூங்குழலி மறுபடியும் திரும்பி, "ஆம்;

சொல்லத்தான் வேண்டும். இல்லாவிடில் பின்னால் நானும் வருத்தப்படுவேன்; தாங்களும் வருந்தும்படி நேரிடும். ஐயா! சக்கரவர்த்தியின் உயிருக்கு ஏதாவது அபாயம் நேர்ந்தால் நாடு நகரமெல்லாம் தங்கள் பேரில்தான் பழி சொல்லும். தங்களுடைய வீரர்களே கூடச் சொல்லுவார்கள்!'' என்றாள்.

சின்னப் பழுவேட்டரையரின் முகம் சுருங்கிற்று. ''அப்படி ஏதாவது நேர்ந்து விட்டால் மற்றவர்கள் பழி சொல்லும் வரையில் காத்திருக்க மாட்டேன். பழிச் சொல் காதில் விழுவதற்குள்ளே என் உயிர் பிரிந்து விடும்! இந்த வேளைக்காரப் படையினர் துர்க்கா பரமேசுவரி கோவிலில் சத்தியம் செய்தபோது, எல்லாருக்கும் முதலில் சத்தியம் செய்து வழி காட்டியவன் நான்!'' என்றார்.

''அதில் என்ன பயன்? சோழ ராஜ்யம் சக்கரவர்த்தியையும் இழந்து ஒரு மகா வீரரையும் இழந்து விடும்! அதைக் காட்டிலும் முன் ஜாக்கிரதையாக இருப்பது நல்லதல்லவா?''

''பெண்ணே! நான் முன் ஜாக்கிரதையாக இல்லை என்றா சொல்லுகிறாய்? இதோ இந்த அரண்மனையைச் சுற்றி இவ்வளவு வீரர்கள் கண் கொட்டாமல் நின்று காத்து வருகிறார்களே! எதற்காக? முதன் மந்திரி அநிருத்தர்கூட நான் அறியாமல் அரண்மனைக்குள்ளே போக முடியாது! தெரியுமா?''

''தெரியும், தளபதி! ஆனால் அரண்மனைக்குள்ளே இருந்தும் அபாயம் வரலாம் அல்லவா?''

''என்ன பிதற்றல்? அரண்மனைப் பெண்கள் சக்கரவர்த்திக்கு விஷங் கொடுத்துக் கொன்று விடுவார்கள் என்று சொல்லுகிறாயா?... அல்லது ஒருவேளை இப்போது இளவரசருடன் உள்ளே போனாளே, அந்தக் கொடும்பாளூர்ப் பெண்ணின் பேரில் சந்தேகப் படுகிறாயா?'' என்றார்.

''தெய்வமே! அந்தச் சாதுப் பெண்ணின் பேரில் சந்தேகப்படுகிறவர்களுக்கு நல்ல கதி கிடைக்காது. அவளுக்கு அவ்வளவு சாமர்த்தியமும் இல்லை. ஐயா! இந்த அரண்மனைக்குள் வருவதற்குச் சுரங்கப்பாதை ஒன்று இருக்கிறதல்லவா...?''

சின்னப் பழுவேட்டரையர் திடுக்கிட்டு, ''பெண்ணே! அதைப் பற்றி உனக்கு என்ன தெரியும்? எப்படித் தெரியும்? மூன்று நாலு பேரைத் தவிர அந்தப் பாதையைப் பற்றி யாருக்குமே தெரியாதே? தெரிந்தவர்கள் உயிரோடு திரும்பிப் போக முடியாதே?'' என்று பரபரப்புடன் கேட்டார்.

''தளபதி! அதைப் பற்றி இன்று அதிகாலையிலேதான் நான் தெரிந்துகொண்டேன். அங்கே கையில் கூரிய எறி வேலுடன் பாண்டிய நாட்டுச் சதிகாரன் ஒருவன் ஒளிந்துகொண்டிருப்பதையும் பார்த்தேன்...''

''கடவுளே! இது என்ன பயங்கரமான வார்த்தை சொல்லுகிறாய்? அந்தப் பாதை... அந்தப் பாதை... எங்கே போய் முடிகிறது என்று தெரியுமா?''

''பொக்கிஷ நிலவறை வழியாகப் போகிறது!'' என்றாள் பூங்குழலி.

''ஆகா! நீ சொல்வது உண்மையாக இருக்கலாம். மனிதப் பெண் உருக்கொண்ட அந்த மாய மோகினியின் வேலைதான் இது! என் தமையனை அடிமை கொண்ட பெண் பேயின் வேலைதான் இது. ஐயோ! எத்தனை தடவை நான் எச்சரித்தேன்? பெண்ணே! நீ சொல்வது சத்தியமா? நீயே பார்த்தாயா? அந்தப் பாதை இருக்குமிடம் உனக்கு எப்படித் தெரிந்தது...?''

''என் அத்தை இன்று காலையில் அழைத்துப் போனபோது தெரிந்தது...''

''அவள் யார் உன் அத்தை?''

''முதன்மந்திரியின் கட்டளையின் பேரில் தாங்கள் அனுப்பிய பல்லக்கில் கோடிக்கரையிலிருந்து கொண்டு வரப்பட்டவள்தான், ஐயா! நாம் இதைப் பற்றி மேலும் இங்கே பேசிக் கொண்டேயிருக்கும்போது...''

''உண்மைதான்! நான் உடனே பெரிய பழுவூர் அரண்மனைக்குப் போய் வேண்டிய ஏற்பாடு செய்து விட்டு வருகிறேன்.

அதற்குள் நீ...''

"நான் இந்தப் பக்கத்து முனையில் நின்று பார்த்துக்கொள்கிறேன்..."

"ஆகா! உன்னை நான் எப்படி நம்புவது? நீ அந்தப் பாண்டிய நாட்டுச் சதிகாரர்களுக்கு உடந்தையானவள் இல்லை என்பது என்ன நிச்சயம்? என்னைப் போக்குக் காட்டி ஏமாற்றி விட்டு...''


''தளபதி அப்படியானால் என்னுடன் தாங்களும் வாருங்கள்! ஒரு தீவர்த்தி எடுத்துக் கொண்டு வாருங்கள்! இரண்டு பேருமாகப் போய்ப் பார்ப்போம்! போகும்போது எனக்குத் தெரிந்த மற்ற விவரங்களைச் சொல்கிறேன்...''

சின்னப் பழுவேட்டரையர் உடனே வாசற்பக்கம் சென்ற தமது வீரர்களில் சிலரை அழைத்து அவர்களிடம் ஏதோ சொன்னார். அவர்கள் பழுவூர் அரண்மனைக்குப் போகிறார்கள் என்று பூங்குழலி ஊகித்துக்கொண்டாள். வீரர்களில் ஒருவன் கையில் பிடித்திருந்த தீவர்த்தியைக் கோட்டைத் தளபதி வாங்கிக் கொண்டு வந்தார்.

''பெண்ணே! வழிகாட்டிச் செல்! சொன்னதெல்லாம் உண்மைதானா என்று பார்த்து விடுகிறேன்'' என்றார் காலாந்தக கண்டர்.

அப்போதும் அவர் மனத்தில் பூங்குழலியைப் பற்றிச் சந்தேகம் தீரவில்லை. இந்தப் பெண் பொய்யும் புனைசுருட்டும் சொல்லித் தன்னை ஏமாற்றப் பார்க்கிறாளோ, என்னமோ? சுரங்கப் பாதையைப் பற்றித் தன் மூலமாக அறிந்து கொள்ள விரும்புகிறாளோ, என்னமோ? அதன்





வழியாகக் கொடும்பாளூர் ஆட்களைக் கோட்டைக்குள் விடுவதற்கு இது ஒரு சூழ்ச்சியோ, என்னமோ!.... அப்படியெல்லாம் தன்னை எளிதில் ஏமாற்றிவிட முடியாது. இவள் அத்தகைய உத்தேசத்துடன் தன்னை அழைத்துப் போனால் இவளுக்குச் சரியான தண்டனை விதிக்க வேண்டும். பெரிய பழுவேட்டரையரைப் போல் நான் கூட ஏமாந்து விடுவேனா, என்ன? எல்லாவற்றுக்கும் இவள் முன்னால் போகட்டும். சுரங்கப்பாதை இவளுக்குத் தெரியும் என்பது உண்மைதானா என்று முதலில் தெரிந்து கொள்ளலாம். பிறகு அங்கே சதிகாரர்கள் ஒளிந்திருப்பது உண்மைதானா என்று அறியலாம். அது உண்மையாயிருந்தால், கடவுளே! எத்தகைய ஆபத்து! நல்ல வேளையாக அதைத் தடுப்பதில் கஷ்டம் ஒன்றுமில்லை. பொந்தில் ஒளிந்திருக்கும் நரியைப் பிடிப்பது போல் பிடித்துக் கொன்றுவிடலாம்!...

இவ்வாறு எண்ணமிட்டுக் கொண்டு சின்னப் பழுவேட்டரையர் பூங்குழலிக்குப் பின்னால் நடந்தார். அவளுடைய நடையில் இருந்த வேகத்தைக் குறித்து அதிசயப்பட்டார்.

ஆம்; பூங்குழலியின் உள்ளப் பரபரப்பு அப்போது உச்சி நிலையை அடைந்திருந்தது. அதற்குத் தகுந்தாற்போல் அவளுடைய நடையும் துரிதமாயிருந்தது.

பூங்குழலியின் வாழ்க்கையில் சில காலமாகவே அபூர்வமான சம்பவங்கள் நடந்து கொண்டிருந்தன. ஆனால் அன்றைக்கு நிகழ்ந்தவை போல் அதற்கு முன் என்றும் நடந்ததில்லை.

அதிகாலையில் அவளைத் தூக்கத்

திலிருந்து அத்தை தொட்டு எழுப்பினாள். அவர்கள் படுத்திருந்த அந்தப் புரத்தின் மேல் மச்சுப் பலகணியில் கோரமான முகம் ஒன்று தெரிந்தது. உடனே அது மறைந்தது. மந்தாகினி சத்தம் செய்யாமல் எழுந்து பூங்குழலியையும் அழைத்துக்கொண்டு மூடிக் கிடந்த சிற்ப மண்டபத்துக்குள்ளே சென்றாள். மேல் மச்சுப் பலகணியில் பார்த்த அதே பயங்கரமான முகம் இராவணனுடைய தலைகளுக்கும் அவன் கைகளினால் தாங்கி கொண்டிருந்த கைலையங்கிரிக்கும் நடுவில் ஒருகணம் தெரிந்து மறைந்தது.

இருவரும் அச்சிலையின் அருகில், சென்று பார்த்தார்கள். இராவணன் தலைகளுக்கு இடையே சுரங்க வழி ஒன்று ஆரம்பமாகிச் செல்கிறது என்று பூங்குழலி அறிந்தாள். மந்தாகினி முதலிலும் பூங்குழலி அவளைத் தொடர்ந்தும் அச்சுரங்கப் பாதையில் இறங்கிச் சென்றார்கள். பூங்குழலிக்கு முதலில் கண்ணே தெரியவில்லை. அத்தகைய அந்தகாரம் சுரங்கப்பாதையில் குடிகொண்டிருந்தது. அத்தையின் கையைப் பிடித்துக்கொண்டு தட்டுத் தடுமாறித்தான் போனாள். பாதையிலிருந்து சில படிகள் ஏறி ஒரு மண்டபத்துக்குள் இருவரும் வந்துவிட்டதாகத் தோன்றியது. அங்கேயும் இருளடர்ந்து தானிருந்தது. கையினால் தடவிப் பார்த்துக்கொண்டு தூண்களிலும் சுவர்களிலும் முட்டிக் கொள்ளாமல் போவதே கஷ்டமாயிருந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் மேலே எங்கிருந்தோ சிறிய பலகணிகளின் வழியாகச் சொற்ப வெளிச்சம் வரத் தொடங்கியது. பொழுது நன்றாய்ப் புலர்ந்திருக்க வேண்டும் என்று பூங்குழலி ஊகித்தாள். அத்துடன் அவர்கள் சுற்றி அலைந்து கொண்டிருப்பது பொக்கிஷ நிலவறை என்பதையும் தெரிந்துகொண்டாள். ஆனால் மந்தாகினி அத்தை எந்த மனிதனைத் தேடிக் கொண்டு வந்தாளோ, அவன் அகப்படுவான் என்று தோன்றவில்லை. இருள் சூழ்ந்த அந்த நிலவறையில் ஒளிந்து கொள்வதற்கு எத்தனையோ இடங்கள். அவன் எங்கே ஒளிந்திருக்கிறானோ, என்னமோ? நாம் அவனைக் கண்டுபிடிப்பதற்கு முன்னால், அவன் நம்மைக் கண்டுபிடித்துப் பின்புறமாக வந்து குத்திக் கொன்றாலும் கொன்று விடலாம்; இந்த நிலவறையில் கேள்வி முறை ஒன்றும் இராது.

பூங்குழலி இப்படி எண்ணமிட்டுக் கொண்டிருந்தபோது, மந்தாகினி அவளுடைய அபூர்வமான குரலில் – மானிடக் குரல் என்றோ, பிராணியின் குரல் என்றோ கண்டுபிடிக்க முடியாத குரலில், – கூச்சலிட்டாள். அதைத் தொடர்ந்து பீதி நிறைந்த ஒரு மனிதக் குரல் ஒலமிட்டது. நிழல் போன்ற உருவம் ஒன்று தடதடவென்று ஓடியது. பலகணியில் முகத்தைக் காட்டிய மனிதனாகத்தான் இருக்க வேண்டும் என்று பூங்குழலி தீர்மானித்துக் கொண்டாள். அத்தையின் குரலைக் கேட்டு அவன் பேயோ, பிசாசோ என்று பயந்து ஓடுகிறான் என்று பூங்குழலி அறிந்தாள். இந்த எண்ணம் அவளுக்குச் சிரிப்பை உண்டாக்கியது. சிறிது நேரத்துக்கு ஒருமுறை மீண்டும் மீண்டும் மந்தாகினி அத்தை அம்மாதிரி குரல் கொடுத்து அம்மனிதனை அங்குமிங்கும் தறிகெட்டு ஓடி அலையும்படி செய்தாள். கடைசியாக அவன் ஓடிப் போய் மரக் கதவு ஒன்றில் மோதிக்கொண்டான். பிறகு, அக்கதவைத் தட தடவென்று தட்டினான். விட்டு விட்டு நாலைந்து தடவை தட்டினான். பின்னர் கதவு திறந்தது. திறந்த இடத்தில் பெண் ஒருத்தி நிற்பது தெரிந்தது. அவளிடம் அம்மனிதன் ஏதோ கூறினான். அந்தப் பெண் சிறிது தயங்கியதாகவும், அம் மனிதன் அவளைப் பயமுறுத்தியதாகவும் தோன்றியது. பிறகு அவள் திரும்பிப் போனாள். மனிதன் கதவினருகிலேயே நின்று எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தான். சற்று நேரத்துக்கெல்லாம் அந்தப் பெண் கையில் ஒரு விளக்குடன் வந்து சேர்ந்தாள். இருவரும் நிலவறைக்குள் நுழைந்தார்கள். மந்தாகினி பூங்குழலியையும் கையைப் பிடித்து அழைத்துச்சென்று ஒரு

பெரிய தூணின் மறைவில் நின்றுகொண்டாள். விளக்கு வெளிச்சத்தில் அந்த மனிதனுடைய முகத் தோற்றத்தை அவர்கள் நன்றாகப் பார்த்துக் கொண்டார்கள்.

அந்த மனிதனும் விளக்குக் கொண்டு வந்த பெண்ணும் நிலவறையின் உட்பகுதிக்குச் சென்றார்கள்.


''பேயாவது? பிசாசாவது? நன்றாகப் பீதி அடைந்து போயிருக்கிறாய்! இவ்வளவு பயந்தவன் இந்த மாதிரி காரியத்துக்கு ஏன் வர வேண்டும்?'' என்று அந்தப் பெண் கேட்டது பூங்குழலியின் காதில் நன்றாக விழுந்தது. 'எந்த மாதிரி காரியம்' என்பது அவ்வளவு நன்றாகப் பூங்குழலிக்கு விளங்கவில்லை.

நிலவறைக்குள்ளே விளக்குடன் அவர்கள் மறைந்ததும் மந்தாகினி பூங்குழலியைக் கையைப் பிடித்துக் கரகரவென்று இழுத்துக்கொண்டு போய்த் திறந்திருந்த கதவின் வழியாக வெளியேறினாள். நடைபாதையைக் குறுக்கே நடந்து கடந்து ஒரு பெரிய தோட்டத்துக்குள் அவர்கள் பிரவேசித்தார்கள். அங்கே ஏகாந்தமான ஓரிடத்தில் மந்தாகினி பூங்குழலியிடம் தான் சொல்ல வேண்டியதைச் சமிக்ஞை பாஷையினால் தெரிவித்தாள். "என்னுடைய அந்தியகாலம் நெருங்கிவிட்டது. நான் கடைசியாகக் கண்ணை மூடுவதற்குள்ளே இளவரசனை ஒருமுறை பார்க்க வேண்டும். நீ போய் இச் செய்தியைச் சொல்லி அவனைக் கையோடு அழைத்து வர வேண்டும்'' என்பதுதான் அச்செய்தி.

பூங்குழலி அவளுடைய அத்தையிடம் கொண்டிருந்த அன்பு நாம் நன்கு அறிந்ததே. அம்மாதிரி சமயத்தில் அவளை விட்டு விட்டுப் போகவும் பூங்குழலிக்கு மனம் வரவில்லை; அவள் வார்த்தையைத் தட்டவும் இயலவில்லை. எனினும், அதே சமயத்தில் பொன்னியின் செல்வரைப் பார்ப்பதற்கு இது ஒரு சந்தர்ப்பம் என்னும் எண்ணம் அவளை உடனே முடிவுக்கு வரும்படி செய்தது. அத்தையிடம் விடை பெற்றுக்கொண்டு சென்றாள். தோட்டத்தின் மதில் ஏறிக் குதித்து அப்பால் சென்று தஞ்சை நகரின் கோட்டை வாசலையும் கடந்தாள். அங்கே ஆழ்வார்க்கடியானைச் சந்தித்தாள். அவனும் முதன்மந்திரியின் ஆக்ஞையினால் பொன்னியின் செல்வரைப் பார்ப்பதற்கே போவதாக அறிந்தாள். அந்த வீர வைஷ்ணவனுடைய உதவியினால் அவளுடைய பிரயாணமும் சௌகரியமாக நடந்தது.

அன்றைக்கு அதிர்ஷ்டம் நெடுகிலும் அவள் பக்கம் இருந்தது. குடந்தை ஜோதிடர் வீட்டின் வாசலில் இளையபிராட்டியின் ரதத்தை அவர்கள் கண்டார்கள். இளவரசரைப் பற்றிக் குந்தவை தேவிக்கு ஏதேனும் செய்தி தெரிந்திருக்கலாம் என்று எண்ணி விசாரிப்பதற்காக ஜோதிடர் வீட்டில் நுழைந்தார்கள். அங்கே பெரிய பழுவேட்டரையரின் வாய்மொழியினால் பாண்டிய நாட்டுச் சதிகாரர்களைப் பற்றி அறிய நேர்ந்தது. பொக்கிஷ நிலவறையில் ஒளிந்திருந்தவன் அந்தச் சதிகாரர்களில் ஒருவன்தான் என்பதைப் பூங்குழலி நிச்சயித்துக்கொண்டாள். அதே சமயத்தில், இளவரசருக்கும் சதிகாரர்களின் அபாயம் ஏற்படலாம் என்று அறிந்த அவள் உள்ளம் வேதனைப்பட்டது. வானதி செய்த சபதம் அந்த வேதனைக்கு ஒரு பரிகாரமாயிருந்தது. இளவரசி வானதியைக் காப்பாற்றப் போன இடத்தில் இளவரசரையும் சந்திக்கலாயிற்று.

எல்லாவற்றையும் விட, அவளுக்குத் திருப்தி அளித்த காரியம், தஞ்சாவூருக்குப் போவது பற்றி அவளுடைய யோசனையை இளவரசர் ஏற்றுக்கொண்டதுதான். இலங்கையில் தம்மைத் தெரியப்படுத்திக் கொள்ளாமல் யானைப் பாகனைப் போல் அவர் யாத்திரை செய்ததுண்டு என்பதை அவள் அறிந்திருந்தாள். அங்கே சேநாதிபதியையும் படை வீரர்களையும் அவர் பிரிந்து தன்னை மட்டும் யானை மேல் ஏற்றிக் கொண்டு கடற்கரைக்கு விரைந்து வந்ததையும் அவள் மறந்து விடவில்லை. எனவே, இச்சமயமும், இளவரசர் அதேமுறையைக் கடைப்பிடித்தால் நல்லது என்றும், அவர் தனியாகப் போனால் தஞ்சைக் கோட்டைக்குள் போக இயலாது என்றும், தன்னையும் வானதியையும் அழைத்துப் போனால் யானைப்பாகன் என்று எண்ணி





விட்டு விடுவார்கள் என்றும் சொன்னாள்.

"சமுத்திர குமாரி! நல்ல யோசனை சொன்னாய்! ஒரு பெரிய ராஜ்யத்துக்கு முதன்மந்திரியாக இருக்க நீ தகுந்தவள்!" என்று இளவரசர் கூறிய மொழிகளை நினைத்து நினைத்து அவள் உள்ளம் பூரித்தது.

ஆனால், இவ்விதம் அந்த நிமிஷம் வரையில் அவள் நினைத்தபடியே எல்லாம் நடந்திருந்தும் என்ன உபயோகம்? அவள் எதிர்பார்த்தபடி மந்தாகினி அத்தை சக்கரவர்த்தி படுத்திருந்த அறையில் இல்லை! அவளைப் பற்றி அங்கே யாரிடமும் விசாரிக்கவும் கூடவில்லை. "என்னுடைய இறுதிக்காலம் நெருங்கி விட்டது" என்று அத்தை சமிக்ஞையினால் அறிவித்ததை எண்ணியபோதெல்லாம் பூங்குழலியின் நெஞ்சு பகீர் என்றது. இவ்வளவு சிரமம் எடுத்துச் சாதுர்யமாகப் பேசி இளவரசரை இங்கே அழைத்து வந்திருந்தும் என்ன பயன்? அத்தையைக் காணவில்லையே என்று அவள் நெஞ்சு துடிதுடித்தது. நிலவறையிலேயே இன்னும் இருக்கிறாளோ என்று தோன்றியது. ஒருவேளை அந்தப் பாதகச் சதிகாரனால் அங்கேயே கொல்லப்பட்டிருப்பாளோ என்று எண்ணியபோது அவள் நெஞ்சு பிளந்தே போயிற்று.

சுரங்கப்பாதை வழியாக நிலவறைக்குள் போய்ப் பார்க்க விரும்பினாள். ஆனால் அரண்மனையில் அப்போது இளவரசரின் வரவு காரணமாக ஒரே கோலாகலமாயிருந்தது. குறுக்

கும் நெடுக்குமாகப் பெண்கள் போவதும் வருவதுமாயிருந்தார்கள். கூட்டம் கூட்டமாக வந்து சக்கர வர்த்தி படுத்திருந்த அறையை எட்டிப் பார்த்து விட்டுப் போன வண்ண மிருந்தார்கள். இதற்கிடையில் தான் மட்டும் அந்தப் பழைய சிற்ப மண்டபத்துக்குத் தனியாகப் போவதை யாராவது பார்த்தால் என்ன நினைத்துக்கொள்வார்கள்? அந்தச் சதிகாரன் ஒருவேளை இன்னமும் அங்கே இருந்தால், தான் அவனிடம் தனியாகப் போய் அகப்பட்டுக் கொள்வதும் உசிதமல்ல. எத்தனையோ நெஞ்சத் துணிவுள்ள பூங்குழலிக்கும் அந்த இருளடர்ந்த பொக்கிஷ நிலவறை சிறிது பயத்தை அளித்தது.

ஆகையினாலேயே சின்னப் பழுவேட்டரையரிடம் சொல்லி அவரையும் அழைத்துக்கொண்டு போய் நிலவறையில் தேடிப் பார்க்கத் தீர்மானித்தாள்.

காலாந்தக கண்டரோடு வாதம் செய்து அவர் மனத்தைத் திருப்பி அழைத்துப் போவதற்குச் சிறிது அவகாசம் ஆகிவிட்டது. அதை நினைத்துத்தான் அவள் இப்போது மிக விரைவாக நடந்தாள். விரைவில் ஏதோ விபரீதம் நடக்கப்போகிறது என்று அவளுடைய உள்ளுணர்ச்சி கூறியது. அதனால் தனக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்தால் பாதகமில்லை. அத்தைக்கு ஒன்றும் நேரக்கூடாதென்று மனப்பூர்வமாக விரும்பினாள்.

சிற்ப மண்டபத்துக்குள் பிரவேசிக்கும் சமயத்தில், அரண்மனை மாடத்திலிருந்து ஏதோ கரிய நிழல் விழுவது போலிருந்தது; சுவர் ஓரமாக ஓர் உருவம் போவது போலவுமிருந்தது. அவை உண்மையா அல்லது பிரமையா என்று பார்த்துத் தெளிவதற்காகச் சற்று நின்றாள்.

"பெண்ணே! ஏன் நிற்கிறாய்? பொய் வெளிப்பட்டு விடுமே என்று பயப்படுகிறாயா?" என்று சின்னப் பழுவேட்டரையர் கூறியது காதில் விழுந்ததும், மேலே விரைந்து நடந்தாள்.

சிற்ப மண்டபத்துக்குள் சென்றதும் இராவணன் தலைகளுக்கும் கைலையங்கிரிக்கும் நடுவில் இருந்த துவார வாசலைப் பூங்குழலி சின்னப் பழுவேட்டரையருக்குச் சுட்டிக்காட்டினாள்.

"சரிதான்! இறங்கு முதலில்!" என்றார் கோட்டைத் தளபதி.

ஏனோ பூங்குழலிக்குத் தயக்கம் உண்டாயிற்று. அவள் உடம்பு நடுங்கிற்று.

அதேசமயத்தில் 'கிறீச்' என்று அமானுஷ்யமான குரல் ஒன்று ஓலமிடும் சத்தம் கேட்டது.

அது தன்னுயை அத்தை மந்தாகினியின் குரல் என்பதை உடனே உணர்ந்து கொண்டாள். அந்த ஓலக்குரல் அரண்மனைக்குள்ளே சக்கரவர்த்தி படுத்திருக்கும் அறையிலிருந்து வருகிறது என்பதையும் அறிந்தாள்.

உடனே அவளுடைய தயக்கம தீர்ந்து விட்டது. சின்னப் பழுவேட்டரையரைச் சிறிதும் பொருட்படுத்தாமல் அரண்மனை அந்தப்புரத்தை நோக்கி விரைந்து ஓடினாள். மீண்டும் மீண்டும் அந்தப் பயங்கர ஓலக்குரல் கேட்டுக்கொண்டேயிருந்தது.

சக்கரவர்த்தி படுத்திருந்த அறைக்குள் அவள் பிரவேசித்தபோது, அங்கே தோன்றிய காட்சி அவள் உள்ளத்தில் ஒரு பெரிய சித்திரக் காட்சியைப் போல் பதிந்தது.

சக்கரவர்த்தி சாய்ந்து படுத்த வண்ணம் தமது அருமைக் குமாரன் அருள்மொழியின் கைகளைத் தமது கைகளால் பிடித்துக்கொண்டிருந்தார். அவர்கள் இருவருக்கும் முன்னால் மந்தாகினி அத்தை நின்று ஓலமிட்டாள். ஒரு பக்கத்தில் வானதியும் அவளை மருமகளாகப் பெறுவதற்கிருந்த மலையமான் மகளும் நின்றுகொண்டிருந்தார்கள்.

எல்லாரும் வெறி கொண்டவள் போல் கூச்சலிட்ட மந்தாகினியைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

மேல் மண்டபத்தின் முகப்பிலிருந்து பாய்ந்து வந்த கூரிய வேலை அவர்களில் யாரும் கவனிக்கவில்லை.

பூங்குழலி தன் அத்தையை நோக்கி ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து சென்றாள்.

(தொடரும்)




**இந்திய ஹாக்கி அணியின் கோல்கீப்பராக ஒலிம்பிக்ஸ் உட்பட பல சர்வதேச போட்டிகளில் விளையாடியிருக்கும் முனீர்சேட்டை நாம் மறந்திருக்க வாய்ப்பில்லை. ஹாக்கி ஃபெடரேஷனின் உறுப்பினராக சிட்னிக்கு கிளம்பிக் கொண்டிருக்கும் அவரை கல்கிக்காகச் சந்தித்து உரையாடுகிறார் பிரபல விளையாட்டு கமண்டேடர் டாக்டர் சுமந்த் ராமன்.**




**சுமந்த்:** சிட்னி ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் ஹாக்கியைப் பொறுத்தவரை இந்தியாவின் வெற்றி வாய்ப்பு எப்படி இருக்கிறது?



**முனீர்:** சென்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்திய ஹாக்கி அணி தங்கப்பதக்கம் வென்ற உடனேயே ஒலிம்பிக் போட்டிகளைப் பற்றின எதிர்பார்ப்புகள் உயர ஆரம்பித்து விட்டன. நிச்சயம் முதல் நான்கு இடங்களுக்குள் இந்தியா இடம் பெறும் என்று தோன்றுகிறது.



**சுமந்த்:** கேட்க சந்தோஷமாக இருக்கிறது. எதை வைத்து இவ்வளவு உறுதியாகச் சொல்லுகிறீர்கள்?



**முனீர்:** பங்கேற்கப் போகும் அணிகளை ஒப்பிட்டால் இந்திய அணிக்குதான் அனுபவம் அதிகம். பொது அனுபவம் ஒரு பக்கம் இருக்கட்டும், சென்ற வருடம், பெர்த், பிரிஸ்பேன் என்று ஆஸ்திரேலியாவிலேயே நிறைய டோர்னமண்டுகள் விளையாடி இருக்கிறார்கள். நன்றாகவும் செய்திருக்கிறார்கள். இது வெற்றிக்கு நிச்சயம் உதவும்.

அது மட்டும் அல்லாது இந்திய அணியில் அதிக மாற்றமில்லாமல் இதே ஆட்டக்காரர்கள் தொடர்ந்து 4 வருடங்களாக ஆடி வருகிறார்கள். அதனால் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்துகொண்டு ஆடுவார்கள். டீம் விளையாட்டுகளில் இந்த 'புரிந்து கொள்ளுதல்' தான் வெற்றிக்கு அடிப்படை!



**சுமந்த்:** இந்தியா முதல் நான்கு இடங்களுக்குள் இடம் பெறும் என்று சொன்னீர்கள். மற்ற மூன்று அணிகள் யாராக இருக்கும்?

**முனீர்:** நெதர்லேண்டும் ஆஸ்திரேலியாவும் கண்டிப்பாக இடம் பெறுவார்கள். ஆஸ்திரேலியாவிற்கு 'ஹோம் கிரவுண்டு' என்பதால் கூடுதல் பலம் கிடைத்துவிடும். ஸ்பெயின் அணி எப்போதும் ஆச்சரியப்படும் அளவிற்கு பல விஷயங்கள் வைத்திருப்பார்கள்.



**சுமந்த்:** ஜெர்மனியையும் பாகிஸ்தானையும் விட்டு விட்டீர்களே?



**முனீர்:** காரணத்தோடுதான். இந்த இரு அணிகளும் ஒன்றிரண்டு வருடங்களுக்கு முன்பு இருந்ததுபோல் இப்போது அவ்வளவு வலிமையாக இல்லை.



**சுமந்த்:** இந்திய அணியின் வெற்றியே தன்ராஜ் பிள்ளையை நம்பித்தான் இருக்கிறது என்கிறேன், என்ன சொல்கிறீர்கள்?



**முனீர்:** மறுக்க முடியாத உண்மை. இந்திய அணியை எதிர்த்து ஆடவிருக்கும் அணிகள் இதை நன்கு உணர்ந்து அவரை டைட்டாக மார்க் செய்ய திட்டமிடுவார்கள். தன்ராஜ் பிள்ளையைச் சுற்றி இரண்டு மூன்று ஆட்டக்காரர்களாவது இருக்கும்படி பார்த்துக் கொள்வார்கள். இப்படிச் செய்வதால் ஏற்படப் போகும் இடைவெளிகளை நமது மற்ற ஆட்டக்காரர்கள் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

சமீபத்தில் தன்ராஜிடம் பேசிக் கொண்டிருந்தேன். "நான் எப்போதுமே 'ஃபார்வர்டு'ல் இருக்கப் போவதில்லை; மிட்ஃபீல்டுக்குச் சற்று உள் வாங்கிய மையத்திலிருந்து தான் ஆபரேட் பண்ணப் போகிறேன்" என்று பேச்சுவாக்கில் கூறினார்.

**சுமந்த்:** தன்ராஜ் பிள்ளையைத் தவிர இந்திய அணியின் திறமையான ஆட்டக்காரர்கள் என்று வேறு யாரைச் சொல்வீர்கள்?





**முனீர்:** ரமன்தீப் சிங், முகேஷ் குமார் – ஏன், நமது சென்னையைச் சேர்ந்த மொகமது ரியாஜ். இவர்கள் எல்லாம் திறமை மட்டும் அல்ல, நல்ல அனுபவமும் வாய்ந்தவர்கள்.




**சுமந்த்:** ஆஸ்திரேலிய தட்பவெப்ப நிலை இந்திய அணியின் ஆட்டத்தை எவ்வளவு தூரம் பாதிக்கும்?



**முனீர்:** சிட்னியில் குளிர் ஒன்றும் அதிகமாக இருக்கப் போவதில்லை. அதனால் எந்த பாதிப்பும் ஏற்படாது, கவலைப்படாதீர்கள்.



**சுமந்த்:** டென்னிஸில் நமது வெற்றி வாய்ப்பு எப்படி?



**முனீர்:** லியாண்டரும் மகேஷ்ம் டபுள்ஸ் ஆட்டத்தை வெல்வார்கள் என்று பார்த்தால் இவர்களுக்கிடையே இருக்கும் சண்டை சச்சரவு கெடுத்துவிடும் போலிருக்கிறதே! யு.எஸ். ஓபனில் வேறு தோற்று விட்டார்கள், எனக்குத் துளி கூட நம்பிக்கையில்லை.



**சுமந்த்:** பளு தூக்குதல், தடகளப் போட்டிகள்...?



**முனீர்:** பளு தூக்கும் உலக சாம்பியன்ஷிப் போட்டிகளில், பெண்கள் பிரிவில் இந்தியா வழக்கமாகவே நிறைய பதக்கங்கள் பெறுவது வாஸ்தவம். ஆனால் இந்த வருடம் அத்தனை பதக்கங்கள் கிடைக்குமா என்பது சந்தேகம்தான்.

தடகளப் போட்டிகளைப் பொறுத்தவரை பங்கு பெறும் வீரர்களுக்கே அதிகம் எதிர்பார்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை!



**சுமந்த்:** ஹாக்கி ஒன்றுதான் கை கொடுக்கப் போகிறது என்கிறீர்கள்?

**முனீர் :** தங்கப் பதக்கம் இல்லாவிட்டாலும் ஏதோ ஒரு பதக்கத்தைக் கொண்டு வருவார்கள், பாருங்கள்!

தொகுப்பு : **கே.ஸி.**
படம் : **வெங்கடேஷ்**

# மிக வெகு அன்புடையீர்...

அன்புடையீர்,

வணக்கம்.

தங்கள் நிறுவனத்திலிருந்து வாங்கி வந்த கம்ப்யூட்டரில் ஒரு சிறு கோளாறு. 'ஈ' அடித்தால் 'ஈ' விழுகிறது. ஆகவே தங்களுடைய எஞ்ஜினியரை அனுப்பி வைத்து சரி செய்து கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அன்புடன்,
கி. முருகானந்தம்

பேரன்புடையீர்,

வணக்கம்.

தங்கள் கடிதம் கிடைத்தது. தங்களுடைய கம்ப்யூட்டரில் கோளாறு ஏதுவும் இருக்க நியாயமில்லை. கம்ப்யூட்டர் என்பது கணக்குகள் வைத்திருக்க, பதிவு ஏடுகள் வைத்துக் கொள்ள, இ. மெயில் அனுப்ப என்பதான பல செயல்களில் ஈடுபடவே தவிர, ஈ அடிப்பதற்கு அல்ல. ஈ, எறும்பு, கொசு ஆகியவற்றை அடிக்க, விரட்ட, கொல்ல, கடைகளில் உபகரணங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் இருக்கின்றன. அவற்றை வாங்கி உபயோகிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். ஆகவே, எங்கள் எஞ்ஜினீயர் எவரையும் அனுப்பும் அவசியம் எதுவும் எழவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நலந்தானே?

அன்புடன்,
அனைத்து இந்திய
கம்ப்யூட்டர் லிமிடெட்டுக்காக,
வி.பி. படேல்,
நிர்வாகி.

மிக அன்புடையீர்,

வணக்கம்.

தங்கள் கடிதம் என்னை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. கம்ப்யூட்டரைக் கொண்டு ஈ, எறும்பு, கொசுக்களை அடித்துக் கொல்வதான அளவுக்கு எனக்குப் பைத்தியம் ஏதும் பிடிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கம்ப்யூட்டர் கீ போர்டில் உள்ள 'ஈ' என்ற எழுத்தை அடித்தால் 'ஈ' என்பதான எழுத்து ஸ்கிரீனில் விழுகிறது என்பதைத்தான் கோளாறு என்பதாக என் சென்ற கடிதத்தில் தெரிவித்திருந்தேன். எஞ்ஜினியரை உடனடியாக அனுப்பி வைத்துச் சரி செய்து கொடுப்பீர்கள் என நம்புகிறேன்.

நலந்தான்.

அன்புடன்,
கி. முருகானந்தம்.

மிக வெகு அன்புடையீர்,

வணக்கம்.

தங்களை நாங்கள் தவறாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதை இக்கடிதம் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். இருந்தாலும் எங்கள் ஐயம் தீரவில்லை. கம்ப்யூட்டர் கீ போர்டில் உள்ள 'ஈ' என்பதான பட்டனை அழுத்தினீர்களானால், ஸ்கிரீனில் 'ஈ' என்ற எழுத்துத்தான் விழும். அதே போல, 'ஊ' என்பதான பட்டனை அழுத்தினாலும், 'ஊ' என்பதான எழுத்துதான் ஸ்கிரீனில் தெரியுமே தவிர, 'ஓ' என்பதான எழுத்து தெரியாது. ஆகவே, எங்கள் எஞ்ஜினியரை அனுப்பி வைக்க வேண்டிய அவசியம் ஏதும் எழவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். தேவையானால், மன நல மருத்துவரை அனுப்பி வைக்கிறோம்.

தங்கள் உடல் விரைவில் நலம்பெற எங்கள் வாழ்த்துகள்.

அன்புடன்,

அனைத்து
இந்திய கம்ப்யூட்டர்
லிமிடெட்டுக்காக,
வி.பி. படேல்,
நிர்வாகி.

மிகப் பேரன்புடையீர்,
வணக்கம்.

தங்கள் நிறுவனம் சப்ளை செய்த கம்ப்யூட்டர் என்னைப் பைத்தியக்காரன்

## திருவாழத்தான்

என்பதாகத் தாங்கள் கருதும் அளவுக்குச் செயல்பட்டு இருக்கிறது என்பதையும் புரிந்து கொண்டால் சரி.

நான் என் முந்தைய கடிதங்களில் தெரிவிக்க இருந்தது என்னவெனில், கம்ப்யூட்டரில் 'இ' என்பதான எழுத்தை அழுத்தினால், 'ஈ' என்பதான எழுத்து ஸ்கிரீனில் விழுகிறது என்பதுதான். இப்போதாவது புரிந்து கொண்டு, எஞ்ஜினியரை அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மனநல மருத்துவரை அனுப்ப வேண்டாம். அவர் உங்கள் அலுவலகத்திலேயே இருக்கட்டும்.

அன்புடன்,
இ. முருகானந்தம்.




மிக வெகு பேரன்புடையீர்,
வணக்கம்.

தங்களிடம் உள்ள கோளாறு ஈப்போதுதான் எங்களுக்குத் தெளிவாகப் புரிந்தது. 'ஈ' அடித்தால் 'ஈ' விழுகிறது என்கிறீர்கள். ஈன்றே எங்கள் எஞ்ஜினியரை அனுப்பி வைத்துக் கோளாறைச் சரி செய்கிறோம்.

தங்களைத் தவறாகப் புரிந்து கொண்டதற்காக மன்னிப்புக் கோருகிறோம். ஈனி ஈது போன்ற தவறு நேராது என உறுதி அளிக்கிறோம்.

அன்புடன்,
அனைத்து ஈந்திய கம்ப்யூட்டர்
லிமிடெட்டுக்காக,
வி.பி. படேல்.
நிர்வாகி.

வெகு மிகப் பேரன்புடையீர்,
வணக்கம்.

தங்கள் கடிதம் கிடைத்தது. தயவு செய்து தங்கள் எஞ்ஜினியரை அனுப்ப வேண்டாம். இப்போது 'இ' அடித்தால் அதிசயமாய் 'இ'யே விழுகிறது. 'இ' விழுவதில்லை. தாங்கள் என் கம்ப்யூட்டரிடம் காட்டிய இடுபாட்டுக்கு நன்றி.

அன்புடன்,
இ. முருகானந்தம்.

கடந்த நான்கு வாரங்களாக 'have' என்ற வார்த்தையைச் சூழ்நிலைக்கேற்ப எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதைப் பற்றிப் பார்த்தோம்.

சாப்பிடு என்பதைத் தெரிவிக்க 'have' என்பதைப் பயன்படுத்துகிறோம். 'Have your breakfast' என்றால் காலைச் சிற்றுண்டியைச் சாப்பிடு என்று அர்த்தம்.

இந்த breakfast என்ற வார்த்தையை ப்ரெக்ஃபஸ்ட் என்று உச்சரிக்க வேண்டும்.

நான் இன்னிக்கு மதிய உணவை நாலு மணிக்குத்தான் சாப்பிட்டேன் என்பதை Today I had my lunch only at 4'o clock எனலாம்.

'Just now I had my lunch' என்றால் நான் இப்பொழுதுதான் சாப்பிட்டேன் என்று அர்த்தம். சரி, என்ன சாப்பாடு



# ஆங்கிலமே, அருகில் வா!

ஆச்சா என்று ஒருவரிடம் எப்படி விசாரிப்பீர்கள்?

இது ரொம்ப simple.

"Have you had your meal?" என்று கேட்டால் போதும்.

இதையே இன்னும் சுருக்கமாக

Had your meal? என்றும் கேட்கலாம்.

இதே போல Had your breakfast? Had your lunch? Had your dinner? Had your coffee? என்றெல்லாம் கேட்கலாம். நேரம் காலத்தை அனுசரித்து ஏதாவது ஒன்றை மட்டும் கேளுங்கள்.

வெளியூர் செல்லும் உங்களது நண்பரை வழியனுப்ப இரயில்வே ஸ்டேஷனுக்குப் போயிருக்கிறீர்கள். வண்டி புறப்படப் போகிறது. இத் தருணத்தில் 'Have a nice journey' (ஹாவ் எ

# வி. ராஜகோபாலன்

நைஸ் ஜ(ர்)னி) உனது பயணம் இனிமையாக அமையட்டும் என்று சொல்லுங்கள்.

இதேபோன்று நண்பர்கள் சுற்றுலா செல்லும்போது 'Have a nice trip' என்று சொல்லுங்கள். 'Have a nice time' என்று கூடச் சொல்லலாம்.

காலையில் உங்களது நண்பரைச் சந்தித்து உரையாடிய பிறகு விடை பெறும்போது 'Have a nice day' என்று உங்களது வாழ்த்தைத் தெரிவிக்கலாம்.




☐ தலைமுடி காடா வளந்திருக்கு. மூஞ்சியே வெளில தெரியலை. முதல்ல போய் தலைமுடியை வெட்டிக்கொண்டு வா என்று (சகோதரனிடம்) சொல்லும்போது 'Have your haircut' என்று சொல்லுங்கள்.

☐ என்னோட சைக்கிள் கொஞ்சம் மக்கர் பண்ணுது. அதை ரிப்பேர் பண்ணிக்கிட்டு வா என்பதை 'Have my cycle repaired' என்று சொல்லுங்கள்.

☐ என்ன ஸார், திருப்பதிக்கு கிளம்பிட்டீங்களா, இந்தாங்க, இதை உண்டியல்ல போட்டுடுங்க. போயிட்டு வாங்க. 'Have a nice darshan' (நல்லபடியா தரிசனம் கிடைக்கட்டும்) என்று சொல்லலாம்.




☐ ஸார், இன்னும் இரண்டு மூணு நாள் கொஞ்சம் பிஸியா இருப்பேன். நம்ப ஃபங்ஷனை வெள்ளிக்கிழமையன்னிக்கு வச்சுக்கலாம். இதை 'Let us have the function on Friday' என்று சொல்லலாம்.

☐ ஸார், நீங்க அங்கே போய் உட்காருங்க என்பதை 'Have your seat over there' என்று சொல்லலாம்.

கிட்டத்தட்ட ஒரு மாசமா இந்த 'have' பத்தியே பார்த்து விட்டோம்.

Let us meet next week.

Have a nice weekend!

டம்.... என்ற பெருத்த ஓசை. பழுக்கக் காய்ந்திருந்த இரும்புக்கம்பி மீது சம்மட்டி இறங்குகிறது. கம்பி சப்பையாகிவிட உடனே மின்னல் வேகத்தில் இன்னொரு அடி. கம்பியின் முனை திருப்பித் திருப்பிக் காட்டப்பட, தொடர்ந்து அடிகள். கொஞ்சம் கொஞ்சமாக கம்பி மாறுகிறது, கடப்பாறையாக.

சம்மட்டி பிடித்த கைகள் வியர்வையால் கசிய நெற்றியில் வைத்திருக்கும் குங்குமம் வழிந்தோடுகிறது. தேர்ந்த கலைஞனின் தாள கதியோடு சம்மட்டி பிடித்து அடிக்கும் கைகள் யாருடையவை என்று நினைக்கிறீர்கள்?

# சம்மட்டி பிடிப்பது

ரோஸி என்ற முப்பத்தைந்து வயது பெண்ணின் கைகள்.

தேனாம் பேட்டையில் 'G.R.T. கிராண்டு டேஸ்' என்ற ஐந்து நட்சத்திர ஹோட்டலை ஒட்டியுள்ள நடைபாதையில் இருக்கிறது இவரும் இவர் கணவர் தேவராஜும் சேர்ந்து நடத்தும் பட்டறை.

''திருமணமான கையோடு எங்களுக்குத் தனியே வாழ்ந்து காட்ட வேண்டிய நிர்பந்தம். பட்டறை தொடங்கினார் கணவர். சம்மட்டி பிடிக்க சம்பள ஆள் தேவைப்பட்டது. தினச் சம்பளம் 75 ரூபாய் போட்டார்கள். கட்டுப்படியாகுமா? நானே சம்மட்டி பிடித்து விடுகிறேன் என்றேன்'' என்று இந்தத் தொழிலுக்கு வந்த விதத்தை விளக்குகிறார் ரோஸி.

''இது ஒண்ணும் சமையல் வேலை இல்லை. மூன்று கிலோ எடையைத் தூக்கி அடிக்க வேண்டும். ஒவ்வொரு அடிக்கும் ஒவ்வொரு சொட்டு இரத்தம் குறைந்துவிடும். 'அது மட்டுமல்ல. குறிதவறினால் அடி கையிலோ காலிலோ தான் விழும்'' என்று கணவர் முதலில் மறுத்துவிட்டாராம்.

''ஆனால் நான் விடவில்லை. சிறு வயதில் அப்பாவிற்கு தச்சு வேலையில் உதவியது தன்னம்பிக்கையை ஏற்படுத்தியது. பதற்றப்படாமல் சம்மட்டி பிடித்து அடிக்க முடியும் என்கிற தைரியம் வந்தது. கணவர் சொல்லச் சொல்ல கேட்காமல் பட்



டறைக்கு வந்துவிட்டேன். முதல் நாளே அவரிடம் பாஸ் மார்க்கும் வாங்கிவிட்டேன். ஆரம்பத்தில் எல்லாம் கொப்பளித்து சிரமம் தந்த கைகள் இப்பொழுது நன்றாக பழகி விட்டன!" என்று மருதாணி இல்லாமலே சிவந்து இருக்கும் கைகளை நமக்குக் காட்டுகிறார்.

சுற்றுலா வந்த அமெரிக்க பெண்மணி ஒருவர் இவரை ஆச்சரியமாகப் பார்த்துவிட்டு

"ஒவ்வொரு கிறிஸ்துமஸிற்கும் எனக்குத் தவறாது வாழ்த்து அனுப்புவார். ஏனோ இரண்டு வருடங்களாக வாழ்த்து வருவதில்லை'' என்று ஏக்கமாகச் சொல்லுகிறார்.

பேசிக் கொண்டிருந்தபோதே கணவரிடமிருந்து சமிக்ஞை வர சம்மட்டியைத் தூக்கிக் கொண்டு

# என்ன சமையல் வேலையா?

கைடு உதவியுடன் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தாராம். பேச்சுவாக்கில் இருவரின் பெயரும் 'ரோஸி' என்பது தெரிய வர "வாவ்" என்று ஆச்சர்யப்பட்டுப் போனாராம்.



• கணவருடன்



வேலைக்குச் சுறுசுறுப்பாகிவிட்டார் ரோஸி.

சந்திப்பு: **ஜெயன்**
படங்கள்: **வெங்கடேஷ்**



அரசியல் நடத்தும் ஜான் பாண்டியன்

34 ஆம் பக்க விடை!




ஓடிக் கொண்டிருக்கிறது அமராவதி. புது வெள்ளமோ கரைகளை விஸ்தரித்து விட்டது. ஆறு மையத்தில் இரண்டு ஆள் மறைக்கும் உயரமுள்ள வெள்ளம் ஓடுகிறது. அதில்தான் அந்தப் படகு மிதக்கிறது. கங்கு கரை உத்தேசிக்காமல் நெட்டோட்டமாய் ஓடுகிற படகுக்குத் துடுப்புகளில்லை. பார்த்திபன் நண்பர்களோடு அமர்ந்து பேசுகிற இடத்திலிருந்துதான் அந்தப் பயணம். அமர்ந்து பேசிய இடம் வெள்ளக்காடாகி விட்டது. அங்கிருந்து பார்த்தால் தெரியும் ஆற்றுப் பாலம் காணாததாகி விட்டது. ஒலி வேகத்தை விட குறையாத வேகத்தில் ஓடும் படகில் அனிதா, பார்த்திபன், பிரகாஷ் மூவரும் இருக்கிறார்கள்.

இரவென்றும் பகலென்றும் சொல்லலாமாக ஒரு மங்கற் பொழுது. ஒரு சுழியில் குப்புற விழுந்து எழுந்த படகில் பார்த்திபன் மட்டும் இருக்கிறான். அனிதாவையும் பிரகாஷையும் காணவில்லை. பெரும் வடிவத்தில் ஸ்பைடர் லில்லிப் பூ ஒன்று வெள்ளத் தளைய நீட்டத்தில் தண்டு கொண்டு அலைகளின் மேலாகப் பூ அசைக்கிறது. அதைப் பறிக்கப் படகிலிருந்து தாவும் பார்த்திபன் ஆற்றில் மூழ்கி ஈர உடையோடு எழுந்து வருகிறான். கோவில் கரை அது. அவனது குலச்சாமி செல்லாண்டியம்மனின் கோயில் அது. கோட்டைக்கரையில் முழங்கால் வெள்ளம். கோயிலின் கொறட்டு வாசப்படியில் கணுக்கால் வெள்ளம். நதி நீர் சிற்றலைத் ததும்பிக் கிடக்கிறது. கோவிலுள் செல்கிறான். இளநீரும் களபமும் மணக்கிறது.

ஏற்றிய தீபம் அம்மன் முன்னர் எரிகையில் வணங்கித் திரும்பி சிரிப்பவிழ்தல் காட்டுகிறாள் அனிதா. வெளியிலிருந்து கைதட்டி அழைக்கும் பிரகாஷின் குரல். வெளியே ஓடி வந்து எட்டிப் பார்த்த பார்த்திபனுக்குக் கண் முன்னே வெறுமை விரிந்து நிற்கிறது அமராவதியின் சுடுமணல்.

வியர்த்து எழுந்தான் பார்த்திபன். அந்தக் கனவு சிற்சில மாறுதல்களுடனும் அடுக்குக்



குலைவுகளுடனும் வாழ்வு மொத்தம் இருபத்தேழு முறை வந்தது. பிரகாஷின் மூலம் பாதரசத் துளியாய் மூளையில் விழுந்த திவலை.

'அவ உன்னையும் ஏமாத்திட்டாடா?' என்ன அர்த்தம் இதற்கு.

பிரகாஷ் மீது கோபம் ஒன்றும் இல்லை. இப்படியான ஒன்றை இத்தனை நாள் கூறாமல் வைத்திருந்தது ஆச்சரியமாய் இருந்தது. ரொம்பவும் உத்தமமாக விலகி நின்று காதலுக்கு ஆதரவு காட்டியும் வந்திருக்கிறான். அவனுக்கு

ஏன் பார்த்திபன் மேல் பொறாமை தோன்ற வில்லை? வெறுப்பும் உதாசீனமும் தோன்றி யிருக்கலாம். எதுவும் தோன்றாமல் நட்பு மட்டுமே தொடர்ந்தது எப்படி?

இப்போது பிரகாஷிடம் பேசவே தயக்க மாய் இருக்கிறது. அவனது மேன்மையே அவனை நெருங்க விடாது தள்ளுகிறது. ஆனாலும் அவன் அதைச் சொல்லியிருக்க வேண்டியதில்லை. "உன்னையும் ஏமாத்திட் டாடா" அந்தக் கணத்தில் அவன் அதைச் சொல்லாமல் இருந்திருந்தால் அது ஒரு கல்பாந்த ரகசியமாய் உறைந்திருக்கும்.

பிரகாஷின் கனவு என்ன? அனிதா உனக்குத் தோன்றிய கனவில் பார்த்திபன் வந்தானா ஒரு நாளேனும். இந்தக் கூட்டுக் கண்ணியில் கூனம்பட்டித் தங்கராஜுக்கு ஏதேனும் உணவு உண்டா? வந்து, நிலை பெறாது, மறந்து போகும் தற்காலிகமாய் யாவருக்கும் இருக்கலாம் கனவுகள்.

தங்கராஜின் கனவுகளில் ஈட்டி பஸ்ஸும் சைக்கிள்களும் இருக்கும். பிரேயரின் போது பிரகாஷின் அருகில் நிற்பதைப் பார்த்திபன் தவிர்த்தான். வகுப்பறையில் வலிய வந்து பிரகாஷ் ஏதோ கேட்ட போது சுரத்தின்றிப் பதில் சொல்லிவிட்டு மோகனுக்கும் அன்வருக்கும் இடையில் போய் அமர்ந்து கொண்டான். ஜோதி இதைக் கவனித்தாள்.

மதிய உணவு இடைவேளையில் ஒன்றே முக்கால் மணிக்கு உணவுக்குப் பின் உள் நுழைந்த ஜோதி வந்த போது பிரகாஷ் இருந்தான்.

"பார்த்திபன் எங்கே?"

"எங்கே போனானோ எங்கிட்ட சொல்லிட்டா போறான்?"

"உனக்குத் தெரியாதா?"

"தெரியாது."

"ஆச்சரியமா இருக்கு" என்று அவள் சொன்ன நான்காவது நிமிடம் பார்த்திபன் உள்ளே வந்தான். அவனை ஜோதி அழைத் தாள்.

"இங்கே வா பார்த்தி."

"என்ன ஜோதி?"

"உங்க ரெண்டு பேருக்கும் என்ன?"

"ஒண்ணுமில்லையே."

"பிறகு ஏன் பேசிக்க மாட்டேங்கறீங்க? நான் அப்பவயே புடிச்சு கவனிச்சுக்கிட்டுத் தான் இருக்கேன்."

"சேச்சே அதெல்லாம் ஒண்ணும் கிடை யாது. ஏன் பிரகாஷ்! நமக்குள்ள என்ன? நாம பேசிக்கிட்டுத்தானே இருக்கோம்."

"ஆமா... பேசிக்கிட்டுத்தான் இருக்கோம்."

ஜோதி உள்ளுணர்வால் ஊகித்திருந்தாள்.

"என்னவோ நடந்திருக்கு உங்களுக் குள்ளே?"

"ஒண்ணுமே நடக்கலை."

"உண்மையச் சொல்ல மாட்டிங்க?"

பார்த்திபன், "சொல்றேன் ஜோதி. பிற் பாடு சொல்றேன். நீ நினைக்கிற அளவுக்கு ஒரு பிராப்ளமும் இல்லை. இதோ நான் இன்னிக்கு நைட் பிரகாஷ் வீட்டுக்குத்தான் போறேன். ஏண்டா பிரகாஷ்" என்றான்.

"ஆமா."

ஜோதி, "வல்லாள கண்டனுகப்பா நீங்க ரெண்டு பேரும்" என்றாள்.

பார்த்தியும் பிரகாஷும் சிரித்த சிரிப்பில் படகுக் கனவு முழுகிப் போய் விட்டது. மாலை பள்ளி முடிந்ததும் பார்த்திபன் பிரகாஷ் வீட்டுக்குப் போனான்.

ஞாயிற்றுக் கிழமை அந்திச் சூரிய ஒளியில் பள்ளி மைதானத்தில் கேட்டுக் கொண்டிருந்தது லசீம் ஒலி. அந்த ஆட் டத்தை ஆண்டு நிறைவு விழா தவிரவும் வேறு ஒரு இடத்தில் நிகழ்த்திக் காட்ட சந்தர்ப்பம் வாய்த்து விட்டது. அது பங்குனி மாதம் யுகாதித் திருநாளில். கோட்டைக் கரைச் செல்லாண்டியம்மன் கோவில் விசேஷமுறும் மணலூரில். கோயில் முகாமியாயிருந்த ஓரத்துப் பாளையத்துக் காரர்களிடம் சொல்லி அனுமதி வாங்கி விட்டான் பார்த்திபன். யுகாதி இரவில் இரண்டு பாடல்களுக்கு லசீம் ஆட, அந்த ஆட்டத்திற்குப் பின் கோயில் வடபுறத் திடலில் 'தஞ்சை மஞ்சு'வின் கரகாட்டம் நடைபெறுமாம்.

பையனுக ஏதோ ஆசைப்படறானுக ஆடட்டும் என பார்த்திபனின் அப்பாவும் அனுமதி தந்து விட்டார்.

எங்கிருந்தெல்லாமோ ஆட்கள் திரளு கிறார்கள் திருவிழாவில். 'திருவிழா... திருவிழா... இளமையின் தலைமையில் ஒரு விழா. ஒலிபெருக்கிகள் பாடுகின்றன. தேர்

"போஸ்ட்மேன் தலையைப் பிச்சுக்கிட்டுப் போறாரே, ஏன்?"
"எவனோ ஒருத்தன் லெட்டர்ல ஈ-மெயில் அட்ரெஸ் எழுதி அனுப்பி இருக்கானாம்..."
- மலர் சூர்யா

கடைகள்– எட்டு வரிசைகளில் புதுசுபுது சாய்க் கடை விரிக்கின்றன. காவடிகள் வண்ணக் காவடிகள், முத்துக் குடைகள், சலங்கைகள், பிரம்பு, சாட்டை, கற்பூரம். மணலூரின் மேற்குப் பகுதியில் தடுக்கி விழுந்தால் கோயில் சுவரில் விழ பாதி வாய்ப்பு இருக்கிறது.

வருடா வருடம் போல திருவிழாச் சுற்ற முடியவில்லை. லசிம் சலங்கைக் கட்டைகள் கோயில் முன் திண்ணையில் குளிர்ந்து கிடந்தன. சரியாய் இரவு ஒன்பது மணிக்கு, ஆடுகிறவர்கள் அங்கே கூடி விடுவதாகத் தீர்மானம்.

பிரகாஷோடும் பார்த்திபனோடும் நடந்து கொண்டிருந்த ரவி,

''ஆளறியா ஊர்ல விசில் அடிக்க வச்சிட்டீங்களேப்பா'' என்றார் செல்லமாக. லசிமின் அடவுமாற்ற சமிக்ஞைகளுக்கு அவர் விசில் ஊத வேண்டிய கடப்பாடு இருந்தது.

ஓய்வுகளுக்கான பந்தல் வேய்ந்திருந்த ஆறு ஓட்டிய கூரைகளைக் கடந்து மூவரும் நடந்து கொண்டிருந்த போது சோமன் கோட்டை முத்துசாமி எதிர்ப்பட்டார். அவர் பார்த்திபனுக்கு மாமா முறை ஆக வேண்டும். அவர் குடும்பத்துடன் இருந்தார்.

"யார்ராது... மல்லப்பாளையத்து மாப்பிள்ளையா?'' என்றார்.

**ச**னிக்கிழமை காலை அஜந்தா பஸ்ஸில் ஏறினார்கள். பள்ளப்பட்டி பிரிவு பஸ் நிறுத்தத்தில் அங்கிருந்து சோமன் கோட்டை 'இருபது கிலோ மீட்டருக்குள்' பதினைந்து பஸ் நிறுத்தங்கள். மூலனூரில் ஒரு டீ டைம் வேறு. நினைத்தவுடன் நினைத்த இடம் இருக்குமாறு விமான சர்வீஸ்களை விஸ்தரிக்க வேண்டும்.

மூலனூரில் ஸ்கூலைத் தாண்டி பஸ் போகிறது. வார்னீஷ் வர்ண கேட்டுக்குள் அதன் வகுப்புகளும் ஆய்வுக் கட்டடங்களும் மஞ்சள் காவி அடித்து 'மெகா மைசூர்ப்பாகுகள்' போலிருக்கின்றன. நினைவில்தான் இனிமையில்லை. பெட்ரோல் பங்க் தாண்டுகையில் அனிதா தென்படுவாளா என விழியோடியது. இல்லை. அடுத்து இரு நிமிடங்களில் சோமன் கோட்டைப் பிரிவு வந்தாகி விட்டது. இறங்கி வடக்கே ஒரு மைல் நடக்க வேண்டும் ஊருக்கு. என்ன உரிமையில் போய்ப் பார்க்கிறோம் என்ற கேள்வி பார்த்திபனுக்கு வந்தது. அருகில் நெருங்க நெருங்க பல விஷயங்கள் அவஸ்தை தருவதாய் இருக்கின்றன. பதுங்கியேனும் இலக்கு அடைவதே தவிர பின்வாங்கல் இல்லை.



ஊர்த் தலைவாசலில் மிக அதிசயமாய் ஒரு கல்தூணும் அதன் மேல் முன் காலத் தீபக் கூண்டும் இருந்தன. நாற்பது ஆண்டுகளுக்கு முன் தீச்சுடரால் எரிந்த வெளிச்ச தீபம். கூண்டு கண்ணாடியை இழந்து விட்டது. அது காற்றுவெளியை செவ்வகங்களாய்ப் பிரித்திருக்கிறது. ஏற்றிய சுடர் எரிந்திருக்கும் பழைய பல இரவு. காலமோ மாற்றங்களைக் கொணர்கிறது. பார்த்திபன் வித்யாவின் வீட்டுக்கு நடக்கிறான் – பின்னாடியே பிரகாஷ்.

போன ஆண்டு யுகாதிப் பண்டிகையிலேயே இவனைப் பார்த்திருக்கக் கூடாதா? நடக்க வேண்டியவை தருணங்களில் நடப்பதில்லை. நடக்கக்கூடாதவை பல நடந்து தொலைக்கின்றன. விரும்பியதெல்லாம் ஏன் நிகழ்வதில்லை. சுவை கருதி நடக்கின்ற குளறுபடிகள் ஏராளம்.

சீமை ஓடு வேய்ந்த வித்யாவின் வீடு திறந்திருக்கிறது. அவளது அப்பாவும், அம்மாவும் இருக்கிறார்கள். அந்தோ... வீட்டில் வித்யாதான் இல்லை.

'விட்டாச்சு லீவு' என பஸ் ஏறி அலங்கியம் போயிருந்தாள் சித்தி வீட்டுக்கு. வித்யாவின் அம்மா பையன்களுக்குத் தண்ணீர் கொணர்ந்து தருகிறார். ஊரில் அனைவர் நல குசலங்கள் வினவி விட்டு மணக்க மணக்க காப்பி தருகிறார். பஜ்ஜியாவது போட்டுத் தந்திருந்தால் அது ஓர் அங்கத நாடகமாய் இருந்திருக்கும். தங்கிப் போகச் சொன்ன உபசரிப்பை நயமுடன் மறுத்து விட்டு, திரும்பிக் கிளம்பினார்கள் இருவரும். சோமன் கோட்டையின் நிலா ஸ்தம்பித்து தகரக் கூண்டில் இனிச்

கூடரெரியாது எக்காலமும்.

"ஆமாங்.. மாமா"

"அப்பாவெல்லாம் எப்படி இருக்காங்க? நல்லா இருக்காங்களா? வந்திருக்காங்களா?"

"வந்திருக்காங்க. இங்க எங்கியாவது இருப்பாங்க."

அவரைப் பார்த்தே ஐந்தாறு வருடம் இருக்கும். மறக்காமல் அடையாளமும் கண்டது ஆச்சரியம்தான். தனது மனைவியிடம் அவனை அறிமுகப் படுத்தினார். அருகில் அவரது பெண் வித்யா.

## தங்கச் சங்கிலி பரிசு!

'ஜிகினா' தொடரின் எழுத்தாளர்கள் ஐவரின் பெயர்களைச் சரியாக எழுதி 'தங்கச் சங்கிலி' பரிசு பெற்ற ஸ்ரீநிவாஸ் பிரபுவுக்கு கல்கி நிர்வாக இயக்குனர் கி. ராஜேந்திரன் தங்கச் சங்கிலியை வழங்கினார். ஸ்ரீநிவாஸ் பிரபு பல்வேறு பத்திரிகைகளில் கதைகள், துணுக்குள் எழுதி வருபவர். கல்கியின் நீண்ட நாள் வாசகர். வாழ்த்துகிறோம்!



• படம்: வெங்கடேஷ்

அனிதாவை விட ஒரு அங்குலம் உயரம் குறைவாயிருந்தாள். முடி அனிதாவுக்குப் போலத்தான். ஒரு ஏற்ற இறக்கத்தில் எடை கூட அனிதாவின் எடைதான் இருப்பாள் போலிருந்தது.

"வித்யா" என்று மாமா பெயர் சொன்னதும் பார்த்திபனுக்கு, அனிதா என்பதும் மூன்றெழுத்து, வித்யா என்பதும் மூன்றெழுத்து எனத் தோன்றியது. நாடு பிடிக்கும் கனவுகள் இல்லாத அவனுக்கு வேறு மூன்றெழுத்துத் தொடர்ச்சிகள் நினைவு வரவில்லை.

வித்யாவின் சிரிப்பா, புருவ நெளிப்பா, நெக்லஸ் வருடும் அழகா எது- எது அனிதாவுடன் வித்யாவை நினைவீடு செய்வது? என்னவெனப் புரியவில்லை. அவளை அனிதாவெனப் பார்க்கும் கண்கள் பார்த்திபனுக்கு இருந்தன. பிரகாஷைப் பார்த்துப் புன்னகை செய்தான் பார்த்திபன். இவ்வளவு கிட்டே ஒரு பெண் இருக்க பையன்கள் பரஸ்பரம் சிரிக்கவில்லையெனில் அவர்களை முதுமக்கள் தாழியில் போட வேண்டியதுதான்.

"என்ன படிக்குதுங்க மாமா. வித்யா."

"செயிண்ட் அலாய்சியஸ். தாராபுரம். லெவன்த் - சி" வித்யாவே பதில் சொன்னாள். எனில்... எனில்... வித்யாவுக்கும் அனிதாவுக்கும் ஒரே மாதிரி ஸ்கூல் யூனிஃபார்மா? வித்யா... சோமன் கோட்டையில் வாழ்கிற பெண்ணே! உங்கள் வீட்டில் ஒரு ஸ்பைடர் லில்லிப் பூஞ்செடி இருக்க வேண்டுமே? அது இல்லையா... குறைந்த பட்சம் உன் அம்மாவுக்கு பஜ்ஜியாவது சுடத் தெரிந்திருக்க வேண்டும்.

மாமாவிடம் விடைபெற்றுக் கொண்டான் பிறகு சந்திப்பதாய். இரவு ஒன்பதரை மணிக்கு ஆறு மனிதத் தலைகளால் வழிந்திருந்தது. வடபுறத்து மேடைக்கு ஆறுதான் பார்வையாளர் காலரி. அதற்காகவே பங்குனியில் ஆறு வறண்டு விடுகிறது போலும்.

லசிம் ஆட்டம் முடிந்தது. ரவி சார் சின்ன தாராபுரம் போய் விட்டார். பிரகாஷும் பார்த்திபனும் ஆசுவசமான நிம்மதியோடும், உற்சாகத்தோடும் சுற்றித் திரிய ஆரம்பித்தனர். வளையல் கடை அருகிருந்து வித்யா வெளிப்பட்டாள். விழா வெளிச்ச இருளில் கருநீல உடையில் நெல் வயலோரம் பூத்த வாடாமல்லி போலிருந்தாள்.

"உங்க டான்ஸ் சூப்பரா இருந்துச்சு" என்றாள். பார்த்திபனை, பவள இதழ் திறந்த சிரிப்பு மென்று துப்பியது. முகத்தில் ரத்தம் பாய மூளை யோசனை மறந்து, "நோ மென்ஷன்" என்றான்.

அனிதாவை இனி மறந்து விடலாம்.

அனிதாவை மறப்பது சுலபம். அனிதாக்களை மறப்பது சிரமம்.

(தொடரும்)

# KALKI SHOPPING PAGE


## FLATS FOR SALE

Deluxe Double / Single
Bed-Room Flats for Sale at
**TAMBARAM** Camp Road

- Decent Residential Locality.
- Good Quality of Construction.
- Reasonable Cost.
- Prompt Delivery.
- Housing Loans Arranged.
- Ready for Occupation.

Bookings Open for Our
Next Project at Rajeswari Nagar,
Camp Road, Tambaram.

## RR BUILDERS

Madipakkam, Chennai - 91.
E-mail : rrbs@eth.net
Ph: 044 - 2420099 / 0090 / 3707
Pgr: 9628462737

உ


முருகா சரணம்!



"திருப்புகழ் 108"
கேசட் வெளியீடு
நாள்: 17.9.2000
(ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: மாலை 6 மணி.
இடம்:
அருள்மிகு
கபாலீஸ்வரர்
திருக்கோயில்,
மயிலாப்பூர்.

பக்தர்கள் அனைவரும்
வருக! வருக!

ஓம் ஸ்ரீ மஹா கணபதயே நம! ஹரி : ஓம் ஓம் ஸ்ரீ குருப்யோ நம.




ஸ்ரீ ஆதிசங்கரா பௌண்டேஷன்ஸ் வழங்கும்

## சுப - யாத்ரா

## SHUBH - YATRA

G-8, Elcanso Complex, 10 Casa Major Road, Egmore, Chennai-8.



M. KUMARESAN, 8268372 S.SITALAKSHMI, 4480501
E-mail : sitasundaresan@radiffmail:com

ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி - ஆருத்ரா தர்ஸன பௌர்ணமி -
ஸ்ரீ சிவ - ஹரி தர்ஸன ஸ்பெஷல்
2-1-2001ம் தேதி முதல் 13-1-2001ம் தேதி வரை

**பண்டரிபுரம் மற்றும் 6 ஜோதிர்லிங்கங்கள் க்ஷேத்ர தர்ஸனம்**

பூனா அஷ்டகணபதி, வஜ்ரேஸ்வரி, பீமா சங்கரம், த்ரயம்பகேஷ்வரம், நாகநாதம் பரல்யவைத்ய நாதம், நாசிக், பஞ்சவடி, ஷீர்டி, உஜ்ஜயின் (மஹா காளி) மஹா காளேஸ்வர், ஓம் காரேஸ்வர்

12 நாட்கள் யாத்திரை - நபருக்கு கட்டணம் ரூ.4,870/- மட்டும்
(2ஆம் வகுப்பு இரயில் கட்டணம், சைவ உணவு, 2 x 2 சூப்பர் டீலக்ஸ்பஸ் யாத்திரை, தூய காற்றோட்ட வசதியுள்ள தங்கும் அறைகள் உட்பட)

அலஹாபாத், அயோத்யா - முக்திநாத் - பசுபதிநாத் (நேபாள்) - வாரணாசி
சென்னை ஏப்ரல் மாதம் அழைத்து செல்ல உள்ளோம்.

**OUR SPECIALITY :**
Can make excellent arrangements for any type of tours in India and Nepal.

பதிவு செய்ய கடைசி
நாள் : 16-11.2000

ஸ்ரீ மேடை




# சாருகேசியின் அறு(வை) வடை ஜோர்!

✉ கல்கியின் பல்லாண்டுக் காலத் தொடர் வாசகன் என்ற முறையில், நான் தெரிவிக்கும் கருத்தினைத் தவறாக எடுத்துக் கொள்ள வேண்டாம். இவ்வார (3.9.2000) கல்கியில் 'பொன்னியின் செல்வன்' (ஆழ்ந்து) ரசித்துப் படித்துக் கொண்டிருந்தபோது, ஒரு சிறு குறை தென்பட்டது.

42, 43ம் பக்கங்களில் வெளியாகியுள்ள படம் 50-ம் பக்கத்திலும், 47ம் பக்கம் வெளியாகியிருக்கும் படம் 45-ம் பக்கத்திலும் வெளியாகியிருக்க வேண்டும். அப்படியிருந்தால், படிக்கும்போதே, படக் காட்சியும் கண்களில் பட்டுக் கருத்தில் பதியும்.

திருவில்லிபுத்தூர்,
இரா. ச. சங்கரநாராயணன்.

✉ கிராமிய கரகாட்டக் கலை நசிந்துப் போனதில் வானொலி, தொலைக்காட்சிக்கும், ஏன், அரசுக்குமே பெரும் பங்கு உண்டு. டிசம்பர் கச்சேரிகளுக்குத் தரும் முக்கியத்துவத்தை எந்தப் பத்திரிகை கிராமியக் கலைகளுக்கு வழங்கியுள்ளது, கல்கி உட்பட?

தூத்துக்குடி,
கே. சுதர்ஷன்.

✉ 'மயூரா ரத்தினசாமியின் 'சுழற்சி' சிறுகதை தற்கால நடைமுறையில் நேர்த்தியான வெளிப்பாடு.

தஞ்சாவூர்-9,
தஞ்சை ராகவ் மகேஷ்.

✉ தலையங்கம் படித்தேன். ஒரு குற்றவாளி தப்பினாலும் ஒரு நிரபராதி தண்டிக்கக் கூடாது என்ற நியதிக்குக் கட்டுப்பட்டே சிறப்பு நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன என்ற வரிகள் பொன்னேட்டில் பொறிக்கத் தக்கவை.

நெய்வேலி,
ஜே. ராஜகோபாலன்

✉ 'கடல், புயல், காதல்!' படித்தேன். திகில் கதையைப் போல் இருந்தது. கடலில் அவர்கள் தவித்ததைப் படிக்கும்போது நாக்கு வறண்டு விட்டது. எப்படியோ அந்த ஆறு பேரும் விதியை வென்று விட்டார்கள். தின்தின் ஆயி அதிர்ஷ்டக்காரிதான்!

கும்பகோணம்,
டி.எஸ். சீதாராமன்.

✉ புற்று நோயால் பாதிக்கப்பட்டு தங்களது வாழ்க்கையின் கடைசி நாட்களை எண்ணிக்கொண்டிருக்கும் நோயாளிகளுக்கு கவுன்சலிங் செய்து வரும் உஷா ஷிண்டேயின் (கடைசி காலத்தில் கை கொடுக்கும் தோழி) சேவை (மருத்துவ) அனுபவங்கள் மெய் சிலிர்க்க வைத்தன.


தோட்டக்குறிச்சி,
இரா. வளையாபதி.

✉ ஒரு நிஜ அறிக்கையை வைத்து எட்டுவிதக் கற்பனை அறிக்கைகளை விதைத்த சாருகேசியின் அறு(வை)வடை வெகு ஜோர்!

நெய்வேலி-3,
சாந்தி சுந்தர்.

✉ 13.8.2000 இதழில் 'விதை நெல்லை விற்று நாடகம்' என்கிற தலைப்பில் 'நூறு வருடங்களுக்கு முன்பு சாலியமங்கலம்... போன்ற ஊர்களிலும் பாகவதமேளா நடந்துள்ளது. காலப்போக்கில் அங்கேயெல்லாம் வழக்கொழிந்து மெலட்டூரில் மட்டும் வாழ்ந்து கொண்டிருக்கிறது' என்று மகாலிங்கம் பேட்டியளித்துள்ளது சரியல்ல. அச்சுதபுரம் என்று அழைக்கப்பட்ட தஞ்சை ஜில்லா சாலியமங்கலத்தில் பல நூறு ஆண்டுகளாக பாகவத மேளா நாட்டிய நாடகங்கள் ஸ்ரீ நரஸிம்ம ஜெயந்தி விழாவின்போது தொடர்ந்து வருடத்திற்கு ஒருமுறை சீரும் சிறப்புமாக நடைபெற்று வருகிறது. ஸ்ரீலெஷ்மி ந்ருஸிம்ம பாகவத மேளா பக்த சமாஜம் (Regd. S.No. 18) என்கிற அமைப்பு மிகச் சிறந்த முறையில் இந்தக் கலையைப் பேணி வளர்த்து வருகிறது. மத்திய சர்க்காரின் சங்கீத நாடக அகாடமி இதற்கு ஆதரவு அளித்து வருகிறது.

சாலிய மங்கலம்,
டி.எஸ். லக்ஷ்மணன்,
(நிர்வாகக் குழு உறுப்பினர்)
லக்ஷ்மி நரசிம்ம
பாகவத மேளா சமாஜம்.





# NAVAJEEVAN BLIND RELIEF CENTRE (REGD)

## (FREE HOME FOR THE BLIND AND AGED)

**2-21A, SAPTAGIRI ASHRAM, TIRUCHANOOR, TIRUPATI - 517503.**

**Ph: 08574-39992, 38623. E-mail:navajeevan@vsnl.com**

**Website: www.navajeevan.org**

### எங்கள் பிரார்த்தனை

ஹே பகவான், பிறவியிலேயே விழிகளை இழந்துவிட்ட எனக்கு நல்ல கல்வி அறிவையும், சங்கீதத்தையும் அளித்து ஒரு புதிய வாழ்க்கையைக் கொடு-காயத்ரீ 8 வயது நிரம்பிய ஒரு அழகான சிறுமியின் வேண்டுகோள்.

ஹே ஈச்வர், எல்லோரையும் இழந்து வாழ்க்கையின் கடைசி அத்தியாயத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் எனக்கு நல்ல உடல் ஆரோக்கியத்தை அளித்து உன் திருவடிகளை அடைய வழிகாட்டு-லக்ஷ்மிபாட்டி 72 வயது ஒரு மூதாட்டியின் மனமார்ந்த பிரார்த்தனை.

ஹே கருணாமயி ஈச்வரி, என் குடும்பத்தினராலும் சமூகத்தினராலும் புறக்கணிக்கப்பட்டு நம்பிக்கையுடன் போராடி வரும் எனக்கு ஒரு புதிய பாதையை காட்டு-விஜயலக்ஷ்மி 23 வயது ஒரு அனாதைப் பெண்ணின் நீண்ட பிரார்த்தனை.

ஹே ஏழுமலையானே, ஏழ்மை முதுமை காரணமாக பார்வை குறைந்து பரிதவிக்கும் எனக்கு மீண்டும் ஒளி கிடைக்க அருள் புரிவாய் - நாராயணன் 80 வயது நெருங்கிக் கொண்டிருக்கும் ஒரு ஏழை முதியவரின் ஈரமான வேண்டுகோள்.

இப்படியாக திருப்பதி நவஜீவன் ஆசிரமத்தில் புதிய வாழ்க்கை நவஜீவனம் பொருட்டு தொடர்ந்து பிரார்த் தனையில் குழந்தைகளும் முதியவர்களும் ஈடுபட்டு வருகிறார்கள்.

கடந்த 21 வருடங்களாக கருணை உள்ளம் கொண்ட தமிழ் வாசக அன்பர்களின் தொடர் உதவியுடன் நூற்றுக்கணக்கான பார்வையற்ற குழந்தைகள் திக்கற்ற பெண்கள் மற்றும் ஏழை முதியோர்கள் ஒரு புதிய வாழ்க்கையைப் பெற்று பயனடைந்து வருகிறார்கள்.

### எங்கள் வேண்டுகோள்

திருப்பதி புண்ய க்ஷேத்திரத்தில் செயல்பட்டு வரும் எமது சமூக நலத்தொண்டு என்கிற தொடர் வேள்வியில் கருணை உள்ளம் கொண்ட ஆஸ்திக அன்பர்களையும் கலந்து கொள்ளும்படி வேண்டுகிறோம்.

### அன்னதானம்/நேத்திரதானம் தொண்டுகள்

1. ஒரு நாளில் ஒருவேளை 50 குழந்தைகளுக்கு அன்னதானம் வழங்க - நாராயண ஸேவை - ரூ. 500/-
2. Annadanam Endowment Scheme: பிரதிவருடம் ஒரு குறிப்பிட்ட நாள் / திதியில் தொடர்ந்து 15 வருடம் 50 ஏழை குழந்தைகள் / முதியோர்களுக்கு அன்னதானம் வழங்க - One time donation - ரூ. 5,000/-
3. நவஜீவன் இலவச கண் மருத்துவ மனையில் ஒருவருக்கு மீண்டும் பார்வை கிடைக்க IOL கண் ஆபரேஷன் செய்ய - நேத்திரதானம் - ரூ. 700/-
4. Netradan Endowment Scheme: பிரதி வருஷம் ஒரு குறிப்பிட்ட நாளில் தொடர்ந்து 10 வருடம் "காட்ராக்ட்" கண் அறுவை செய்ய - One time donation - ரூ. 7000/-
5. தீபாவளி போன்ற முக்கிய தினங்களில் விசேஷ அன்னதானம் வழங்க 100 inmatesக்கு - ரூ. 1000/-

---

மேற்படி தொண்டுகளுக்கு அனுப்பும் நன்கொடைகளுக்கு வருமான வரி விலக்கு உண்டு. Contributions to "Navajeevan Blind Relief Centre, Tirupati", are eligible for tax relief u/s 35AC & 80G of income Tax Act 1961. பிறந்த நாள், திருமணநாள் மற்றும் திதி போன்ற விசேஷங்களை குறிப்பிட்டால் அன்றைய தினம் நன்கொடை அனுப்பும் அன்பர்களின் சார்பாக ஸ்ரீ ஏழுமலையான் பத்மாவதி தாயாருக்கு பிரார்த்தனை பூஜை செய்வித்து பிர சாதத்துடன் விபரம் அனுப்பி வைக்கப்படும். அன்பர்கள் தங்களின் நன்கொடைகளை By cheque/DD/MO வாயிலாக 'Navajeevan Blind Relief Centre, Tirupati' என்கிற பெயரில் மேற்குறிப்பிட்ட அட்ரஸுக்கு அனுப்பும்படி வேண்டுகிறோம்.

"யாதேவி சர்வ பூதேஷு தயா ரூபேண ஸம்ஸ்திதா"
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:

நாராயண ஸேவையில்
**கே.எஸ். ஆசார்யா**
ஸ்தாபகர்.

நவஜீவன் ஆஸ்ரமம், திருச்சானூர், திருப்பதி - 517503.

# புரட்சித்தலைவி வழியில் பெரியாரைக் காண்கிறார் வீரமணி?

● எஸ்.முரளி, குறிஞ்சிப்பாடி

? ப்ரியங்காவின் செல்வமகன் பேரோடும் புகழோடும் வருங்காலத்தில் தேசத்தை வழி நடத்துவார் என்று தமிழ்நாடு காங்கிரஸ் முன்னாள் தலைவர் குமரி அனந்தன் கூறியுள்ளது பற்றி...?

! ப்ரியங்காவின் செல்வ மகனுக்குப் பேரன் பிறக்கும்போதும் நேரு குடும்பத்திடம் விசுவாசம் உள்ள உண்மை காங்கிரஸ்காரன் இதையே சொல்வான்! ஆமென்!

● நாஞ்சில் கு. நாகராஜன், பரமக்குடி

? எண் கணித ஜோதிடப்படி 'ஜெ' தமது பெயரை ஒரு 'ஏ' எழுத்து கூட்டி எழுதுகிறாராமே? ஆட்சியைப் பிடித்துவிடுவாரா?

! அப்படியும் பிடிக்க முடியாவிட்டால் இன்னொரு 'ஏ' எழுத்தைச் சேர்த்துக் கொள்வாரோ!

● கே.கே. ரவிகாந்த், காட்டுப்புத்தூர்

? தமிழ்நாட்டில் தட்டுப்பாடு இல்லாமல் கிடைப்பது எது?

! பெரிய கட்சிகளின் வாக்குறுதிகளும் சில்லறைகளின் வசவுகளும்.

● இந்து கணேசன், காரைக்குடி

? பிரிக்க முடியாத பாசம் எது?

! ஜெயலலிதா - சசிகலா அல்லது லஞ்சம் - ஊழல்.

● கலை அரசு, கோவைப்புதூர்

? விநாயகர் சிலை ஊர்வலத்தில் கலந்து கொண்டு தீபாராதனை காட்டும் மதநல் லிணக்க முஸ்லிம்களைச் செம்மையாக உதைக்க வேண்டும் என்று ஒரு பத்திரிகை எழுதியிருக்கிறதே...?

! சப்கோ சன்மதி தே பகவான்!

● கே.வி.ராமன், சென்னை - 73

? ஆந்திர மாநிலத்தில் 'ஹைதரா பாத்' வெள்ளத்தில் மூழ்கி 'ஹைதராபாத்'தாக மாறி விட்டதாமே?

! பெருமழையின் போது நீர்வடிய வேண்டிய ஏரிகளைத் தூர்த்து கட்டடங்களால் நிறைத்து விட்டார்கள் என்றால் வேறு என்ன ஆகும்?

● கே. கிருஷ்ணன், சென்னை - 5

? அசாருதீன், ஜடேஜா, மோங்கியா, சோப்ரா - இந்த நால்வரும் நைரோபி கிரிக்கெட் தொடரில் விளையாடுவதிலிருந்து கல்தா கொடுக்கப்பட்டதற்கு ஊழல் காரணமல்ல, திறமையின்மையே காரணம் என்கிறாரே முத்தையா?

! பாலுக்குக் காவலாகக் கழற்றிவிட்டு விட்டார்; பூனைக்குத் தோழனாய் அறிக்கை விடுகிறார்.

● கே. சண்முகம், ஆதமங்கலம்புதூர்

? மூப்பனாரின் பேட்டிகளைப் படித்துப் படித்து நான் 'ஒரு மாதிரி' ஆகிவிட்டேன். இதற்கு வைத்தியம் என்ன?

! ஜெயலலிதாவின் அறிக்கைகளைப் படியுங்கள். இன்னொரு மாதிரி ஆகிவிடுவீர்கள். அதற்கும் இதற்கும் சரியாய்ப் போய் விடும்.

● புளியரை கணேசன், சென்னை - 30

? தமிழகத்தைச் சேர்ந்த ஒருவருக்கு ஆயிரம் ஏக்கரில் 139 சொகுசு அறைகளுடன் கூடிய அட்டகாசமான ஹோட்டல் ஒன்று லண்டனில் இருக்கிறதாமே? தாங்கள் எப்போதாவது அங்கே தங்கியதுண்டா?

! உங்களுக்குச் சொந்தத்தில் ஒரு சிறு வீடு அல்லது ஃப்ளாட் இருக்கிறதா? இருந்தால் அதைவிட சொகுசான இடம் உலகில் எது...?

● எஸ். நாகராஜன், மேல்பாடி

? நான் பாடுபடுவதெல்லாம் தமிழ்

• அபாய யோசனை!



• சாக்லெத் வாசகம்!



• பேட்டி பாதிப்பு!





• எழுத்து கூட்டி...

மக்களுக்காகத்தான் என்று சந்தன வீரப்பன் கூறியிருப்பது பற்றி...?

! மில்லெனிய ஜோக்!

● ரேவதி சங்கர், சென்னை - 13 ❐

? தற்போது கிடைத்துள்ள கிருஷ்ணா நீர் வரவால் மட்டும் சென்னையின் குடிநீர்ப் பஞ்சம் தீர்ந்துவிடுமா?

! நிரந்தரத் தீர்வு என்பது கிருஷ்ணாவும் இல்லை! இப்போது ஃபிளாட் சொந்தக்காரர்கள் மழைத் தண்ணீர் அறுவடை செய்ய வேண்டும் என்று ஆணை பிறப்பித்துள்ளார்களே, அதுவுமல்ல. சென்னை, சுற்று வட்டாரத்தில் உள்ள ஏரிகளைச் சுத்தப் படுத்தி, ஆழப்படுத்தி, வடிகால் அமைத்து, மழைநீர் சேமிப்புக்கு வழி செய்து, பிறகு அதைப் பயன் படுத்த ஏற்பாடுகளைக் கவனிப்பது தான்.

• தொடர் நாயகர்!



• சிரிப்பு மணம்!



● ஜோ.பன்னீர்செல்வம், சென்னை - 84

? மாநில அரசு அமைக்கும் குழுவால் மாநில ஆளுனர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அல்லது குறைந்த பட்சம் மாநில முதல்வரின் ஒப்புதலுடன் ஆளுனர் நியமிக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசுக்குத் தமிழக முதல்வர் யோசனை கூறியிருக்கிறாரே?

! ஏற்கப்பட்டால், 'ஆளுனர் நடுநிலையாளராக இருக்க வேண்டும்' என்ற நோக்கம் பாதிப்புக்கு உள்ளாகும்.

● கல்லார் ரஹ்மத், நாகை

? மனைவியர் தினம் கொண்டாடத்தான் வேண்டுமா? தேவையா இது?

! சே! மனைவியர் தினமா... எதற்கு? தினமுமே மனைவியைக் கொண்டாடுங்கள்!

● கே. ராஜேந்திரன், மருதநாடு

? நக்கீரன் கோபால் காடு செல்வது தொடர்கதைதானா?

! த்ரில் தொடராக ஆரம்பித்து சோகத் தொடராக வளர்ந்து வருகிறது... முடிவு எப்படியோ சுபமானால் சரி.

● அ. ராஜா ரஹ்மான், கம்பம்

? விளையாட்டுத் துறையில் சாதனை புரிந்தவர்களுக்கு அர்ஜுனா விருதை ஜனாதிபதி வழங்கினாரே... பெற்றுக் கொண்ட 27 பேர்களுள் ஒரு கிரிக்கெட் வீரர்கூட இல்லையே?

! ஊழல் ஆட்டக்காரர்களை ஆட்டத்திலிருந்தும் விருதிலிருந்தும் வெட்டி விட்டுவிட முடிகிறது. ஊழல் அரசியல்வாதிகளை...?

● அ.ஆ. ராஜ், குண்டூர்

? புரட்சித் தலைவி வடிவில் பெரியாரைக் காண்கிறாராமே கி. வீரமணி?

! வெங்காயம்!



• பெரியாரைத் தேடி...

| ❐ ரூ.50 பரிசு பெறுபவர் : | • ரூ.25 பரிசு பெறுபவர் : |
|---|---|
| **ரேவதி சங்கர்,** 19/53, ஆதம் சாகிப் தெரு, இராயபுரம், சென்னை - 13. | **நாஞ்சில் சு. நாகராஜன்,** 5/359, உமாபதி சுப்புராயன் லேன், பரமக்குடி - 623 707 |

# ஆனா-பானா-சதி!



ஆனா-பானா-சதி. இது அண்டை நாடு எதிலோ ஆட்சியைக் கவிழ்க்க நடந்த சதி என்று நினைத்துக் கொண்டு விடாதீர்கள்!

"பாலி மொழியில் 'ஆனா' என்றால் உள்ளே இழுக்கும் மூச்சு என்று பொருள். 'பானா' என்றால் வெளியே விடும் மூச்சு. 'சதி' என்றால் அதனுடனேயே இருத்தல். ஆக, ஆனா - பானா - சதி என்றால் மூச்சை உள்ளே இழுக்கும்போதும் வெளியில் விடுகிறபோதும் அதனுடனேயே இருத்தல் என்று பொருள்" என்கிறார் பிரம்ம ஸ்ரீ சுபாஷ் பத்ரி. இவர் ஆந்திராவிலும் தமிழ்நாட்டிலும் நூற்றுக்கும் மேற்பட்ட பிரமிட் தியான மையங்களை உருவாக்கி இருப்பவர்.



• சுபாஷ் பத்ரி

"எல்லோரையும் தியானிகள் ஆக்குவதுதான் என் ஒரே குறிக்கோள்!" என்று சொல்லும் இவரிடம் சில விளக்கங்கள் கேட்டோம்.

***தியானம் செய்வது அத்தனை சுலபம் இல்லையே?***

உங்கள் எண்ணம் தவறு. 'ஆனா-பானா-சதி' என்னும் தியானமுறை மிகவும் சுலபமானது. வயது வித்தியாசமின்றி அனைவரும் செய்யலாம்.

***'ஆனா-பானா-சதி'யை எப்படிச் செய்வது?***

தரையிலோ நாற்காலியிலோ சௌகரியமாக அமர்ந்து கொள்ளுங்கள். கால்களைச் சப்பணமிட்டு அமரலாம். அல்லது நாற்காலியில் அமர்ந்தால் கணுக்கால்களைக் குறுக்காக ஒன்றின்மேல் ஒன்றாகப் படும்படி அமரவும். கண்களை மூடிக்கொள்ளுங்கள். மெதுவாக மூச்சை உள்ளிழுக்கும்போதும் வெளிவிடும்போதும் உங்களின் முழு கவனமும் அதன் மீதே இருக்கட்டும். மனத்தில் எந்தவித எண்ணங்களும் இல்லாமல் வெறுமையாக வைத்திருங்கள். ஆரம்பத்தில் இது கஷ்டமாக இருந்தாலும் நாளடைவில் பயிற்சியினால் இது சுலபமாகிவிடும்.

***ஒரு நாளைக்கு எவ்வளவு நேரம் தியானம் செய்ய வேண்டும்?***

உங்கள் வயது என்னவோ, சுமாராக அத்தனை நிமிடங்கள் தியானம் செய்வது நல்லது. காலை, பகல், மாலை என்று எப்போது வேண்டுமானாலும் தியானத்தில் ஈடுபடலாம். தியானம் செய்யும்போது, மென்மையான இசைக் கருவிகளின் கேஸட்டுகளைக் கேட்கலாம்!

***தியானம் செய்த உடன் மனத்தில் ஒரு தெளிவு ஏற்பட்டு விடுகிறதே எப்படி?***

தியானத்தின் மூலம் உங்கள் மனம் வெற்றிடமாகிறது. உடனே இந்த அண்டத்தில் உள்ள அளவிலா சக்தி அந்த இடத்தை நிரப்ப உள்ளே பாய்கிறது. இதனால் உங்கள் மனம் புத்துணர்வு பெறுகிறது. தொய்வில்லாத விழிப்புணர்ச்சி ஏற்படுகிறது. தவிர உங்கள் மனமும் உடலும் ஒவ்வொரு கணத்திலும் ஒன்றுபட்டுச் செயல்படும் அற்புதம் நிகழ்கிறது.

தவிர, உங்களிடமிருந்து அதிகமாக உண்பது, அதிகமாகப் பேசுவது, அளவிற்கு அதிகமாகத் தூங்குவது, அடுத்தவர் விஷயத்தில் தேவையின்றி தலையிடும் உந்துதல் போன்ற பல கெட்ட பழக்கங்கள் விலகி விடும். பொதுவாகவே உங்கள் உடல் ஆரோக்கியம் அதிகமாகி எந்த டாக்டரிடமும் போகவேண்டிய அவசியமில்லாமல் போகும்!

சந்திப்பு: **கௌதம்ராம்**

# பாரதி

மூன்று தலைமுறை தமிழர்கள். அத்தனை பேர் மனக் கோயிலிலும் ஆதர்சமாகியிருக்கும் தேசிய மகா கவி. அவர் வாழ்க்கையைப் படமாக்குவது வங்காள விரிகுடாவைப் பாற்கடலாக பாவித்து கடைவது போன்ற காரியம்

இதில் இயக்குனர் ஞானராஜசேகரனும் அவரது அணியும் பெருமளவு வெற்றிபெற்றுள்ளனர்.

காலத்தை மீறி கனவு கண்டவராக மட்டுமே பாரதியை முன்னிறுத்தி, பாதுகாப்பான ஒரு வட்டத்துக்குள் செயல்பட்டிருப்பது படத்தின் வெற்றிக்கு முக்கியமான காரணம்.

மகன், இளைஞன், கணவன், தந்தை, பத்திரிகையாளன், கவிஞன், தேசியவாதி என அனைத்துச் சித்திரிப்புகளிலும் காலத்தை மீறி கனவு காணும் இந்த ஒரு பரிமாணமே பதிவாகியிருக்கிறது.

ஒற்றைப் பரிமாணத்தில் ஒரு பாத்திரம் வலுபெற்று ஜீவிக்க முடியுமா?...

நிஜவாழ்வில் பாரதியை மகாகவியாக்கிய அவரது ஆத்ம சுதந்தரம்தான் திரைக் கதாபாத்திரத்தின் பலமாகி வாழ வைக்கிறது. அந்த ஆத்ம சுதந்தரத்தின் ஆனந்தத்தையும் ரௌத்திரத்தையும் ஒருங்கே நடிப்பில் கொண்டு வந்திருப்பவர் ஒரு மராட்டிய நடிகர் என்பது வியப்பல்ல. ஷேக்ஸ்பியர் நாடகங்களின் ஆழ்மனச் சித்திரிப்பு, மொழி கடந்து பலமேடைகளில் துலங்குவதுபோல்தான் இதுவும்.



எனினும், கண்ணம்மா பாடல்களில் கனிந்துருகிய பாரதியைப் படத்தில் நிதானித்துப் பார்க்க முடியவில்லையே என்கிற குறை எழுந்தது. (பாத்திரப் படைப்பின் நிஜத்தன்மைக்குச் சான்றிதழ் வழங்கினார் நம்முடன் திரைப்படத்தைப் பார்த்த பாரதியாரின் பேத்தி லலிதா பாரதி. தமது பாட்டி விவரித்த பாரதியைப் படத்தில் கண்டதாகச் சொன்னார்.)

கலையம்சத்தில் நிறைய கவனம் செலுத்தப்பட்டிருந்தாலும் விமர்சனப் பார்வைக்குத் தப்பாத பல குறைகளைச் சுட்டிக்காட்ட முடியும். ஆனால், முயற்சியின் தீவிரத்தையும் நோக்கத்தின் உயர்வையும் கருதி, குறைகளை ஒதுக்கி, இந்தப் படத்தில் கரைந்துபோகத் தோன்றுகிறது.

கரைய வைப்பவர்கள் நடிகர்கள் ஷாயாஜி ஷிண்டே, குவளை பாத்திரத்தை ஏற்றிருக்கும் கஜேந்திரன், தேவயானி;

கிருஷ்ணமூர்த்தியின் கலை இயக்கம், அதை நிழல்போல் பின்தொடரும் தங்கர் பச்சானின் ஒளிப்பதிவு;

மௌனத்தை சங்கீதமாக்கும் வித்தையறிந்த இளையராஜாவின் ஆற்றல், பாரதியைப் புரிந்து கொண்ட பின்னணிப் பாடகர்கள்;

தனிப்பாடல்களாக மட்டுமின்றி வசனங்களிலும் மொட்டு மொட்டாக முந்திக் கொண்டு நிற்கும் அமரகவி வரிகள்.

பாரதியையும் அவர் வாழ்க்கையையும் வாசித்து வளர்ந்தவர்கள் மட்டுமின்றி 'பாரதி' யார்? என்று கேட்கும் இன்றைய குழந்தைகளும் பார்த்தாக வேண்டிய படம்.

தயாரிப்பு பொறுப்பை மீடியா ட்ரீம்ஸ் நிறுவனம் ஏற்றதுபோல் பள்ளிதோறும் திரையிடும் பொறுப்பை ஏற்று தனியாரும் அறக்கட்டளைகளும் இந்த 'ஸ்பான்ஸர்' யுகத்தில் புண்ணியம் தேடிக் கொள்ளலாம்.

— சீதா ரவி

'சொல்லின் செல்வன்' என்ற பட்டத்தை ஹனுமாருக்கு அளித்தான் கம்பன் என்று சொன்னேன். அதையும் ஸ்ரீ ராமனின் வாக்காக அளித்தான்.

வேதாந்த தேசிகரும் ரகுவீர கத்யம் என்ற துதியில் 'பாவுக பாஷித ரஞ்சித ஹ்ருதய' என்று ஆஞ்சனேயனைக் கொண்டாடுகிறார்.

கம்பர் மேலும் என்ன சொல்கிறார் பாருங்கள்; ராமனின் வாக்காக - லக்ஷ்மணனிடம் அவன் சொல்வதாகவே வருகிறது:

"தம்பி! இவன் உருவில் சிறியவனாக இருக்கிறானே என்று எண்ணாதே. ஒரு பெரிய தேருக்குச் சிறிய அச்சாணி எத்தனை முக்கியமோ, அப்படி இவன் வடிவம் சிறியதாயினும் இவன் பெரிய காரியங்களைச் செய்து முடிக்கும் ஆற்றல் பெற்றவன். காலம் வரும்போது இவன் மகிமை வெளிப்படும்- அதை நாம் பார்க்கப் போகிறோம்" என்கிறார்.

தீர்கதரிசனத்தோடு கூடிய வார்த்தை இது. ராமாயணத்தில் அதன் பின் நடைபெறும் சம்பவங்களுக்கு ஹனுமான் அல்லவோ முக்கிய காரணமாக விளங்குகிறார். அதை முதல் சந்திப்பிலேயே உணர்ந்து உவகையுடன் பேசும் ராமனின் வார்த்தையைவிட ஹனுமாரின் பெருமைக்கு வேறு என்ன வேண்டும்!

இதிலே சுவாரஸ்யமான ஒரு விஷயத்தை கவனிக்காமல் விட்டுவிடக் கூடாது-

லக்ஷ்மணனிடம் ஆஞ்சனேயனைப் பற்றி இவ்வளவு தூரம் புகழ்ந்து பேசிய ஸ்ரீராமன், தங்களைப் பற்றிய விவரங்களைச் சொல்லின் செல்வனிடம் நேரடியாகத் தெரிவிக்காமல் லக்ஷ்மணனைக் கொண்டு சொல்லச் சொல்கிறான்! - வால்மீகி ராமாயணத்தில் இப்படித்தான் அமைந்திருக்கிறது.

# ஸ்ரீராம பக்த ஹனுமான்

ஸ்ரீ ராமன் ஏன் ஹனுமாரிடம் நேரே பேசவில்லை...?

ராமனைக் காண ஹனுமான் வரும்போது அரசியல் ரீதியாக-மாறுவேடத்தில்- வருகிறான். தன்னைச் சுக்ரீவனுடைய அமைச்சராகத்தான் அறிமுகப்படுத்திக் கொள்கிறான்.

ஒரு அமைச்சர்-இன்னொரு அமைச்சரிடம் பேசுவதுதானே முறை... protocol! அதனால்தான் தமக்கு மந்திரி ஸ்தானத்திலிருக்கும் லக்ஷ்மணனைப் போய் ஹனுமாரிடம் பேசச் சொல்கிறான்!

லக்ஷ்மணனும் ஹனுமாரிடம் பேசிப் பார்த்து, அவனைக் குறித்து மிகவும் உயர்த்திச் சொல்கிறான் ஸ்ரீ ராமனிடம்:


"அண்ணா! எடுத்த காரியத்தை முடித்துத் தரக்கூடிய

## ஐயங்குளத்து ஆஞ்சனேயர்!

காஞ்சியிலிருந்து கலவை செல்லும் மார்க்கத்தில் பாலாற்றைக் கடந்ததும் நாம் காணும் ஊர் ஐயங்குளம். இங்கு அமைந்துள்ள ஹனுமார் ஆலயத்தைப் பற்றி அறிந்தால் வியப்பேற்படும்.

இது லட்சுமிகுமார தாத்தாச்சாரியார் என்பவரால் பதினாறாம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட கோயில் எனத் தெரிகிறது. சாதாரணமாக ஆஞ்சநேயர் ஆலயம் என்றால் ஒரு சின்ன கர்பக்ரஹம், முன் மண்டபம், விமானம் இவைதான் இருக்கும்.

ஆனால் இங்கு 136 ஏக்கரில் நீர் நிலை வெட்டப்பட்டு, அதன் தென்புறத்தில் ஹனுமாருக்கு ஒரு கோயில். நீராழி மண்டபம் போல் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ஏரியைச் சுற்றிலும் படிகள். ஒரே கல்லில் வடிக்கப்பட்ட தூண்கள். நாற்புறமும் கோபுரங்கள், நீண்ட மண்டபம், உட்பிரகாரம். இவற்றைத் தாண்டிச் சென்றால் ஹனுமார் அஞ்சலி ஹஸ்தராய் (கைகூப்பியவராய்) காட்சியளிக்கிறார்.




கல்யாணபுரம் ஆராவமுதன்

வன் கிடைத்து விட்டான். கவலை வேண்டாம். இந்த வீரன் ஹனுமான் பொய் சொல்லக்கூடியவன் அல்ல..." என்கிறான்.

எடுத்த காரியம் என்பது என்ன...?

தேவர்கள் துயர் தீர்க்க திருமால் தசரதன் மைந்தன் ராமனாக மண்ணுலகில் அவதரித்துத் திருமகளான சீதையை மணம் புரிந்தான். அயோத்தியில் முடி சூடவிருந்த தருணத்தில் மாற்றுத்தாய் வனம் போகச் சொல்லிவிட்டாள்! அதன்படி தம்பி லக்ஷ்மணனோடும் சீதையோடும் கானகம் சென்று பஞ்சவடியில் வசித்துவரும்போது சீதை ராவணனால் அபகரிக்கப்படுகிறாள்.

சிம்மாசனத்தைத் துறந்து வனம்போகச் சொன்னபோது சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை போன்ற வாடா முகத்துடன் மகிழ்வோடு புறப்பட்ட ஸ்ரீராமன் இப்போது கலங்கித் துயருற்றான்.

சீதையைத் தேடி ராமலக்ஷ்மணர்கள் போகிறார்கள்... அப்போது எதிர்ப்பட்டு வழி மறித்தான் கபந்தன் என்ற அரக்கன். கபந்தனின் கரங்களை வெட்டி வீழ்த்தினான் ராமன். சாபம் நீங்கப்பெற்றவனாக மீண்டான் கபந்தன். ராமபிரானை நோக்கிச் சொன்னான் அவன்:

"ஹே ராமா! எனக்கு தகனமூட்டிவிடுவாயானால் நான் பெரிதும் உனக்குக் கடன்பட்டவனாவேன். சீதையை மீட்டுவர நீ என்ன செய்யலாம் என்பதை விவரமாக உனக்குச் சொல்கிறேன்.." என்றான்.

கபந்தன் சொன்னதைக் கேட்ட ராம-லக்ஷ்மணர்கள் ஒரு பெரிய பள்ளம் வெட்டி, அதில் அவன் உடலைக் கிடத்திச் சுற்றிலும் கட்டைகளை அடுக்கித் தீயை மூட்டினர். அவன் உடல் எரிந்த பிறகு கபந்தன் தேஜோமயமான சரீரத்துடன் மேலெழுந்து ராமனை நோக்கிச் சொன்னான்:

"ராமா! துயருற்ற ஒருவன், தன்னைப் போன்றே துயருற்ற மற்றொருவனுடன் கூடி காரியத்தைச் சாதித்துக் கொள்வது உலக இயற்கை. ஆதலால், சீதையை இழந்து தவிக்கும் நீ, உன்னைப் போலவே துயரத்தில் ஆழ்ந்து கிடக்கும் ஒருவனுடன் நட்பு கொள்வது நிச்சயம் நன்மை பயக்கும். அவ்வாறு துயருற்றவன் யார் என்று கேட்பாயானால், அவன் சுக்ரீவன் என்கிற பெயருடைய வானர வீரன் ஆவான். பம்பா நதிக்கரையில் ருச்யமூகம் என்கிற மலைச் சாரலில், நான்கு வானரங்களுடன் அவன் இருக்கிறான். தன் அண்ணனான வாலிக்குப் பயந்து வாழ்கிறான். 'அவனுடன் நீ உரிய முறையில் நட்பு கொண்டால், இழந்த உன் மனைவியை அடைய அவன் பேருதவியாய்த் திகழ்வான்..."

ஆக, சீதையை மீட்டு வருதல் என்கிற காரியத்தை ஸ்ரீ ராமன் ஏற்க, அதற்குக் கபந்தன் வழிகாட்ட, அவ்வழி பற்றி ராம-லக்ஷ்மணர்கள் பம்பா தீரத்துக்கு வருகிறார்கள். அங்கு சுக்ரீவன் அறிமுகம் ஆஞ்சனேயன் மூலமாகத்தான் வாய்க்கிறது.

சுக்ரீவனைப் பார்க்க ராமலக்ஷ்மணர்களை அந்த ஹனுமான் அழைத்துப் போனான். அழைத்துப் போனார் என்றால் சாமானியமாக அழைத்துப் போய்விடவில்லை...

சுக்ரீவனைப் பற்றி முதலில் ராம-லக்ஷ்மணர்களிடம் எடுத்துச் சொல்கிறான். "சீதையைத் தேடும் விஷயத்தில் சுக்ரீவனும் நாங்களும் உதவி செய்கிறோம்" என்கிறான்.

அதன்பின் ராம-லக்ஷ்மணர்களைத் தனது தோளிலேயே தூக்கிச் சென்று சுக்ரீவன் முன்னிலையில் நிறுத்துகிறான்.

சாக்ஷாத் ஸ்ரீமன் நாராயணனைச் சுமக்க பாக்கியம் பெற்ற அந்த ஆஞ்சனேயனின் தோள்கள் பெருமையிலும் பராக்கிரமத்திலும் பூரித்துப் பொலிந்ததில் ஆச்சர்யம் என்ன!

ஆஞ்சனேயனின் இந்தச் சைகையில் இன்னொரு பெரிய சூட்சுமமும் அடங்கி




**''லஞ்சத்தை ஒழிப்போம்... லஞ்சத்தை ஒழிப்போம்னு தலைவர்கள் பேசும்போது கவனமாக் கேட்டுப் பாருங்க...''**

**''ஏன்?''**

**''லஞ்சத்தை ஒளிப்போம்னுதான் சொல்லுவாங்க!''**

**— எஸ். பொன்னுசாமி**



யிருக்கிறது.

ராம-லக்ஷ்மணர்களின் வருகையைக் கண்டு முதலில் சுக்ரீவன் சந்தேகமும் பயமும் கொண்டானல்லவா? அந்த அச்சத்தைப் போக்கும் விதமாகத்தான் ஹனுமார் அந்தக் காரியத்தைச் செய்தார். தனது தோள்களையே பல்லக்காக்கி ராம-லக்ஷ்மணர்களை அவர் சுமக்கவும், அந்தச் சிறப்பை பெற்றவர்கள் போற்றுதலுக்குரியவர்களே ஆவார்கள் என்பதை வெகு தூரத்திலிருந்தபடியே உணர்ந்து கொண்டான் சுக்ரீவன்.

சூட்சுமுமான செய்கையால் சுக்ரீவனின் அச்சம் போக்கி தைரியமூட்டியவன் ஆஞ்சனேயன்!

இந்தக் கட்டத்தில் வால்மீகி ஸ்ரீ ராம பக்த ஹனுமானை எப்படிப் பாராட்டுகிறார் பாருங்கள்:

''எல்லா தேவர்களாலும் கொண்டாடத் தகுந்தவன் அவன்...''

"செய்ய வேண்டியதைச் செய்து முடிக்கும் திறனுடையவன்."

''சுக்ரீவனைக் கூட அடக்கி ஆளத் தெரிந்த வானர வீரன்!''

– இப்படிப் புகழும் வால்மீகி ஹனுமான் தன் மெய்யுரு (வானர உரு) எடுத்து ராம- லக்ஷ்மணர்களைத் தூக்கிச் சென்றதாக மட்டுமே குறிப்பிடுகிறார். கம்ப நாடனோ, ஹனுமான் விசுவரூபமெடுத்து இருவரையும் தோளுக்கொருவராகத் தூக்கிச் சென்றதாகச் சொல்கிறார்.

எப்படியானாலும் கற்பனை செய்து பார்க்கவே சிலிர்க்கும் காட்சி அது.

அடுத்து ஆஞ்சனேயனின் பணி ராம-லக்ஷ்மணர்களை சுக்ரீவனுக்கு அறிமுகம் செய்வது. அவ்வாறு செய்வித்து விவரங்கள் கூறியதுமே சுக்ரீவன் மகிழ்ச்சியடைந்து சிநேகப் பிரதிக்ஞைக்குத் தயாராகிவிட்டான்.

"ராமா! என்னிடம் நம்பிக்கை இருந்தால், நட்பு கொள்ள விரும்பினால் கரங்களைக் கொடு-நட்பை உறுதி செய்து கொள்ளலாம்'' என்று கரங்களை நீட்டுகிறான் சுக்ரீவன். ராமனும் மனம் மகிழ்ந்து கரங்களை நீட்டுகிறான்.


இருவர் நட்பும் வலுப்பட, இருவருக்குமிடையே அக்னியைக் கொண்டு வந்து வைத்து சாட்சியாக்கியவன்... ஹனுமான் அன்றி வேறு யார்?

(வளரும்)

## அருள்வாக்கு

### படிப்பில் போட்டி

ஒன்றே ஒன்றில்தான் போட்டியிருக்க வேண்டும். 'அந்தப் பையன் இவ்வளவு நிறைய மார்க்கு வாங்குகிறானே! நாமும் அப்படி வாங்க வேண்டும்' என்ற ஆசையுடன், ஊக்கமாகப் படித்துப் போட்டி போட வேண்டும். இந்தப் போட்டியும் பொறாமையாகிப் போவதற்கு விடக் கூடாது. அறிவாளியாக, நல்லவனாக இருப்பதற்குப் போட்டி போடலாமே தவிர, பொறாமை கூடவே கூடாது. விளையாட்டிலும் அப்படியே!



### விளையாட்டு

உடம்பை பலமாக வைத்துக் கொள்வதற்காகவும், மனம் உற்சாகமாக இருப்பதற்காகவும் நீங்கள் யாவரும் விளையாட வேண்டியது அவசியம். நான் சொல்லாமலே, உங்களுக்காகவே விளையாட்டில் இஷ்டமும், ஈடுபாடும் இருக்கத்தான் செய்யும். இங்கேதான் ஜாக்கிரதை தேவை. உங்கள் படிப்புக்குச் சிறிதுகூட இடையூறு இல்லாதபடியும், பிறருக்கு எந்த விதத்திலும் இம்சை ஏற்படாதபடியும் உங்களுடைய விளையாட்டு ஆசையை அளவுக்குள் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

விளையாட்டு என்றால் மற்றவரை ஜயித்தாக வேண்டும் என்ற ஆர்வமும், விடாமுயற்சியும் ஏற்படவே செய்யும். ஆகையினால் அதில் போட்டியும் தவிர்க்க முடியாத அம்சமாகிவிடுகிறது. அதனால் தவறில்லை. ஆனால் இது காரணமாக, ஜயிக்கிறவர்களிடம் பொறாமை எண்ணம் ஏற்பட இடம் தரக் கூடாது. விளையாட்டுப் போட்டி சண்டையாகவும், விரோதமாகவும் ஆகிவிடக் கூடாது. நம்மை ஜயிக்கிறவனை நமக்கு உதாரணமாகக் கொண்டு சிநேகம் பாராட்ட வேண்டுமேயன்றி விரோதியாகக் கருதலாகாது.

**— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.**

பா. ராமச்சந்திரன்

# மனைவெளி

வீடு கட்டுகிற எல்லோருக்கும் வரும் கனவுகளைப் போலவே எனக்கும் கனவுகள் வரத் தொடங்கியிருந்தன. தரையில் மொசைக் பதித்த அன்று காண்டிராக்டர் சொன்னார். "சார் எல்லாம் முடிஞ்சது. கரண்ட் வரட்டும். கல்லை பாலீஷ் பிடிச்சுக் குடுத்துடறேன். பாலீஷ் முடிஞ்ச கையோட சுண்ணாம்பு பெயிண்டிங் முடிச்சிடலாம். பாலீஷ் முடிக்காம சுண்ணாம்பைத் தொட்டோம்னா வீடு முழுக்க கரையாயிடும். நீங்க தைரியமா தையிலே தேதி பாருங்க..."

"கரண்ட் இரண்டு மாசத்துக்குள்ளே வந்துடுமில்லே?"

"அது வந்தா வருது வராட்டி போவுது. வந்தா போஸ்ட் வழியா கரண்ட். வராட்டி பூமி வழியா கேபிள் இழுத்துக்கிடலாம். எவ்வளவு செலவானாலும் நானாச்சு. நமக்கு ஈ.பியிலே இன்ஜினியர்கள்கூட நல்ல பழக்கம். போய்ச் சொன்னாப் போதும் உடனே முடிஞ்சுடும். உங்க வேலையைத்தான் சார் பர்ஸ்ட் செய்யறேன்!"

காண்டிராக்டரின் வார்த்தைகளில் விழாதவர் இல்லை.

"சார் பேலன்ஸ் அமவுண்ட் அப்படியே நிக்குது சார்... அடுத்த வாரம் டேட்ல செக் குடுத்துடு சார்..."

"அடுத்த வாரம் டேட்ல செக் எதுக்கு அண்ணாச்சி... இரண்டு நாள்ல ரொக்கமாவே கொடுத்துடறேன்... தைக்குள்ளே முடிச்சுக் கொடுத்துடுவீங்க இல்லே?"

காண்டிராக்டர் அமிர்தலிங்கம் முகத்தில் களை ஏறியது. இப்படி எத்தனையோ முறை, அடுத்த வாரத்திலாவது பணம் கிடைக்குமா என்று அவர் ஆவலாகப் பணத்தை எதிர்நோக்கி நிற்கும் பல நேரங்களில், பணத்தை முன்கூட்டியே கொடுத்து அசத்தியிருக்கிறேன். அவர் மனதில் நம்மீது மதிப்பு உயரணும். வேலை ஒழுங்காக முடியணும் என்பதற்காகத்தான். அம்மாதிரியான தருணங்களில் அமிர்தலிங்கம் அதிகமாகப் பேசுவார்.

"நமக்கு சொல்லு ரொம்ப முக்கியம் சார். கடவுள் படத்தாண்டை வைச்சு சொல்றேன். நீங்க நமக்கு பெரிய பிள்ளை மாதிரி. அவன் என்னைத் தனியா விட்டுட்டுத் தொழில் தொடங்குறேன்னு போயிட்டான். அதனாலே என்ன சார்? நீ இருக்கியே நமக்கு பிள்ளையாட்டம். அதான் சார் சொல்றேன். பிள்ளைகிட்டே தகப்பன் ஏமாத்துவானா?"

வீட்டில் அப்பா ஞாபகப்படுத்துவார். "அந்தாளுகிட்டே ரொம்ப ஜாக்கிரதையா இரு. பணம் வாங்குறவரைக்கும்தான் அவன் மனுஷன். வாங்கிட்டான்னு வைச்சுக்க. அப்புறம் வார்த்தையைக் காத்துலே விட்டுடுவான். கரண்ட் எப்ப வருமாம்..? தைக்குள்ளே முடிச்சு கொடுத்துடுவானா? இரண்டு மாசத்துக்குள்ளே கரண்டு வந்துடும்ல?"

இந்த ஒரு வருட காலத்தில் காண்டிராக்டரிடம் ஏற்பட்ட பல கசப்பான அனுபவங்கள் அப்பாவுக்கும் தெரியும். அதை மனத்தில் வைத்து அப்பா பேசினார்.

"இரண்டு மாசத்துலே வந்துடும்னு உறுதியா சொல்றான். வரதுக்கு லேட்டானா பூமியிலே கேபிள் இழுத்து தந்துடுறேன்னு சொல்லியிருக்கான்!"

அப்பாவுக்குத் துணையாக அடுக்களையிலிருந்து ஒரு குரல் வந்தது.

"என்னங்க, மாடியிலே கைப்பிடிச்சுவரை இன்னும் கொஞ்சம் உயரமா வைக்கச் சொன்னேனே சொன்னீங்களா?"

"எல்லாத்தையும் இங்கேயிருந்தே சொல்லு. ஒரு நாளைக்கு அங்க வந்து நின்னு பாரு."

"ஏண்டா மங்கா சொல்றதுலே என்ன தப்பு?.. இன்னிக்கு எல்லாத்தையும் கறாரா சொல்லிட்டேன்னு போனே. மொசைக் போட்ட சந்தோஷத்திலே எல்லாத்தையும் மறந்துட்டு வந்து நிக்குற..."

"அங்க பஸ் பிடிச்சு போறதே டென்ஷன். அரை நாளு லீவு எழுதி வைச்சிட்டு வெயில்ல கால் கடுக்க பூக்கடைப் போய் பஸ் பிடிச்சி அங்க போய்ச் சேர்றப்ப மணி இரண்டரை ஆயிடும். இவ கட்டிக் குடுக்கற சாப்பாட்டை எங்க வைச்சு சாப்பிடறது? பக்கத்துலே தங்கமணி வீடு இருக்கிறதினாலே தப்பிச்சேன். அவங்க வீடு இல்லேன்னா நம்ம கதை அதோகதிதான். சாப்பிடறதுக்கு, வாழை இலையிலேயிருந்து தண்ணி வரைக்கும் எல்லாம் அவங்க வீட்டுலயிருந்துதான்."

தங்கமணி வீட்டுப் பேச்சைப் பேசத் தொடங்கினால் மங்காவும் சேர்ந்து கொள்வாள். "ஆமாங்க அந்தாளும் சரி, அந்தம்மாவும் சரி. ரொம்ப நல்ல மனுஷங்க. தளம் போடறன்னிக்கு நம்ம வீட்டு ஜனங்க மொத்த பேரும்

# போட்டிக் கதை - 4

அவங்க வீட்லதான் எல்லார்க்கும் அவங்க வீட்டு வாழை இலையிலேதான் சாப்பாடு. அந்தக் காட்டுல உட்கார்ந்து சாப்பிடறதுக்கு ஏது இடம்?"

நிலம் வாங்குன நாள்லயிருந்து இன்னி வரைக்கும் சந்தோஷப்புரத்திலே எங்களுக்குத் தெரிஞ்ச ஒரே குடும்பம் தங்கமணி குடும்பம்தா.

நில பூஜையன்னிக்குத் தங்கமணி சொன்னார். "சீக்கிரமா முடிச்சுட்டு வந்துடுங்க சார். ஒவ்வொருத்தரா வந்தாதானே ஊரு டெவலப் ஆகும்."

"இங்கே எவ்வளவு நாளா இருக்கீங்க சார்?"

"வந்து மூணு வருஷமாயிடுச்சு சார். இப்பவாவது பால்காரம்மா, பாங்க்காரருன்னு நாலஞ்சு வீடு இருக்கு. நாங்க வரப்ப யாருமே இல்லீங்க."

"கரண்ட் இல்லாம இருக்கறீங்கன்னா ரொம்ப தைரியம் சார். பசங்க எப்படி சார் படிப்பாங்க?"

"கிராமத்துலே இருந்த ஆளுங்க. எங்களுக்கு இது சர்வ சாதாரணம் சார்."

"கரண்டுக்கு அப்ளை பண்ணிட்டீங்களா?"

"எல்லாமே சேர்த்துதான் காண்டிராக்ட் விட்ருக்கேன். நம்ம இருக்கறது வண்ணாரப் பேட்டையிலே. வீடு கட்டுறது இங்கே. ஒவ்வொண்ணுக்கும் அலைய முடியாது சார். நமக்கு இதுலே அனுபவமும் இல்ல."

நில பூஜை தொடங்கி வரிசையா நடந்த எல்லா பூஜையிலும் தங்கமணி தவறாமல் பங்கேற்பார். தவறாமல் கேள்வியொன்றையும் கேட்பார்.

"தையிலே கிரகப்பிரவேசம் முடிச்சுடுவீங்க இல்லே?"

ஒவ்வொரு முறையும் நம்பிக்கையுடன் பதில் சொல்வேன்.

மொசைக் பதித்த அன்று சந்தோஷ்புர சைக்கிள் ஸ்டாண்டில் சந்தித்துக்கொண்டோம்.

"கல்லு பதிச்சாச்சு போலிருக்கு. இன்னும் கொஞ்ச வேலைதான் இருக்கும். கரண்ட் எப்ப சார் வருதாம்?"

"அதான் சார் பாக்கி. இரண்டு மாசத்துலே வந்துடுங்கிறார். கரண்ட் வந்த ஒரு வாரத்துலே எல்லாமே முடிஞ்சுடும் சார்..." காண்டிராக்டர் மனத்தில் பதிய வைத்திருந்த வார்த்தைகள் தங்கு தடையில்லாமல் வந்தன.

"கிரகப்பிரவேசத்துக்கு உங்க உதவியைத்தான் நம்பியிருக்கேன் சார். சந்தோஷ்புரத்திலே நமக்கு முதல் விருந்தாளி, நண்பர் நீங்கதான்"

"ஆகட்டும். பார்த்துக்கலாம் சார்."

அடுத்த பத்து தினங்கள் கனவுலகிலேயே கழிந்தன. சாப்பாடு மெனு, புதுத் துணி யார் யாருக்கு, அழைப்பிதழ் எப்படி அடிப்பது, நிலத்தில் முன்னரே நட்டிருந்த மரங்களின் வளர்ச்சி குறித்து கிரகப்பிரவேசத்தன்று அதிசயிக்க போகிற நண்பர்களின் முகம், கிரகப்பிரவேசத்தன்று போடுவதற்காக ரங்கநாதன் தெருவில் அலைந்து திரிந்து வாங்கிய ரவிசங்கரின் சிதார் ஒலிநாடா, புது வீட்டைத் திறந்து வைக்கும்போது அப்பாவின் முகத்தில் வரும் சந்தோஷம். இவற்றையெல்லாம் பார்த்துவிட மனது பரபரத்தது. "வீட்டை நீங்கதான் திறந்து வைக்கப் போறீங்க அழைப்பிதழில் உங்க பேரைத்தான் போடப் போறேன். வீட்டுக்கு அம்ம





"உன் வீட்டுக்காரு உங்கேடை கல்யாண நாளை ஞாபகம் வச்சுக்கிறது இல்லேன்னு சந்தோஷமாச் சொல்றே?"
"ஆமா, ஆறு மாசத்துக்கொருதரம் கல்யாண நாள்னு சொல்லி ஒரு புடைவை எடுத்திடறேனே!"
- வி. தாரா

பெயர்தான். கடப்பை கல்லுல சரஸ்வதி இல்லம்னு பெயர்கூட எழுதியாச்சு."

அம்மாவின் பெயரைக் கேட்ட நிமிடத்தில் அப்பா, அம்மா பற்றிய நினைவலைகளில் மூழ்கினார். "அவ இருந்தான்னா கண்ணுல நீர் முட்டற அளவுக்கு சந்தோஷப்பட்டிருப்பா. நான் எழுபத்தி மூணு வருஷம்னா அவ இருந்த நாப்பத்தொன்பது வருஷமும் வாடகை வீடுதான் கண்டா."

அடுத்த நாளே காண்டிராக்டர் பேசினார்; ஆபீஸ் தொலைபேசியில்.

"என்ன சார் உங்களைப் பிடிக்கவே முடியலியே. எத்தனை முறை டிரை பண்றது." குரலில் தெரிந்த ஒரு வகையான குழைவு காண்டிராக்டர் மீண்டும் பொய் புராணத்தைத் தொடங்குவதாகப் பட்டது.

"விஷயத்தைச் சொல்லுங்க."

"சார் கீழே கேபிள் இழுக்க இப்ப அனுமதி இல்லையாம். போஸ்ட்மூலம் மட்டும்தான் கரண்ட் தரணுமாம். போஸ்ட் வரட்டும் நமக்கு முதல் ஆளா தரேங்கிறான்."

"போஸ்ட் எப்ப வருமாம்?"

"இரண்டு மாசம் ஆயிடுங்கிறான்."

"ஏற்கெனவே இரண்டு மாசம்னு சொன்னீங்க. இப்பவே ஒரு மாசம் முடியப் போவுது. இப்பவும் இரண்டு மாசங்கறீங்க. உங்கப் பேச்சை நம்பி கார்டெல்லாம் வாங்கி பிரிண்ட் பண்ணக் கொடுத்தாச்சு. நீங்க சொன்னதை நம்பி தையில கிரகப் பிரவேசம் வைச்சிருக்கேன். என்ன விளையாடறீங்களா?" அலுவலகச் சூழல் மீறி குரல் உச்சத்துக்குப் போனது.

"என்ன சார் பண்ணச் சொல்றீங்க? போஸ்ட் டிமாண்ட்னு சொல்றப்ப என்ன பண்ண முடியும்? கேபிள் இழுக்கவும் பர்மிஷன் இல்லே. சொன்ன சொல்லு முக்கியம்னு எவ்வளவு செலவானாலும் பரவாயில்லைனு பார்த்தால் நம்ம நினைச்சது ஒண்ணு நடக்கறது வேற ஒண்ணாயில்லே இருக்கு. நான் என்ன சார் பண்றது?"

நேரில் பேசினால்தான் சரி வருமென்று ஆத்திரத்துடன் போனை வைத்தேன். கவனித்துக் கொண்டிருந்த பக்கத்து சீட் நண்பர் கேட்டார். "என்ன சொல்றான் சார்? இதையெல்லாம் போன்ல பேசக்கூடாது. நேரில் போயி வாய்க்கு வந்ததைக் கேட்கணும். இவனுங்க ஒரு நாளைக்கு விளங்க மாட்டானுங்க. அவனுங்க மேலே எப்பவும் ஒரு கண் இருக்கணும்."

மறுநாள் மதியம் சந்தோஷ்புர ஈ.பி. ஆபிஸில் இருந்தேன். "கன்சர்ன் சீட் கிளார்க் வரலை... மத்தியானத்துக்கு மேலே வந்தா வருவார்..." ஆபீஸ் ப்யூன் சொல்லிவிட்டுப் போனான். என்னைப் போலவே பலரும் அவருக்காகக் காத்திருந்தனர். ரொம்ப நேரத்திற்குப் பிறகு அவர் வந்தார். களைத்திருந்தார் முகமெல்லாம் வியர்த்திருந்தது. பெடஸ்டல் ஃபேனை தன் முகத்துக்கு நேராகத் திருப்பி வைத்துக்கொண்டார். சட்டையின் முதல் இரண்டு பட்டன்களைக் கழற்றி, சட்டையைத் தளர்த்தி முதுகுப் பக்கமாக இழுத்து விட்டுக் கொண்டார். அப்படியே சீட்டில் சரிந்தவர் அப்படியே திரும்பி எங்களைப் பார்த்தார். முதலில் என்னைத்தான் கூப்பிட்டார்.

"என்னங்க விஷயம், என்னைய பாக்கவா வந்திருக்கீங்க?"

விஷயத்தைச் சொன்னேன்.

"ரசீது வைச்சிருக்கீங்களா. பணம் கட்டி எப்ப கொடுத்திருப்பாங்களே?"

"என்கிட்டே இல்ல சார். காண்டிராக்டர் கட்டியிருப்பாரு."

"அப்ப கொஞ்சம் வெயிட் பண்ணுங்கன்னு!" சொல்லிவிட்டு மற்றவர்களுக்குப் பதில் சொல்லத் தொடங்கினார்.

எல்லாம் முடிஞ்சவுடன் என்னைப் பார்வையால் அழைத்தார்

"எப்ப பணம் கட்டினாருன்னு தெரியுமா? இல்ல அதுவும் அவருக்குத்தான் தெரியுமா?" பேச்சில் எகத்தாளம் வழிந்தது. ரத்தம் நூத்தி எண்பதில் கொதித்தது.

லெட்ஜரைப் புரட்டிப் பார்த்துவிட்டுச் சொன்னார். "நவம்பர்ல பணத்தைக் கட்டிட்டு டிசம்பர்ல வந்து கரண்டுக்கு நிக்குற ஆளு நீங்களாத்தான் இருப்பீங்க."

அதுவரை அமைதியாய் தானுண்டு தன் பைல் உண்டுனு இருந்த ஊழியரொருவர் இவருடன் சேர்ந்துகொண்டார்.

"ஜனவரியிலே கட்டினவங்களுக்கே இன்னும் கம்பம் வரலை சார்."

"இல்லங்க முன்னாடியே அப்ளை பண்ணியாச்சுன்னு சொன்னாரு. அதை நம்பித்தான்..."

"நல்லா நம்புனீங்க. இதையெல்லாமா

# KALKI SHOPPING PAGE

"உடனடியாக வீடு கட்டவோ அல்லது விரைவான முதலீட்டு லாபமோ எப்படியானாலும் இது ஒரு புத்திசாலித்தனமான முதலீடு"

நல்ல வீட்டு மனையை நழுவ விடாதீர்கள்

## சிந்து நகர் - சென்னை -56.

(சவிதா டெண்டல் காலேஜ் அருகில்)

CMDA அப்ரூவ்டு மனைகள். (ரூ. 65/99.)

- அமைந்துள்ள இடம் ✔
- மாநகருக்கு அருகில் ✔
- பாதுகாப்பு ✔
- முதலீடு செய்யும் பணத்துக்கு தகுந்த மதிப்பு ✔
- வேகமாக உயரும் நில மதிப்பு ✔

### சிறப்பு அம்சங்கள்

- உடனே வீடு கட்டலாம்/ அருகில் வீடுகள்.
- கோயம்பேட்டிலிருந்து 10 நிமிட பயணம்.
- அண்ணா நகரிலிருந்து 15 நிமிட பயணம்.
- சுலபமான மூன்று வழிப் பாதைகள். கிண்டி, செயிண்ட்தாமஸ் மவுண்ட் போரூர் 100 அடி சாலை அரும்பாக்கம் கோயம்பேடு 100 அடி சாலை அம்பத்தூர் ஆவடி 60 அடி சாலை.
- சென்னை பெங்களூர் (NH4) தேசிய நெடுஞ்சாலை.



- கோயம்பேட்டில் அமைந்துவரும் பிரம்மாண்ட பஸ் நிலையம்
- தாம்பரம் வானகரம் புறவழிச் சாலை.
- மாநகரின் அனைத்து பகுதிகளுக்கும் தாராளமான பஸ் வசதி
- மெடிக்கல், டெண்டல். இஞ்சினியரிங் கேட்டரிங் ஆர்ட்ஸ் கல்லூரிகள் அருகில்
- சுவையான / மிகுதியான நிலத்தடிநீர்.
- சுத்தமான பத்திரம் / நம்பகமான நிறுவனம்
- உடனடி பத்திரப் பதிவு.
- 5 வருட மனை பாதுகாப்பு சேவை.

மனையை பார்வையிட இலவச வாகன வசதி

காலை 7.00 மணி, 11.00 மணி மாலை 3.00 மணி

**PH: 4 3 5 7 7 21 / 31**

**CELL: 98400 44018**


**BLB Estates (P) Ltd.**

S3, "Ramana Flats"/, 27, Rathna Nagar, Off ; Anna Salai, Teynampet, Chennai - 18. (Behind Apollo Cancer Hospital)

வர்த்தகத்தில் நேர்மை : பணியில் பொறுப்பு

---

## நவராத்திரி கொலுப் படிகள்



எங்களிடம் தரமான கொலுப் படிகள் உங்களது தேவைக்கேற்ப, 7 படிகள், 5 படிகள், 3 படிகள் அளவுகளில் கிடைக் கும்

மொத்தமாகவும் & சில்லரையாகவும் கிடைக்கும் இடம்.

**OM SAKTHI METAL CRAFT**

(Manufacturers)

49, perambur High Road, Jamaliya, Chennai -12.

Ph: 6427719, Fax: 6433984

---




## "கல்கி ஷாப்பிங்"

பக்கங்களில் விளம்பரம் செய்ய ரூ.1250/- மட்டுமே. செய்து பயனடைவீர்!

47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை – 97.

போன்: 2345622, 2345623



**"இந்தாங்க நீங்க பரிசாகத் தந்த மோதிரம்! நான் இன்னொருத்தரைக் கல்யாணம் செஞ் சுக்கலாம்னிட்டு முடிவு பண்ணிட்டேன்!"**

**"யாரவன்?"**

**"ஐய்யோ, எதுக்கு கேக்கரீங்க?"**

**"இந்த மோதிரத்தை அவன்கிட்டே வித் திரலாமேனிட்டுதான்!"**

**- வீரப்பன்**

அவரை நம்பி விடுவீங்க? தனம் போட்ட வுடனே அப்ளை பண்ணலாம்னு விதி வைச் சிருக்கோமே சார்... அப்பவே பண்ண வேண்டி யதுதானே..." சொல்லிவிட்டு வேண்டா வெறுப் பாக லெட்ஜரை மீண்டும் புரட்டினார். என் பெயரைப் பார்த்த மாத்திரத்தில் லெட்ஜரை என் பக்கமாக நகர்த்தினார். நகர்த்தினார் என்று சொல்ல முடியாது. வீசினார்.

லெட்ஜரில் பெயர், பதிவு செய்யப்பட்ட நாள், விலாசம் தெளிவாக சிவப்பு மையால் குறிக்கப்பட்டிருந்தது.

இனி விஷயத்தை சொல்லி கெஞ்சி விட வேண்டியதுதான். "சார் வேற ஏதாவது வழி இருக்கா? தையில கிரகப்பிரவேசத்துக்கு எல்லா ஏற்பாடும் பண்ணியாச்சு."

விநோதமான ஜந்துவைப் பார்ப்பதுபோல் என்னைப் பார்த்துவிட்டுச் சொன்னார்.

"பக்கத்துலே கம்பம் இருந்துச்சுன்னா ஏதாச்சும் பண்ணலாம். தெருவுக்கே நீங்கதான் முதல் ஆளா பண்றதினாலே ஆறு அல்லது ஏழு கம்பம் தேவைப்படும். எப்படிப் பார்த் தாலும் ஒரு வருஷம் ஆயிடும். பக்கத்துலே வீடே இல்லியா?"

"இருக்கு சார். தெருவிலே கடைசி வீடு. பிளாட் நெம்பர் பத்து. அவரு வீட்லயும் கரண்ட் இல்ல. காசில்லைனு இன்னும் அவர் அப்ளை பண்ணலை."

"இல்ல சார். காசில்லைனு அந்தாளு பண்ணாம இல்லே. முதல்ல அப்ளை பண்ணா தெரு முழுசுக்கும் நடற போஸ்ட்டுக்கு அந்தாளு செலவு பண்ண வேண்டியது வரும். அதான் அவன் அப்ளை பண்ணலை. முதல்ல நீங்க எப்படியும் பண்ணுவீங்க என்கிற தைரியம். அதனாலேதான் உங்க காண்டிராக்டரும் லேட்டா அப்ளை பண்ணியிருக்கான். அவசரம்னா நீங்க செலவு பண்ணுவீங்கன்ற தைரியத்துல..."

எப்படியும் ஒரு வருஷமாயிடும். ஆனா விடாம வந்து ஏஇயைப் பாருங்க."

காண்டிராக்டரையும் தங்கமணியையும் நினைத்து இரத்தம் சூடாகியது... 'ச்சே என்ன மனிதர்கள்?'

விஷயம் கேள்விப்பட்டதும் குடும்பம் கவலைக்குள்ளானது. எழுபத்து மூணு வருட வாடகை, வீட்டுச் சோகம் அப்பா முகத்தில் மீண்டும் வரத் தொடங்கியிருந்தது. தைத்து தயாராயிருந்த குழந்தைகளின் துணிகள் பத்திரமாக உறைகளில் இடப்பட்டன. மங்கா மீண்டும் குறை சொல்ல ஆரம்பித்து விட்டாள்.

சந்தோஷ்புரத்திற்கும் ஈ.பி ஆபிஸுக்கும் ஒரு வருட காலம் நடையாய் நடந்த பிறகு ஒருநாள் சந்தோஷ்புர ஈ.பி ஆபீஸ் நல்ல தகவலோடு என்னை வரவேற்றது.

"அந்தத் தெருவுலே முதல் கனெக்ஷன் உங்க வீட்டுக்குத்தான். மொத்தம் ஏழு போஸ்ட் நடணும். அஃபிஷியலா இவ்னோ பணம் கட்டணும். அன் அஃபிஷியலா எங்காளுங்க கேட்கறதைக் கொடுத்திடுங்க. காசைப் பாக் காதீங்க. லைன்ல வரவங்க வேற ஏதாச்சும் காரணம் சொல்லி லேட் பண்ணிடுவாங்க."

பணத்தைக் கட்டிய பதினைந்தாவது நாள் போஸ்ட் நடப்பட்டது. கரண்ட் வந்ததும் வேலைகளை விடுவிடு என்று நடத்தினார் காண்டிராக்டர். கடைசியாகக் கொடுக்க வேண் டிய தொகை காரணமாகவும் இருக்கலாம். ஒரு வருஷமாய் வீடு பூட்டிக் கிடக்கிறதே என்கிற குற்ற உணர்வும் காரணமாக இருக்கலாம்.


மீண்டும் கிரகப் பிரவேச கனவுகள் வரத் தொடங்கியிருந்தன. புதுத் துணி, அழைப்பிதழ், ரவிசங்கர் சிதார் இசை... சந்தோஷ்புரத்தில் இந்த ஒரு வருடத்தில் வீடுகள் நிறையவே வந் திருந்தன... எல்லோருக்கும் அழைப்பிதழ் கொடுத்தோம். காண்டிராக்டருக்குக்கூட கொடுத்தோம்.

கிரகப் பிரவேச வேலைகளுக்கு மத்தியில் சந்தோஷ்புரத்திலிருந்து செய்தியொன்று வந்தது. "சார் உங்க வீட்டு போஸ்ட்டுலேயிருந்து தங்க மணி அவங்க வீட்டுக்கு கரண்ட் இழுத்துக் கிட்டான்." - செய்தியைக் கேட்ட மாத்திரத்தில் உடம்பு கொதித்தது. இந்தமுறை விடக் கூடாது... ஒரு வாங்கு வாங்கிவிட வேண்டியதுதான்.

அலுவலகம் விட்டதும் பஸ் பிடித்து சந்தோஷ்புரத்தில் இறங்கினேன். கால்கள் தங்கமணி வீட்டருகே சென்றதும் நின்றன. தங்கமணி வீட்டில் வெளிச்சம் பரவியிருந்தது. அவன் வீட்டுப் பிள்ளைகள் வெளிச்சம் கிடைத்த சந்தோஷத்தில் உரக்கப் படித்துக் கொண்டிருந்தார்கள். என்னைப் பார்த்தவுடன் "அங்கிள் எங்க வீட்டுக்கு கரண்ட் வந்துடுச்சு." உற்சாகமாய்ச் சொன்னார்கள்.

தங்கமணி, குழந்தைகளின் சத்தம் கேட்டு வெளியே வந்தார். லஞ்ச் பைக்குள் இருந்த கிரகப் பிரவேச அழைப்பிதழ் ஒன்றை எடுத்து திரு. தங்கமணி அவர்கள் குடும்பம் என்று எழுதத் தொடங்கியிருந்தேன். ●

எண்திசைச் செய்திகள்
வானவில்லின் வண்ணங்கள்



# கல்கி தீபாவளி மலர் - 2000

சிறுகதைகள், குறுநாவல், கவிதைகள்,
ஆன்மிகம், கலை, கேளிக்கை
- அனைத்தும் வழங்கும்
புத்தக அரங்கம்

விலை ரூ. 60/- பதிவுத் தபால் அல்லது கூரியரில் பெற
ரூ.100 அனுப்பவும்; அல்லது உள்ளூர் ஏஜெண்டிடம்
பதிவு செய்து கொள்ளவும்.
மானேஜர், கல்கி, 47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காட்டுதாங்கல், சென்னை 600 097.

## செப்டெம்பர் 13 முதல் 19 வரை

# நடக்குமென்பார்

**மேஷம் :** *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

ராகு, குருன்னு இரட்டை கடாக்ஷம் இந்த ராசிக்காரங்க பேர்ல கருணை மழை பொழியுது! செல்வாக்கு கம்மா நக்கீரன் கோபால் ரேஞ்சுக்கு உயரும்னா பாத்துக்குங்க. கடன் தொல்லை காணாம போய் நல்லதெல்லாம் வரிசையா நடக்கப்போகுது. அயல்நாட்டுத் தொடர்போட 'சொந்தத் தொழிலா...? அதிலயும் ஏறுமுகம்தான்; அரசுப் பணின்னாலும் முன்னேற்றம்தான். அரசியல் வாதிகளுக்கும் நல்ல நேரம். மருத்துவர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள்னு ஒருத்தர் பாக்கியில்லாம இந்த ராசிக்காரங்களுக்கு நல்லது நடக்கும். தாய்க்குலம் மட்டும் கொஞ்சம் பொறுப்போட நடந்துக்கணும்- எப்பவுந்தானேன்னு கேப்பீங்க- இந்த வாரம் கொஞ்சம் எக்ஸ்ட்ரா ரெஸ்பான்ஸிபிளிடி!

**ரிஷபம் :** *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

குருவும் சனியும் கொஞ்சம் உலாவர தீர்மானிச்சட்டதால இந்த வாரம் முன்னேற்றப் பாதைதான். ஆனால் ஸ்பீட்பிரேக்கரா கொஞ்சம் சலனம் வந்து கஷ்டப்படுத்தும். உடம்பை கவனிச்சுக்குங்க. அயல்மொழியார் அன்னியர்களால் சங்கடங்கள் வந்தாலும் நிதானத்தை இழந்துடாதீங்க. அலைச்சல் ஏற்படாம தவிர்த்திடுங்க. அகத்தின் அழகும் முகத்தின் அழகும் கை கொடுக்கும் உங்களுக்கு. எடுத்த காரியம் யாவிலும் வெற்றி. சுபகாரியமும் அதனால் செலவையும் எதிர்பாருங்கள்!

**மிதுனம் :** *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர் பூசம் 3-ம் பாதம் வரை)*

அம்மா(ஜெ இல்லீங்க- உங்கம்மா) ஆசியினாலயும் அம்மா வழி உறவினர் ப்ரியத்துனாலயும் நல்லது நடக்கும் பாருங்க. புத்தாடைகள், நகைகள் சேரும். அந்த சந்தோஷத்துல வாயை விட்டுடாதீங்க. இந்த வாரம் நீங்க அடக்கி வாசிக்கறதே நல்லது. நிதானம் விவேகம்- இவையே உங்கள் தாரக மந்திரமாயிருக்க வேண்டும். ஆபீஸ் போறவங்களுக்குச் சுமாரான வாரம்தான். உழைச்சு சம்பாதிக்கறது தங்கணும்னா நீங்கதான் சிக்கனமாயிருக்கணும். முடிஞ்சா துறவி யாரையாவது வணங்கிக்குங்க. மருத்துவர்கள் விஞ்ஞானிகளின் திறமை ஜொலிக்கப்போகிற வாரம் இது.

**கடகம் :** *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

பேச்சாற்றல் குற்றாலம் அருவி மாதிரி பெருகும். சுப காரியங்களில் கலந்து கொள்ளும் நேரம் வந்தாச்சு. திறமை வெளிப்படப்போகுது. குடும்ப நலத்துக்காக செலவும் விரட்டிக்கிட்டு வரும். ஆனா மனைவி/கணவன் புகார் படிக்க மாட்டாங்க-இது சௌஜன்ய வாரம்! சிந்திக்க நேரம் இருக்கும்- அதுனால தெளிவும் பிறக்கும்.

**சிம்மம் :** *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

இந்த ராசியில் பிறந்த கலைஞர்களுக்கு இது அம்சமான நேரம். குடும்பத்தில் அமைதி நண்பர்களாலயும் உறவினர்களாலயும் ஏற்படும். புதன் பலமாயிருக்கிறார் என்பதால் வியாபாரிகள் விலைவாசி மாதிரி உயரே போவார்கள்! ஆனால் சும்மாவேனும் லாபத்தைப் பெருக்க ரிஸ்க் எடுக்காதீங்க. நிர்வாகத் திறனும் அறிவாற்றலும் வெளிப்படுகிற நேரம் இது. அரசாங்கத்தால் நல்லது நடக்கும்னா நம்புவீங்களா? நம்புங்க நடக்கும்! அப்புறமென்ன சும்பீரமா நீங்களும் நடை போடுங்க!

**கன்னி :** *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*


இந்த வாரம் புருஷன்-பெண்டாட்டி உறவு பத்தின கவலையில்லீங்க... அப்புறமென்ன பாதி பிரச்னை தீர்ந்தது. அகலக் கால் வைச்சு வியாபாரம் பண்ணாம இருந்தீங்கன்னா மீதியும் கிட்டே வராது! குழந்தைகளால் சந்தோஷம் ஏற்படும். ஆனா செவ்வாய் கொஞ்சம் படறதால, 'உஷ்ணம்' போன்ற பிரச்னை வரலாம். மாணவச் செல்வங்கள் அதுக்காக படிக்காம இருந்துடாதீங்க- முக்கிய எண்ணங்கள் நிறைவேறும். ஆனா அம்மாவுக்கு ஏதேனும் உடம்பு படுத்தக் கூடும். கவனமா பாத்துக்குங்க. கொஞ்சம் தான தருமம் ஏதாவது செஞ்சா நல்லது.

**துலாம் :** *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம், 3-ம் பாதம் வரை)*

உங்க பராக்கிரமம் வெளிப்படப்போற வாரம் இது. அதுக்காக முஷ்டியை மடக்கிட்டுக் கிளம்பிடாதீங்க! அரசு, அரசு விவகாரங்கள் எல்லாம் சாதகமா இருந்து எடுத்த காரியம் யாவும் வெற்றியில் முடியும். மிடுக்கான துறையைச் சேர்ந்தவர்கள்-உம்.ராணுவம், காவல் துறை போன்றவை- வெற்றி நடை போடுவார்கள். (அதுக்காக வீரப்பன் பிடிபட்டுடுவானான்னு கேட்காதீங்க...!) மனை, வீடு,

# நடக்கும்!

தனுசு ராசிக்காரரான
ரமேஷ் கண்ணாவுக்கு
நிறைய
பிரார்த்தனைகள்
நிறைவேறுமாம்!
(மஜா மஜாதான்!)



நிலம், வாகனம் போன்றவற்றால் இத்துறையினருக்கு ஆதாயம் உண்டு. குடும்பத்துப் பக்கம் பார்த்தாலும் குறிப்பா சகோதர உறவுனால நல்லது நடக்கும். கோயிலுக்காகவோ வேறு நன்கொடையாகவோ செலவு செய்யத் தயாராகுங்க. வேலையாட்கள் கொஞ்சம் படுத்துவாங்க!

**விருச்சிகம் :** *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

அரசியல்ல குதிக்கணும்னு ஆசை கீசை வச்சிருந்தீங்கன்னா இதான் நேரம். இப்போ நுழையறவங்களைப் புகழும் வரவேற்பும் எதிர்நோக்குது! 'வேலை இல்லாத லாட்டரி அடிக்கறேன் வயித்தெரிச்சலையா கிளப்பறீங்க!'ன்னு கேட்கறவங்களுக்குச் சொல்றேன்- ஒரு வேலை கிடைக்கறதுக்கான காலம் கனிஞ்சுருச்சு... தொழில்-வியாபாரம் கூடி வரும். நல்லவங்க சகவாசத்தை விடாம பிடிச்சுக்கப் பாருங்க. பண விஷயத்துல பிரச்னை வராது-தொழிலதிபர்கள் முதல் விற்பனைப் பிரதிநிதிகள் வரை எல்லோரும் சௌகரியமாயிருப்பாங்க. கல்யாணமாகாதவங்களுக்கு மணமேடை ஏறுற வாய்ப்பும் உண்டு. அதோட மனத்தெளிவும் வரும்னா வேறென்ன வேண்டும் சொல்லுங்க!

**தனுசு :** *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

பண்ணை, எண்ணெய், விவசாயம், இரும்பு-எஃகு தொடர்பான தொழில்னா உங்களுக்குச் சிவப்புக் கம்பளம் இந்த வாரம். பிரார்த்தனைகள் நிறைவேறும். இந்த ராசியிலயும் வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்பு உண்டு. ஏற்கெனவே வேலைல உள்ளவங்களுக்கு சுபிட்சம் உண்டு. தடுமாறிடாதீங்க- இந்த வாரம் எதிலயும் அவசரம் கூடாது. உடம்பு ஆரோக்கியத்திலே கவனம் செலுத்துங்க. வேலையில விழிப்போட இருங்க-முடிஞ்சா கோயில்-குளத்துக்குப் போய்வாங்க.

**மகரம் :** *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

இந்த ராசிக்காரங்களுக்குக் குடும்ப உறவு சிறப்பு வாரம் இது! புருஷன்-பெண்டாட்டி சண்டைன்னா என்னன்னு கேட்கப் போறீங்க! பெண்களோட ஆசையெல்லாம் நிறைவேறப் போகுதே அப்புறம் சண்டைக்கு எங்கே இடம்! ஆனா, வாகனம், இயந்திரம், மின்சாரம் பக்கம் நெருங்கும்போது உஷாரா இருங்க. வெளிநாடு போற யோசனையில இருந்தா இப்போ அதுக்கான வேலையை ஆரம்பியுங்க. குரு, சுக்ரன், புதன், ராகு எல்லாரும் சாதகமாயிருக்காங்க.

**கும்பம் :** *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

பங்கு மார்க்கெட் பக்கம் தலைவைச்சுப் படுக்காதீங்க. லாட்டரி சீட்டரின்னு பணத்தை விடாதீங்க-நேரம் அதுக்கு சரியில்லே. குழந்தைங்களால செலவு வேற கூடப் போகுது-ஆனா அவங்க முன்னேற்றம் அடைவாங்க. இருந்தாலும் கணவன்/மனைவி பக்கமிருந்து பிரச்னை வரக்கூடிய வாரம் இது. நிதானம், விவேகம், விட்டுக்கொடுத்தல்-இவையே தாரக மந்திரமாய் இருக்கட்டும். பழைய கேஸ் ஏதாச்சும் பெண்டிங்ல இருந்தா ஜெயிக்க வாய்ப்பிருக்கு. ஆனால், குழப்பம் அலைச்சல், உடல் நலக்குறைவுன்னு ஏதாவது வந்து படுத்தக் கூடிய வாரம் இது. பெரியவங்க சொல்றதைக் கேட்டு நடங்க.

**மீனம் :** *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

ஏறத்தாழ கும்ப ராசிக்காரங்க அளவுக்கு உங்களுக்கும் நிறைய அனுகூலம் அமையற வாரம் இது. நண்பர்கள்-உறவினர்களோட தொடர்பு வைச்சுக்கிட்டிருந்தீங்கன்னா பயனிருக்கும். ஆசிரியர்கள், மதபோதனை செய்வோர், சட்ட வல்லுனர்கள் ஆகியோருக்குச் சின்னச் சின்ன பிரச்னை வருகிற வாரம் இது. பயணமே வேண்டாம். முதலீடும் கூடாது. கணவன்/மனைவிகிட்டே இன்னும் கவனம் செலுத்தி நேரம் செலவிடுங்க. நல்லவர்கள்-வல்லவர்கள் நேசம் இருந்தால் இந்த வாரம் நன்றாக ஓடும்.

7

அப்புசாமி முதலில் திகைத்தார். பிறகு இலேசாக வெட்கமுற்றார். வீட்டின் இரு பெண்களும் தூங்காமல் கவலைகளைப் பரஸ்பரம் தெரிவித்துக் கொண்டு இருள் கவிந்த வாசலில் இன்னும் பேசிக் கொண்டிருக்க, தான் மட்டும் உள்ளே, உண்ட மறுவிநாடி உறங்கிவிட்டதன் மீதான குற்றவுணர்வும் மேலோங்க, ''என்ன பண்ணிண்டிருக்கிங்க ரெண்டு பேரும்?'' என்று கேட்டார்.

திடுக்கிட்டு எதிட்ட நீலுப்பாட்டி உடனே உமாவிடம் கீழ்க் குரலில், ''கண்ணைத் துடைச்சுக்கோ'' என்றாள். பிறகு மீண்டும் அப்புசாமியைப் பார்த்தவள், ''தூக்கம் வரலை. பேசிண்டிருக்கோம்'' என்று சொன்னாள்.

''ஏழு மணியானா குறட்டை விடறவனுக்குத் தூக்கம் வரலையா?'' என்று அப்புசாமி கேட்டார்.

''என்ன பண்ணித் தொலைக்கறது? வீட்டு ஆம்பளை சரியா இருந்தான்னா பொம்மனாட்டி ஏன் தூக்கம் வராம வாசல்ல உட்கார்ந்து கண்ணீர் வடிக்கணும்?'' என்றாள், மிகுந்த கவனமுடன்.

சுருக்கென்றொரு சீண்டல். உமாவின் அழுகையை அவர் கவனித்திருந்தாலும், காரணம் நீதான் என்று குற்றம் சாட்டுவது போன்றதொரு முன்னெச்சரிக்கை நடவடிக்கை. உடனே அப்புசாமி முணுமுணுத்துக் கொண்டோ, அதுவும் இல்லாமலோ உள்ளே சென்று விடுவார். பிறகு பிரச்னை ஏதுமற்றுப் பேச்சைத் தொடரலாமென்கிற கணக்கு. பாட்டி, நீ எத்தனை திறமைசாலி! உன் சாமர்த்தியத்துக்கு முன் வேறு யார் என்ன சாகசம் புரிந்துவிட முடியும் என்று உமா பிரமித்தாள்.




# அலை உறங்கும் கடல்

எதிர்பார்த்தபடியே மேலும் சில விநாடிகள் மௌனமாக நின்றுவிட்டு "எக்கேடு கெடுங்கோ'' என்று புலம்பியவண்ணம் அப்புசாமி உள்ளே போனார்.

அவர் தலை மறையும் வரை பார்த்துக் கொண்டே இருந்த நீலுப்பாட்டி, சட்டென்று உமாவிடம் திரும்பி, "அசடே! அழுவாளோ யாராவது?

துக்கம்னு வந்தா துடைச்செறியறவதான் பொம்மனாட்டிகளிலேயே ஸ்டார்! சபதம் போட்டு ஜெயிக்காம திரௌபதி அழுதுண்டே இருந்திருந்தான்னா, வந்திருக்குமா



பா. ராகவன்



''டேய் சுரேஷ்! உனக்காக நான் கஷ்டப்பட்டு செஞ்ச பிஸ்கட்டை நம்ப பூனை தின்னுடுச்சுடா!''

''வருத்தப்படாத அக்கா! அம்மாவை வேற பூனை வாங்கித் தரச்சொல்லலாம்!''

– கிருஷ்



பாரதம்? அப்படியென்ன உனக்குக் கப்பல் முழுகிப் போயிடுத்து? சொல்லு, யாரவன்?" என்று விடாமல் கேட்டாள்.

"அருள்தாஸ்" என்று உமா சொன்னாள்.

"ஆரு?"

"அற்புதமேரின்னு என் தையல் வகுப்பு சிநேகிதி வருவாளே..."

"ஆமா?"

"அவண்ணன்."

"கிருஸ்துவனா?"

உமா பேசாதிருந்தாள்.

"என்ன பண்றான்?" என்று பாட்டி கேட்டாள்.

மீன் பிடிக்கிறான் என்று சொல்ல வந்தவள், சட்டென்று மாற்றி, "சொந்தமா ஒரு போட் வெச்சிருக்கான்" என்றாள்.

"ராமேஸ்வரத்துல பிராமணனைத் தவிர போட் வெச்சுக்காதவன் யாரு? அதைவிடு. நல்லவனா?"

அவள் மனத்துக்குள் ஒரு குஷிப் பந்து குதிக்க ஆரம்பித்தது. சம்மதிக்காவிட்டாலும் பரவாயில்லை. எனக்குச் செவி கொடுப்பதன் மூலம் என் உணர்வுகளை எத்தனை கௌரவிக்கிறாய் பாட்டி! இது உனக்கு வலிக்கும் என்பதை நான் அறிவேன். பகவானே என்று உன் மனம் பதறும் தவிப்பு நான் உணரக் கூடியதாகவே இருக்கிறது. என்னைக் கொல்லும் உத்வேகம் உனக்கு உண்டாகலாம் என்பதையும் அறிவேன். ஆனாலும் உனக்கு விருப்பமில்லாததையும் என்னைப் பேச அனுமதிப்பதன் மூலம் என் பிரியத்துக்குரிய சிநேகிதி ஆகிறாய்.

உப்புக்காற்று பட்டுப் பட்டு தேகமும் மனமும் உலர்ந்ததொரு சமூகத்தில் வாழுகின்ற உனக்கு மட்டும் எப்படி வாய்த்தது ஈர மனசும் இணக்கம் பிசகாத அந்நியோன்யமும்?

பாட்டி, நான் உன்னைக் காதலிக்கிறேன். என் மனத்தின் அடியாழத்திலிருந்து பீறிடும் நன்றி உணர்ச்சி, செல்கள் கடந்து உன்னை வந்தடைவதை உன்னால் உணர முடிகிறதா?

உமா, அவளை மேலும் நெருங்கி, கரங்களை இறுகப் பற்றிக் கொண்டாள்.

"கேட்டேனே, அவன் நல்லவனா?"

"ரொம்ப நல்லவன் பாட்டி."

"எதை வெச்சு சொல்றே?"

என்ன சொல்வதென்று விளங்காமல் அரைக்கணம் தவித்தவள், "என் மேல ரொம்பப் பிரியமா இருக்கான் பாட்டி" என்று சொன்னாள்.

''அதைவிடு. காதல் பண்ணிண்டிருக்கறப்போ, கழுதை கூடப் பிரியமாத்தான் இருக்கும். நல்லவன்னா, நான் கேட்கறது வேற."

"நல்லவன் தான் பாட்டி. ஆனா, எப்படி சொல்றதுன்னு தெரியலை. சிலதெல்லாம் உணர முடியற அளவுக்கு விளக்க முடியறதில்லியே?"

பாட்டி அவளைக் குறும்பாகப் பார்த்துச் சிரித்தாள்.

''என்ன பேச்சுப் பேசறே? விரலை எடுத்து வாய்க்குள்ள வெச்சா, கடிக்கத் தெரியாத பப்பான்னு நினைச்சுண்டிருக்கான் உங்கப்பன்."

இப்போது உமாவுக்கு வெட்கமாக இருந்தது. காதலை நினைத்துக் கொண்டிருப்பது போலவே, பகிர்ந்து கொள்ளவும் நேர்ந்தால், அதுதான் எத்தனை சுகமாக இருக்கிறது? அவ்வப்போது அறிவைத் தொலைத்துவிட்டு உணர்ச்சிக்குக் கைகட்டிச் சேவகம் புரிவதில் என்ன ஒரு ஆனந்தம் உள்ளது!

இந்த க்ஷணம் பிரத்யட்சமான தன் கவலைகள் யாவும் உதிர்ந்து ஒரு பட்டுப்பூச்சி போல மனம் லேசாகிக் கொண்டிருப்பதை விழிப்புடன் உணர்ந்தாள் உமா. பாட்டியின் சகாயத்தை இன்னும் சில காலம் முன்பே கூடப் பெற்றிருக்கலாம், இது விஷயத்தில். எதையும் தாமதமாகச் செய்வதே அல்லவா இத்தலைமுறையின் வழக்கமாகிவிட்டது?

"கடைசில உங்கப்பனுக்கு ஒரு மீன்கார மாப்பிள்ளை பார்த்திருக்கே, ம்?" என்று நீலுப்பாட்டி கேட்டாள். உமா இதற்குப் பதில் சொல்லாமல் தலை குனிந்திருந்தாள்.

ஒரு சில நிமிடங்கள் சம்பாஷணை ஏது

மற்று விண்மீன்களையே பார்த்துக் கொண்டிருந்த நீலுப்பாட்டி, சட்டென்று "ஒண்ணு சொல்றேன். நீ பண்ணினது தப்பு, சரின்னு பேச நான் தயாரில்லை. சந்தோஷமோ, துக்கமோ, படப் போறவ நீ தான். ஆனா, புத்தி கெட்டுப் போயிட்டமேன்னு பின்னால வருத்தப்படாம இப்பவே யோசிச்சுடு. உன்னோட காதல் இல்லைன்னு நிர்தாட்சண்யமா மனசுலேருந்து இறக்கி, எதிரே வெச்சுண்டு, உன்னையே உங்கப்பனா நினைச்சி நாக்கைப் பிடுங்கிக்கற மாதிரி கேள்வி கேளு. நன்னா, திருப்தியா கேளு. எல்லா கேள்விக்கும் உன்னாலயே சரியான பதில் சொல்லவும் முடிஞ்சுதுன்னா, அப்புறம் கவலைப் படறதை நிறுத்திட்டு, சட்டுனு கல்யாணம் பண்ணிண்டுரு. உன் வழிக்கு அவனை மாத்தறியோ, அவன் வழில நீ போறியோ அது பிரச்னையே இல்லை. எதுக்குச் சொல்றேன்னா, எதையும் செய்யறதுக்கு முன்னாடி நன்னா யோசிச்சுடணும். புரியறதா?"

"என் கவலை இப்ப அது இல்லை பாட்டி" என்று உமா சொன்னாள்.

"பின்ன?"

எப்படிச் சொல்வதென்று அவளுக்கு விளங்கவில்லை.

பாட்டி மனத்தின் கொள்ளளவு பற்றிய சந்தேகம் இனி இல்லையெனினும் கடலுக்குப் போனவன் காணாமல் போய்விட்டான் என்பதையும் இலங்கைக் கடற்படை பிடித்திருக்கக் கூடியதான சாத்தியங்களையும் சொன்னால் பதறி விடமாட்டாள் என்று என்ன நிச்சயம்? ஒரே இரவில் அடுத்தடுத்து எத்தனை அதிர்ச்சிகளை அவளது தளர்ந்த வயது தாங்கிக் கொள்ளக் கூடும்?

"சொல்றதுன்னு ஆரம்பிச்சுட்டே. இன்னும் என்ன தயக்கம் வேண்டியிருக்கு?" என்று நீலுப்பாட்டி கேட்டாள்.

"மூணு நாளா அவனைக் காணோம் பாட்டி" என்றாள். மீண்டும் விழிகளில் நீர் கோத்தது.

"என்னது?" என்றாள் நீலுப்பாட்டி.

"சனிக்கிழமை கடலுக்குப் போனான். ஞாயிறு கார்த்தால வந்திருக்கணும். சில போட் லேட்டா வர்ற வழக்கமுண்டாம். அப்படியும் அன்னிக்கு சாயங்காலம் வரைக்கும் இவன் வராததால ஏதோ பிரச்னை ஆகியிருக்கணும்னு கம்ப்ளைண்டு குடுத்திருக்கா."

"பகவானே... நீ போனியா நேவி ஆபீசுக்கு?"

"இல்லை பாட்டி."

"அந்த மட்டும் சமர்த்து போ. அவா விசாரணை, அது இதுன்னு இங்க வந்து நின்னாளோ, போச்சு! உங்கப்பன் அப்புறம் அக்னி தீர்த்தத்துப் பக்கம் கால் வெச்சு முடியாது."

உமா பேசாதிருந்தாள். பாட்டியால் எப்படிச் சட்டென்று தனக்குரிய கவலையை மட்டும் தேர்ந்தெடுத்து அனுபவிக்க முடிகிறது? யதார்த்தத்துக்குப் பொருந்துவதான கவலை அது மட்டுந்தானா?

"பிடிக்கறதோ, பிடிக்கலையோ- நாம தின்னற சோறு உங்கப்பன் வேர்வைல விளையறது தான். பிரமாதமா கௌரவம்னு இல்லாட்டாலும் நாலு வீதில அவன் தலை நிமிர்ந்துதான் நடந்துண்டிருக்கான். அவன் முக்காடு போட்டுண்டுடக் கூடாதில்லையா, நம்மால? அதுக்காகச் சொல்றேன்" என்றாள் பாட்டி.

இப்போதும் உமா பேசாதிருந்தாள்.

"உன் காதலை நான் விமர்சனம் பண்ணத் தயாரில்லை. ஆனா, அதுக்கு எந்தளவு உன் மனசுல இடம் குடுத்திருக்கியோ, அதே அளவு இந்த வீட்டு மரியாதைக்கும் குடுக்கணும்னு கேட்டுக்கறேன். புரியறதா?"

உமா அழுது கொண்டிருந்தாள். "நான் ஒண்ணும் மரியாதை தெரியாதவ இல்லே பாட்டி."

"அசடே, நான் அதைச் சொல்லலே. குண்டு தைரியத்தோட ஒரு மீனவனைக் காதலிக்கறேங்கறே. அதிர்ச்சிதான். ஆனா, நான் சமாளிச்சுண்ட' மாதிரி உங்கப்பன் சமாளிச்சுப்பானா, சொல்லு? உடனே அவனுக்கு உங்கக்கா ஞாபகம் வராது? உன்னைப் போட்டு மொத்து மொத்துன்னு மொத்த மாட்டான்?"

அதிர்ந்து எழுந்தாள் உமா. இருள் கவிந்த சாலையில் அமைதி ஒரு ராட்சசன் போலத்

''இன்டர்வியூவில் இப்படியொரு கேள்வி கேட்பாங்கன்னு நான் எதிர்பார்க்கவே இல்லை! திணறிட்டேன்!''

''அப்படி என்ன கேட்டுட்டாங்க?''

''இப்போது பி.ஜே.பிக்கு ஆதரவு கொடுக்கும் கட்சிகள் எத்தனை? அவற்றின் பெயர்கள் என்னன்னு கேட்டுட்டாங்க!''

– அ. குமார்



திரண்டெழுந்து நிரம்பியிருந்தது. ஒரு சலனமில்லை. இரவுப் பூச்சிகளுங்கூட உறங்கிவிட்டனவா என்ன? சமயங்களில் அமைதி கூடவா விகாரமான உருப்பெற்று விடக் கூடும்?

**ஏ**த்தனை வருடங்கள்! மறந்தே போனோமா அகிலாவை? கடிதத் தொடர்பும் விட்டுப் போய், திசைகள் நீண்டு பெருகிய இடைவெளியில் எப்போதாவது நினைவில் இடறும் முகம் தவிர வேறென்ன இன்னும் உள்ளது மிச்சம்?

அம்மா இறந்தபோது கூட அவளுக்குத் தகவல் தரக் கூடாதென்று தடுத்து விட்டார் அப்புசாமி. எத்தனை வெறி, அகங்காரம்! அவள் குறித்தப் பேச்செழும்போதெல்லாம் அடி மனத்து வெறுப்புச் சாறு திரண்டு அவர் முகத்தில் வந்து விகாரமாகப் படர்வதைக் கண்டு பயந்து, வீட்டில் அவள் பேச்சே எடுப்பதில்லை, உமாவும் நீலுப் பாட்டியும்.

உறவுகளின் மிகமெல்லிய நூலிழை அறுந்து போகும் தருணங்கள் குறித்த அச்சம் உண்டானது உமாவுக்கு. இத்தனைக்கும் அகிலாவின் காதலில் சாதியெனும் பெருஞ் சுவர்த் தடையேதுமில்லை.

இதே அக்னிதீர்த்தக் கரையில் உமாவுக்கு முன்னதாக அவள்தான் அப்புசாமிக்குக் காப்பி கொண்டு போய்க் கொண்டிருந்தாள். அவருக்குப் பத்தடி இடைவெளியில் அதே பித்ருகாரியம் செய்து வைக்கிற சாஸ்திரிகளாகத்தான் ராமநாதனும் இருந்தான். சமுத்திரத்தின் ஓசையைப் புறந்தள்ளிக் கெக்கலி செய்தன இருவரின் நகையொலிகள்.

அகிலா தன் காதலைப் பகிர்ந்து கொள்ளும் அளவுக்கோ, குறைந்தபட்சம் தகவலாகச் சொல்லுமளவுக்கோ கூட அப்போது உமா வயதடைந்திருக்கவில்லை. சகோதர நெருக்கம், நட்பாக வேறு முகம் கொள்ளத் தொடங்கும் காலம் உருவாவதற்கு முன்னாலேயே எல்லாம் முடிந்து விட்டது.

ஓர் அதிகாலை அகிலா பட்டுப் புடைவையுடன் சொல்லாமல் வெளியேறிப் போனாள். கோயில் வாசலிலேயே அவள் திருமணம்-நின்றபடிக்கே நடந்து முடிந்ததாகப் பார்த்தவர்கள் சொன்னார்கள்.

பிறகு அவள் மதுரை பஸ்ஸில் ராமநாதனுடன் ஏறியதை ஸ்ரீதர் சாஸ்திரிகள் பார்த்து வந்து சொன்னார். மதுரையிலிருந்து நாலாம் நாள் கடிதம் வந்தபோது அப்புசாமிக்கு மாரடைப்பு ஏற்பட்டது.

பிறகு அகிலா சென்னையிலிருந்து கடிதம் எழுத ஆரம்பித்தாள். அதன் பின் செகந்திராபாதிலிருந்து.

திரும்பி வந்தால் காலை உடைப்பேன் என்று அப்புசாமி பதில் கடிதம் எழுதிய பிறகு அவளுக்கு அந்த உத்தேசமே இல்லாமல் போய்விட்டது போலும்.

பிறகு குழந்தை பிறந்திருப்பதாக எழுதியிருந்தாள். தான் கம்ப்யூட்டர் வகுப்புக்குச் செல்வதாகவும்.

அப்புசாமி எவ்வித சலனமும் இல்லாதவரானார்.

ராமநாதனை அவர் அத்தனை வெறுக்க வேண்டிய அவசியம் என்னவென்று நெடு நாட்கள் வரை உமாவுக்குப் புரியவில்லை.

விவரம் தெரிய வந்த போது அவளுக்குத் தன் தந்தையின் மேல் அபரிமிதமான பரிதாப உணர்வே ஏற்பட்டது.

(தொடரும்)

### 'குளோபஸ்'இல் சிண்டரெல்லா போட்டி!

**கு**ளோபஸ் என்ற பிரம்மாண்டமான ஷொப்பிங் சென்டரில் ஆண்டுவிழா வித்தியாசமாகக் கொண்டாடப்பட்டது. குழந்தை இலக்கியத்தில் 'சிண்டரெல்லா' கதை படித்திருப்பீர்களே? அவளுடைய செருப்பை யாருடையது என்று கண்டு பிடிக்க இளவரசன் அதைப் பொது இடத்தில் வைத்து அனைவரையும் அணிந்து பார்க்கச் சொல்லுகிறானில்லையா? அதே மாதிரி குளோபஸிலும் சிண்டரெல்லாக்களுக்கு ஒரு போட்டி. பளபளவென்று கண்ணாடி போன்ற ஒற்றைச் செருப்பு வைக்கப்பட்டிருந்தது. குழந்தைகளும் இளசுகளும் ஏன் அம்மாமிகளும் கூட அதற்குள் காலை நுழைக்க முயற்சி செய்தனர்! பலர் முயன்றாலும் ஒரு சிலருக்குத்தான் பொருந்தியது. அதிருஷ்டசாலிகளுக்குச் சிறப்புப் பரிசு கொடுத்து ஜமாய்த்துவிட்டார்கள்!



- பாரதி

# ஜெயலலிதாவும் நடராஜர் சிலை வழக்கும்!

பாத்தூர் நடராஜர் சிலை வழக்கு விஷயமாக நான் லண்டன் சென்றிருந்தபோது சிலைக் கடத்தல் தடுப்புப் பிரிவின் உயர் அதிகாரியான ராஜசேகரன் நாயரும் லண்டன் வந்திருந்தார்.

லண்டன் கோர்ட் நம்ம ஊர் கோர்ட் போலில்லாமல் சுத்தமாக இருக்கும். வழக்குக்கு சம்பந்தப் படாதவர்கள் கோர்ட்டில் இருக்கக் கூடாது.

நானும் ராஜசேகரன் நாயரும் எங்கள் வசம் இருந்த எல்லா சிற்பங்களையும் சாக்கில் சுருட்டி ஹை கமிஷனர் அலெக்ஸாண்டரின் ஜீப்பில் ஏற்றி, கோர்ட்டுக்கு எடுத்துச் சென்று நீதிபதிக்கு எதிரில் கொலு போன்று வைப்போம். நடராஜர் சிலைக்கு (தற்காலிக) உரிமையாளர்களாக இருந்த கனடா நாட்டு எண்ணெய் நிறுவனமோ அந்தச் சிலையை ஒரு பெரிய கண்ணாடிப் பேழையில் வைத்து ஏஸி வேனில் தடபுடலாகக் கொண்டு வருவார்கள்.



சிலைக்கு அருகே நாங்கள் போனாலே எரித்து விடுவது போல் எங்களைப் பார்ப்பார்கள்!

கோர்ட் ப்ரொஸீடிங்ஸ் ஆரம்பித்த உடன் நீதிபதி கென்னடி என்னைப் பார்த்து "இரண்டு பெண் சிலைகளில் நடராஜரின் மனைவியான சிவகாமியின் சிலை என்று ஒரு குறிப்பிட்டச் சிலையை எப்படிச் சொல்கிறீர்கள்?" என்று மடக்கினார். ஒரு நிமிடம் ஆடிப் போய்விட்டேன். ஆனால் உடனே சுதாரித்துக் கொண்டு "மைலார்டு" என்று துவங்கினேன். "நடராஜர் ஒரு ஆடும் கடவுள்; அவருடைய மனைவிக்கும் இயல்பாகவே நடமாடும் பழக்கம் இருக்கும்; நீங்கள் நன்றாக கவனித்தீர்கள் என்றால் நடராஜருக்கும் சிவகாமிக்கும் பின்புறம் உள்ள தலைமுடி குஞ்சம் ஆங்கில எழுத்தான 'V' வடிவத்தில் பிரிந்து கிடக்கிறது; ஆடும்போது பின்புற முடி அப்படி பிரிந்து நிற்பதற்கான வாய்ப்பு உண்டு; ஆனால் அதேசமயத்தில் மற்றொரு பெண் சிலையைப் பார்த்தால் அதன் குஞ்சம் வட்டவடிவமாக செதுக்கப்பட்டிருக்கிறது; அது தவிர நடராஜர் மற்றும் சிவகாமி சிலைக்கு வைக்கப்பட்டிருக்கும் பீடம் ஒரு மாதிரியாகவும் மற்றொரு பெண் சிலையின் பீடம் வேறொரு மாதிரியாகவும் இருக்கிறது; இந்தச் சிலைகளை வடிக்கும்போது, சிற்பி மிகவும் தெளிவாக ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும்



தடய அறிவியல் நிபுணர் டாக்டர் பி. சந்திரசேகரன்





"அப்பா! கழுதைங்க கல்யாணம் பண்ணிக்குமாப்பா?"
''அதுங்க மட்டும்தான்டா பண்ணிக்குங்க!"

- பிரஹலாத்

வைத்திருக்கிறான்" என்று விளக்கினேன்.

என்னுடைய இந்த விளக்கம் நீதிபதி கென்னடிக்கு மிகவும் பிடித்துவிட்டது. அதுவும் நடராஜரையும் சிவகாமியையும் ஆடும் ஜோடி என்று வர்ணித்ததை மிகவும் ரசித்தார். அடுத்த சில நாட்களில் தீர்ப்பு வந்தது.

பாத்தூர் நடராஜர் கடத்தி வரப்பட்டவர்தான் என்றும் உடனடியாக எந்தக் கோயிலுக்கு அது சொந்தமோ அங்கு எடுத்துச் செல்லப்பட வேண்டுமென்றும் உத்தரவிட்டார் நீதிபதி. 1976 வாக்கில் பாத்தூரை விட்டு கிளம்பிய நடராஜர் 1992-ல் தமிழ்நாட்டிற்கு வந்து சேர்ந்தார்.

சிலை மீண்டும் தமிழகத்திற்கு வந்தபோது முதல்வராக இருந்தவர் ஜெயலலிதா. அவருடன் எனக்கு அவ்வளவாகப் பழக்கம் கிடையாது. நடராஜரை மீட்டு வந்தவர்களுக்கு முதல்வர் ஒரு தேநீர் விருந்து கொடுத்துப் பாராட்டினார். அப்போது எல்லோருக்கும் சிறு நடராஜர் சிலை ஒன்றைப் பரிசாக வழங்கினார். இதில் வேடிக்கை (வேதனை) என்னவென்றால் சம்பந்தப்பட்டவர்களைத் தவிர வேறு பலருக்கும் நடராஜர் சிலையைப் பரிசளித்தார் முதல்வர். அப்போதிருந்த அரசியல் சூழலில் எல்லோருக்கும் 'நடராஜர்' தயவு தேவை என்று குறிப்பாக உணர்த்துகிறாரே என்று நான் நண்பர்களிடம் கிண்டலடித்தது நன்றாக நினைவு இருக்கிறது.

'இப்படி நமது தொன்மையான கலைச் செல்வங்களைக் கடத்திச்சென்று விட்டால் அவற்றை மீட்பதற்கு உதவும் வகையில் தமிழகத்தில் உள்ள அனைத்து சிலைகளையும் அவற்றின் தனித்தன்மையைக் குறிப்பிட்டு புகைப்படங்களுடன் இன்டெக்ஸிங் செய்யலாம்' என்று யோசனை தெரிவித்து ஒரு ஆய்வறிக்கையும், நமது சிலைகளின் சிற்ப நுணுக்கங்களைத் தெளிவாக விளக்கி இன்னொரு ஆய்வறிக்கையும் தயாரித்து வைத்திருந்தேன்.

இவற்றை முதல்வர் ஜெயலலிதாவிடம் அவர் எனக்கு நடராஜர் சிலையைப் பரிசாகத் தந்த கையோடு கொடுத்தேன். "என்ன முதல்வருக்கே பரிசு கொடுக்கிறீர்களா?" என்று சிரித்தவாறு வாங்கிக் கொண்டார்.

அதற்குச் சில நாட்களிலேயே முதல்வரைச் சந்திக்கும் மற்றொரு வாய்ப்பு கிடைத்தது. எனது துறைக்குத் தேவையான பதவிகளை உருவாக்குவதற்கும் அதற்கான நிதி ஒதுக்கீடைப் பற்றி விவாதிப்பதற்கும் கோட்டையில் முதல்வர் தலைமையில் நிதிக்குழு ஒன்று கூடியது. இக் கூட்டத்தில் நான் அதுவரை தடய அறிவியல் துறையில் கண்டுபிடித்த விஷயங்களை ஒன்றன் பின் ஒன்றாக விளக்கினேன். முதல்வர் எல்லாவற்றையும் மிக ஆர்வத்துடன் கேட்டார்.

எனது துறைக்குத் தேவையான பதவிகள் என்று சொல்லும்போது ஒரு சுவாரஸ்யமான வழக்கைப் பற்றிச் சொல்ல வேண்டும்.

திருநெல்வேலியில் உள்ள சேரன்மகாதேவியில் ஒரு கழைக்கூத்தாடி தம்பதிக்குப் பிறந்த குழந்தை காணாமல் போய்விட்டது. அதேசமயம் சுற்றுவட்டாரத்தில் இருந்த காண்ட்ராக்டர் தொழில் செய்த மற்றொருவரின் குழந்தையும் காணாமல் போய்விட்டது. போலீஸ் வலை போட்டுத் தேடியதில் சில வருடங்கள் கழித்து இரண்டு ஜோடிகளில் ஒரு ஜோடியின் குழந்தை கண்டுபிடிக்கப்பட்டது. பணச் செல்வாக்கு காரணமாகவோ அல்லது ஏரியா செல்

வாக்கு காரணமாகவோ குழந்தை காண்ட்ராக்டர் தம்பதியிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் கழைக்கூத்தாடி ஜோடியோ குழந்தை தங்களுடையது என்று அடித்துச் சொன்னார்கள்.

இப்போது போலீஸுக்குச் சங்கடமான நிலை. வழக்கு கோர்ட்டுக்கு வந்தது. நீதிபதி அருணாசலம் என்னை அழைத்து "சிக்கலை விஞ்ஞான ரீதியில் எப்படித் தீர்ப்பது?'' என்று விசாரித்தார்.

அப்போது மரபணு(DNA) பரிசோதனை ஆராய்ச்சி முற்றுப் பெறாத கால கட்டம். உலகமெங்கும் இது போன்ற கேஸ்களில் ரத்தத்தைச் சோதித்து கண்டுபிடிக்கும் H.L.A சோதனைதான் நடைமுறையில் இருந்தது. கழைக்கூத்தாடி வழக்கிலும் அந்தச் சோதனையை உபயோகப்படுத்தி, காண்டராக்டர் தம்பதிகளுடைய ரத்தத்தையும் குழந்தையின் ரத்தத்தையும் சோதித்து அவர்களுக்கும் குழந்தைக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்று சொன்னேன்.

இந்தச் சமயத்தில் ஹைதராபாத்தில் மரபணு சம்பந்தமான சோதனை தீவிரமாக நடந்துகொண்டிருந்தது. இந்த வழக்கைப் பற்றிக் கேள்விப்பட்ட விஞ்ஞானிகள் சம்பந்தப்பட்ட ஜோடிகள் மற்றும் குழந்தையின் உடல்களிலிருந்து சாம்பிள்கள் எடுத்து அனுப்பச் சொன்னார்கள். கோர்ட் சம்மதத்துடன் நானும் அனுப்பினேன். ஆனால் ஒரு மாதம் வரை அவர்களிடமிருந்து ஒரு பதிலும் இல்லை.

குழந்தையோ அரசாங்க பாதுகாப்பில் இருந்ததால் நீதிபதிக்கு விரைந்து தீர்ப்பு கொடுக்க வேண்டிய நிலை. ஆகையால் என் சோதனையின் முடிவை ஆதாரமாக வைத்து குழந்தை கழைக்கூத்தாடி ஜோடிக்குச் சொந்தமானதே என்று தீர்ப்பளித்து விட்டார். குழந்தையும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டது.

தாமதமாக வந்த விஞ்ஞானிகளின் மரபணு சோதனை முடிவும் என்னுடைய முடிவை ஊர்ஜிதப்படுத்துவதாகத்தான் இருந்தது. ஆனால் அவர்களது முடிவிற்குக் காத்திராமல் என் சோதனை அடிப்படையில் தீர்ப்பு வழங்கப்பட்டது குறித்து அவர்களுக்கு வருத்தம். உடனே பத்திரிகைகளில் H.L.A சோதனை குறித்தும், நான் இரண்டு ஜோடிகளில் ஒரு ஜோடியை மட்டும் சோதனைக்கு எடுத்துக்கொண்டது குறித்தும் விமர்சித்து காரசாரமான கட்டுரைகள் எழுதினார்கள்.

இது போன்ற வழக்குகள் தடய அறிவியல் துறைக்கு வருகின்ற காரணத்தால் அவற்றை ஆராய்வதெற்கென்றே சில அதிகாரிகள் பதவி ஏற்படுத்த வேண்டிய அவசியத்தைத்தான் முதல்வரிடம் சொன்னேன், கோட்டையில் நடந்த மீட்டிங்கில்.

H.L.A சோதனை பற்றி விளக்கும்போது முதல்வர் ஜெயலலிதா ஒரு கேள்வி கேட்டார். "ஒரு கணவனுக்கு 'ஏ' குரூப் ரத்தம், மனைவிக்கும் 'ஏ' குரூப் என்று வைத்துக் கொள்ளுங்கள்; உங்கள் H.L.A சோதனைப்படி குழந்தைக்கு 'ஏ' குரூப்போ அல்லது 'ஓ' குரூப்போ இருக்க வேண்டும்; மனைவி அடுத்த வீட்டுக்காரனுடன் தொடர்பு வைத்திருப்பதாக கணவர் சந்தேகப்படும் பட்சத்திலும் அடுத்த வீட்டுக்காரனுக்கு 'ஏ' குரூப் ரத்தம் இருக்கும் பட்சத்திலும் குழந்தைக்கு அப்பா யார் என்று எப்படி நிர்ணயிப்பீர்கள்?''

நல்ல கேள்வி என்று மனத்திற்குள் பாராட்டிவிட்டு விளக்கத் தொடங்கினேன்.

(தொடரும்)






**"பைனான்ஸ் கம்பெனி வைச்சிருந்தீங்களே? இப்ப ஏன் தொடர்ந்து நடத்தாம விட்டுட்டீங்க...?"**

**"வயசு ஆகிப்போச்சு. முன்ன மாதிரி ஓட முடியலை சார்!"**

**— கமலா பொன். கதிரேசன்**


நீச்சல் குளத்தில் கூவத்துத்
தண்ணியை ரகசியமா
கலந்திடலாமுங்க!
புகுந்து புகுந்து புறப்படுராங்களே
நம்ம ஆட்டோ ஓட்டுனர்ங்க
அவங்களைத் தடை ஓட்டத்துக்கு
அனுப்பிரலாமுங்களா?
பலமுறை சுவர் ஏறி தப்பி
ஓடியிருக்கிற கைதிகளைப்
பெயிலில் அனுப்பலாமுங்க!
நம்மூர் நியூஸ்பேப்பர்கார
வாண்டுங்களைக் கூடைப்பந்துக்கு
அனுப்புனா என்னங்க?

# ஒலிம்பிக் போட்டிக்கு யோசனைகள்!



ஒட்டப்பந்தயத்தில கடைசியில ஒரு தண்ணி லாரியை நிக்க வச்சோம்னாங்க, நம்மூர் பொம்பளைங்கத்தான் ஜெயிப்பாங்க.

டிராக்குகளை நமக்குப் பழக்கமான சாலைங்க கணக்கா டிசைன் செய்துடவேண்டியதுதாங்க!



— கிச்சா



**வா**ஸ்து சாஸ்திர விதிகள் கட்டட அமைப்பைப் பற்றியவை. குறைகள் இருந்தால், கட்டடத்தின் ஒரு பகுதியை இடித்தோ அல்லது மாற்றுக் கட்டடம் கட்டியோ சரி செய்ய வேண்டும் என்கிறது வாஸ்து சாஸ்திரம்.

ஆனால் வாடகைக் கட்டடங்கள் மற்றும் ஃபிளாட்டுகளில் இருப்பவர்கள் என்ன செய்வது?

உட்புற அலங்கார முறைகளை மாற்றியோ, வேறு புது அமைப்புகளைச் சேர்த்தோ குறைகளைச் சரி செய்துவிடலாம் என்கிறது பெங்குயி.

பெங்குயி என்ன... வாஸ்து என்ன? குழம்ப வேண்டாம்.

கட்டிடக் கலை பற்றிய அறிவியல் பூர்வமான இந்திய சாஸ்திரம் தான் வாஸ்து. சீனாவில் இதன் பெயர் பெங்குயி.

இரண்டும் அடிப்படையில் ஒன்றுதான் என்றாலும் ஒன்றிரண்டு வித்தியாசங்கள் இல்லாமல் இல்லை.

வாஸ்து சாஸ்திரப்படி நமது வீட்டில் ஒரு குறை இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். பெங்குயி உடனே அதற்கு ஒரு பரிகாரம் கூறுகிறது.

பெங்குயி கூறும் அடிப்படைப் பரிகாரங்கள் இதோ.

**மீன் வளர்க்கலாம்!**

மீன் வளர்ப்பது நம் மன அழுத்தத்தை குறைக்கக் கூடிய ஒன்று. ஆற்றோரத்திலோ கடற்கரையிலோ வீடு அமைந்துவிட்டால் பிரச்னையில்லை. ஆனால் அப்படி அமையாதபோது, அதுவும் வீட்டில் ஒரு அமங்கலமான இடம் இருக்கிறது என்று வாஸ்து சொல்லும்போது, அந்த இடத்தில் மீன் தொட்டிகளை (சின்னதாக இருந்தாலே போதும்) வைத்துவிடலாம்! உடனே அந்த இடத்தில் இருக்கும் தீய தாக்கம் வெளியேறிவிடும்.

**நிறங்களைக் கொண்டு பொய்த்தோற்றம் ஏற்படுத்தலாம்.**

நாம் கண்ணால் பார்ப்பதே நம் மனத்தில் பெரும்பாலும் ஆழமாகப் பதிகிறது. ஆகவே ஒரு நல்ல பொருத்தமான நிறத்தை தீட்டுவதன் மூலம் சிறியது ஒன்றைப் பெரிதாக நம் கண்களுக்கும் மனத்திற்கும் தோன்றுமாறு செய்துவிடலாம்.

உதாரணத்திற்கு வரவேற்பு அறையின் வாசல் மிகவும் பெரியதாக இருக்கிறது என்று வாஸ்து சொல்வதாக வைத்துக் கொள்ளுங்கள். வரவேற்பறைக்கு அழுத்தமான நிறத்தைத் தீட்டிவிட்டால் போதும். வாசலை சிறியதாக்கிய பலன் கிடைத்துவிடும். அதுவே கதவு மிகவும் சிறியதாக இருக்கிறது என்றால் பிரகாசமான நிறத்தை அடித்துவிட்டால் பிரச்னை முடிந்தது.

**கண்ணாடி பொருத்தலாம்!**

வீட்டில், தேவையற்ற அமைப்பு ஒன்று இருப்பதாக வாஸ்து சொல்லும்போது அந்த அமைப்பின் மேல் கண்ணாடியைப் பதித்து அந்த அமைப்பு நமது பார்வையில்

# வாடகை வீடுகளும் வாஸ்துவும்!



படாதவாறு செய்ய வேண்டும். அறையில் உள்ள நல்ல பகுதிகளைப் பிரதிபலிக்கச் செய்வதற்குக் கூட சுவர்களில் முழு நீளக் கண்ணாடியைப் பொருத்தலாம்.

**செயற்கை அருவி ஏற்படுத்தலாம்**

நீர், தீய சக்திகளை தன்னகத்தே இழுத்துக் கொண்டு இடங்களைச் சுறுசுறுப்பாக்குகிறது.

வாஸ்துப்படி வீட்டிற்குப் பணம் வரக் கூடிய சந்தர்ப்பங்களை வீட்டின் அமைப்பு தடுக்கிறது என்றால் அங்கு ஒரு செயற்கை அருவி வைத்துவிட்டால் போதுமானது.

**வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்ளலாம்!**

வீடு எப்படி இருக்கிறதோ அப்படித் தான் நம் வாழ்வும் இருக்கும். வீடு சுத்தமாக இல்லாவிட்டால் மனதின் எண்ணங்களும் தெளிவாக இருக்காது. ஒழுங்காக இருக்கும் உங்கள் படுக்கை அறையை சிறிது நாட்கள் ஒழுங்கில்லாமல் வைத்துப் பாருங்கள். நீங்களும் நிலை தடுமாறி மனக்கட்டுப்பாட்டை இழப்பது நிச்சயம். ஆகவேதான் வீட்டைத் துப்புரவாக வைத்திருப்பவர்கள் வாழ்விலும் வெற்றி அடைகிறார்கள்.

வாஸ்துவின்படி அமையாத வீடும் துப்புரவாக இருந்தால் நற்பயன்களைத் தரும்.

**வாஸ்து மற்றும் பெங்சுயி வல்லுனர்**
**- ஆர். வெங்கடேஷ்**




**Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi**

**Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.**

**Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.**

**Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)**

**Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)**



கலைஞர் அரசில்
இளைஞர் எழுச்சி
விளையாடி மகிழ்வோம்
ஒன்றுகூடி வாழ்வோம்
நாடு நலம்பெற உழைப்போம்
ரூ.20 கோடி
மதிப்பீட்டில் 8 ஆயிரம்
விளையாட்டு மற்றும்
உடற்பயிற்சி மையங்கள்.
சிகரங்களை நோக்கி
சிறகடிக்கும் வீரர்கள்
கிராமங்கள் தோறும் பயிற்சி
வெற்றிகளை குவித்திட முயற்சி

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2000 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka




# ''உஜாலாவின் உன்னத வெண்மை விஞ்ஞான ரீதியிலான சாதனை.''

INSTA-WHITENING SYSTEM

**ஜோ**தி லேபின் ஆய்வுக் கூடத்தில் தொடர்ந்து நன்கு சோதிக்கப்பட்டு வெற்றிகரமாக நிரூபிக்கப்பட்ட உஜாலாவின் இன்ஸ்டா வைட்னிங் சிஸ்டம் (I.W.S.)™ இது தண்ணீரில் உடனடியாகக் கரைவதோடு, துணிகளின் நுட்பமான நூலிழைகளிலும் ஆழ்ந்து ஊடுருவிவெண்மையின் வெளிச்சத்தை துணிகளில் உடனடியாய் வெளிக்கொணர்கிறது. துணிகள் மீண்டும் துவைக்கும்போது, அழுக்குடன் முழுவதும் வெளியே தள்ளப்பட்டு விடுகிறது. நாட்கள் பல ஆனாலும் துணிகளின் இயல்பான வண்ணம் மாறாமல் புதிது போலவே பாதுகாக்கிறது. ஸ்கின் இரிட்டேஷன்-ஓரல் டாக்சிசிடி சோதனைகளில் பாதுகாப்பானது என ஆதாரபூர்வமாக கண்டறியப்பட்ட தயாரிப்பு உஜாலா ஒன்றே.

1983 முதல் அனேக கோடி உள்நாடு-வெளிநாடு வாடிக்கையாளர்களுக்கு முழுதிருப்தியை உஜாலா வழங்கிக் கொண்டிருக்கிறது. பாரத நாடெங்கும் பல மாநிலங்களில் உள்ள ஜோதி லேபின் விஞ்ஞான தொழில் நுட்ப மேன்மை மூலம் கடும் தரக்கட்டுப்பாடு முறைகளால் தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு உஜாலாவும் உங்களை அடைகிறது.

**வி**ஞ்ஞான ஆதாரமற்ற முறையில், இரசாயன நிறுவனங்கள் தயாரிக்கும், நூலிழைகளை பலவீனப்படுத்தும், வண்ணம் குறைக்கும் மூலப்பொருட்கள் எதும் இதில் இல்லை. தரங்குறைந்த, கலப்பட இரசாயனக் கலவைகள் உங்களின் துணிகளுக்கு சேதம் ஏற்படுத்த இடம் அளிக்காதீர்கள்.

உஜாலா என கேட்டு வாங்கும் போது விஞ்ஞானபூர்வமற்ற ஏதேனும் ஒரு போலி தயாரிப்பை நீங்கள் பெறவில்லை என்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள்.




வெண்மையின் புதிய நிறம்

A product of Jyothy Laboratories Ltd.